Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

දිනමුරසු වාරමලර්

மே.22-28,1994 ரூபா 8/50

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 51



## அந்நியர் மண்ணில் எம்மவர் மோதல்கள்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

மதங்கள் வேறாய் இருந்தாலும்
மனித இரத்தம் ஒரு நிறமே!
மத உணர்வுகளை மதிப்போம்
மனித நேயம் வெல்ல உழைப்போம்!!

அன்புள்ளங்கள் அனைவருக்கும்
வெசாக் பண்டிகை
ஹஜ் பெருநாள் வாழ்த்துக்கள்!

இலக்கிய நயம்

மகாபாரதம்

## இலங்கைக்குப் படிப்பினையாகும் தென்னாபிரிக்க, இஸ்ரேல் அரசியல் மாற்றங்கள்!

அரசியல் அலசல்

வயது ஐந்து கொலைகள் மூன்று

சினிவிசிட்

ஸேல் ஸ்பெசல்

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தி...

## சோதனைகளா?

ஒவ்வொரு மனித வாழ்விலும் எத்தனையோ சோதனைகள். சோதனைகளால் ஏற்படும் மன வேதனைகள். மனம் என்ற சிறு பை பென்னம்பெரிய வேதனைகளை தாங்கிக்கொண்டுள்ளது. சோதனைகளில் வெற்றி பெற மாணவர்கள் இடைவிடாது படிக்கிறார்கள். சித்தியடைந்தால் மகிழ்கிறார்கள். தோல்வியடைந்தால் மன வேதனையில் தவிக்கிறார்கள். சோதனையில் வெற்றியும் தோல்வியும் படிக்கும் அளவினைப் பொறுத்தே ஏற்படுகிறது. சோதனைகளில் சித்தியடைய பலர் விழித்திருந்து படிப்பார்கள், பலர் இடைவிடாது படிப்பார்கள். சோதனையில் வெற்றி பெற்று மகிழ்வடைவார்கள்.

இதைப்போன்ற பலவித சோதனைகள் வாழ்விலே ஏற்படுகின்றன. இந்தச் சோதனைகளை மேற்கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும்? நீங்கள் சோதனைக்குட் படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள். (மத் 26: 41)

கெத்சமனே தோட்டத்தில் தான் ஜெபிக்க செல்லும் முன்பதாக இயேசு இவ்வாறு சீடர்களுக்கு கூறிவிட்டுச் சென்றார். சீடர்கள் நித்திரையடைந்தார்கள். நாமும் இப்படித்தான் இருக்கிறோம். ஆனால் நாம் செய்ய வேண்டியது என்ன? சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபிக்க வேண்டும். (1தெசலோனிக்கேயர் 5:17) கூறுகிறது- சோதனையில் வெற்றி பெற மாணவர் இடைவிடாது விழித்திருந்து படிப்பது போல நாமும் இடைவிடாது ஜெபம்பண்ணி, விழித்திருந்து ஜெபம்பண்ணி, எம் வாழ்வில் ஏற்படும் சோதனைகளை மேற்கொள்ள இறைதுணையை நாடுவோம்.

ஜே.புளோரன்ஸ்-கெங்கல்ல.

## ஆன்மீகம்



## திருமறை ஓதுவதின் ஒழுக்கம்

"சப்தமிட்டுக் குர்ஆன் ஓதுகிறவர் பகிரங்கமாக சதக்காச் செய்பவரைப்போன்றவராவார். மெதுவாக குர்ஆன் ஓதுகிறவர் இரகசியமாக சதக்காச் செய்பவரைப் போன்றவராவார்" என்று எம் பெருமானார் ரசூலே கரீம் (ஸல்) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

பிறருக்கு ஆர்வமூட்டுவதற்காக, அல்லது வேறு ஏதேனும் ஒரு நலனை நாடிச் சில சமயங்களில் பகிரங்கமாகச் சதக்காச் செய்வது சிறப்புக்குரியதாகும். பகிரங்கமாகச் செய்தால், முகஸ்துதி ஏற்பட்டுவிடும் என்ற சந்தேகமோ பிறரைக் கேவலப்படுத்துவதாக ஆகிவிடும் என்ற சூழ்நிலையோ ஏற்படும்போது இரகசியமாக சதக்காச் செய்வது சிறப்பிற்குரியதாகும்.

இவ்வாறே பிறருக்கு ஆர்வமூட்ட வேண்டுமென்பதற்காக சிலவேளை திருக்குர்ஆனை சப்தமிட்டு ஓதுவது சிறப்பிற்குரியதாகும். அதில் மற்றவர்கள் கேட்பதற்குரிய நன்மையும் உண்டாகிறது. மற்றவர்களுக்கு சிரமம் உண்டாகும் சூழ்நிலையோ, அல்லது முகஸ்துதி போன்ற தீமைகளோ ஏற்படும்போது மெதுவாக ஓதுதல் சிறப்பிற்குரியதாகும். இதனால்தான் இரண்டு விதமாக ஓதுவதற்கும் தனித் தனியான சிறப்புகள் கூறப்பட்டுள்ளன.

மெதுவாக ஓதுவதுதான் சிறப்பு என்று சொல்லக்கூடிய பலர், இமாம் பைஹகீ றஹ்மத்துல்லாஹி (அலை) அவர்கள் "ஷுஃபுல் ஈமான்" என்ற நூலில் அறிவித்துள்ள ஹதீஸை ஆதாரமாக காட்டுகிறார்கள். அதாவது "இரகசியமாக செய்யப்படும் அமல், பகிரங்கமாகச் செய்யப்படுவதைவிட எழுபது மடங்கு மேலானது" என்று அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள். ஒரு மனிதர் மஸ்ஜிதுந் நபவியில் சப்தமிட்டுக் குர்ஆன் ஓதிக்கொண்டிருப்பதைக் கேட்ட உமருப்னு அப்துல் அஸீஸ் (றழி) அவர்கள் "நீர் அல்லாஹ்விற்காக ஓதுவீரானால் மெதுவாக ஓதவும். மனிதருக்கு தெரிவிக்க ஓதுவீரானால் நீர் ஓதுவது வீண் வேலையாகும்" என்று கூறினார்கள்.

கவிப்பிரியா நிஷா-வெல்லம்பிட்டிய.

## முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
கவிதைப் போட்டியில் காட்டிவரும்
இனிய ஆர்வமும்-ஈடுபாடும்
வந்து குவியும் கவிதைகளும்
சிறந்தவற்றை தெரிவு செய்வது
எப்படி என்று திகைக்க வைக்கின்றன.
ஏனெனில்-
அநேகமாக அனைவருமே
சிறப்பாக எழுதி வியக்க வைக்கிறீர்கள்!

தேன் கிண்ணத்திற்கும் நிறைய கவிதைகள்
தேடி வந்து தங்களையும் சேர்க்கும்படி
தினமும் தீராத கோரிக்கை விடுக்கின்றன.

சிறப்பாகவும், செழிப்பாகவும் எழுதுவோரை
ஊக்குவிக்கவும், உற்சாகம் கொடுக்கவும்
தொடர்ந்து சில முரசுகளில்
அவர்கள் ஆக்கங்களுக்கு இடம் தரப்படுகிறது.

புதியவர்களை பொலிவானவர்களாக
மாற்றிடவும், வளர வகை செய்திடவும்
முரசு முதன்மையான கவனம் கொள்ளும்.

முரசில் ஆக்கங்கள் படைக்கும்
எழுத்தாளர்களது முகவரி கேட்டு
பலர் மடல் எழுதியிருக்கிறீர்கள்.
எந்த எழுத்தாளரோடு
உங்கள் விமர்சனங்கள் பகிர விருப்பமோ
அந்த எழுத்தாளரது பெயரோடு
முரசின் முகவரிக்கு
மடல் வரையுங்கள்- அது
அவர்கள் கரம் சென்று சேரும்.

■

முரசில் 'ஏகன் அநேகன்'
என்ற புனைபெயரில் அஸ்வதி
முன்னர் எழுதிய கதை ஒன்று
வேறு பெயரில் மற்றொரு பத்திரிகையில்
பிரசுரமாகியிருப்பதை
வாசகர் பலர் சுட்டிக்காட்டியிருந்தனர்.
தனது நண்பர்கள் சிலர் செய்த தவறு என்று
முரசு வாசகர்களிடம் மன்னிப்பு கேட்டு
அஸ்வதி மடல் அனுப்பியிருக்கிறார்.
இயலுமானவரை இத் தவறுகளை
முரசோடு தொடர்புடைய எழுத்தாளர்கள்
தவிர்த்துக்கொள்வது நல்லது.

■

தென்னிலங்கை அரசியல் வானில்
சில நட்சத்திரங்கள் ஒளியிழந்திருக்கின்றன.
புதிய நட்சத்திரங்கள்
ஆரவாரமாக அறிமுகம் செய்யப்படுகின்றன.

ஆளும் கட்சி-
அடுத்த தேர்தலுக்கு களத்தில் இறங்க
உடைவாளை சாணை பிடித்துக்கொண்டிருக்கிறது.
எதிரணிகளோ
உடைவாளை உருவிக்கொண்டு
மோதலுக்கு தயாராக முன்னே வந்துவிட்டன.

சந்திரிக்கா அலையில் கலந்து
வெற்றிக் கரையை முத்தமிட்டுவிடலாம்
என்று எதிரணிகள் நம்பிக்கொண்டிருக்கின்றன.

திருமதி சந்திரிக்கா அவர்களோ
இனப்பிரச்சனை விடயத்திலும்
பொருளாதாரக் கொள்கை விடயத்திலும்
இதுவரை-
தெளிவான கருத்து சொல்லவில்லை.

ஆட்சி மாறினால்-
அரசியல் தீர்வு அருகே வரும்
என்று-தமிழ் பேசும் மக்கள்
எப்படித்தான் நம்பமுடியும்?
நம்பச் சொல்கிறார்கள்;
நம்பும்படி நடக்க மறுக்கிறார்கள்.

ஆளும் கட்சியும்
பெரும்பான்மை மக்களைத் திருப்தி செய்ய
தினம் ஒரு அறிவிப்பு
செய்து கொண்டிருக்கிறது.
ஆனால்-அரசியல் தீர்வு பற்றி
சிந்தித்து செயல் வடிவம் தருவதற்கு
உருப்படியான முயற்சிகள் தெரியவில்லை.

வெளிவிவகார அமைச்சர் ஹமீட்
விரைவான அரசியல் தீர்வு வேண்டும்;
தேசியக் கட்சிகள் சேர்ந்து முயலவேண்டும்
என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

அனுபவமுள்ளவர் என்பதால்
அவருக்கு அரசியல் தீர்வின் அவசியமும்,
வெளிவிவகார அமைச்சராக இருப்பதால்
இனப்பிரச்சனை இழுபட்டுச் செல்ல,
வெளியுலகில் நமக்குள்ள வெட்க நிலையும்
விளங்கிக்கொண்டு பேச முடிகிறது.

விளங்கிக்கொள்ள வேண்டியவர்களுக்கு
விளங்காமல் போவதுதான் வேதனை.
மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
-ஆசிரியர்-

## தினமுரசு போன்: 820265

### கவிதைப்போட்டி இல-48

களம்தேடி வந்த கவிதைகளில்
வெற்றிமுகம் கண்டதுவும், வியக்கப்பட்டவையும்.

**பரிசுக்குரிய கவிதை**

**ஒட்டகமா நீயிங்கு?**

புத்தரைத்துதி பாடும்
இத்தரையா இன்றுன்னை,
ஒட்டகமாய் ஆக்கியிங்கு
ஓங்காரம் இசைக்கிறது?

க.சுசிலா
கல்லடி வேலூர்-மட்டக்களப்பு.

**வியக்கப்பட்டவை**

**இன்றைய வாழ்வு**
வான்மீது போனதாயே
மண் மீது பாரம்மா
தோள்மீது சுமைகொண்டு
போர் வாழ்வு போகுதம்மா.
தெ.லோஜனா-கொழும்பு-15.

**தவிப்பு**
இக்கரைக்கு அக்கரை-என
எவ்விடம் செல்லினும்
வந்திடுமோ சென்றமைதி?
ஜோசில் ஜெயமாறன்-திருமலை.

**நோக்கம்!**
செல்வழியும் தோள்வலியும்
பிஞ்சுமகன் மனவலியோ?
எம்.எம்.ஹாலீத்-ஏறாவூர்-03.

**சோகச்சுமை**
கோரக்
குணங்களெல்லாம்
மாயும்வரை-உன்
சோகச் சுமைகளெங்கே
தீர்ந்து போகும்?
ஏ.அஹ்மது ஜுனைது
ஏறாவூர்-06.

**நோக்கு!**
எதிர்காலம் முன்னே!
நிகழ்காலம் பின்னே!
அ.மு.அ.யசீர் அரபாத்
ஏறாவூர்-02.

**எவ்வளவு காலம்?**
தீவே!தீவே!!
உன் நிம்மதி போலவே
இன்னும் எவ்வளவு காலம்
தெருவில் விடுவாய்
இப்படி எங்களை...
விஜித்தா செல்வநாயகம்
மண்டூர்.

**இது!**
சமாதான தேசம்
தேடி
நான் செல்லும்
சாத்வீக யாத்திரை
அ.ஆனந்தக்குமார்
கல்முனை-01.

**போருக்குத் தடை**
மனிதாபிமானமற்ற
துப்பாக்கி ரவைக்கு
இம்மண் மூட்டை
குறுக்குச் சுவரா?
கௌரி சீனித்தம்பி
அக்கரைப்பற்று-07.

**எங்கே நிம்மதி?**
நிம்மதியுடன்-ஒரு
மூச்சுவிட
போர் இல்லா ஊர் உண்டோ
பாரில்?
பெ.ஜெயசீலி-திருமலை.

**கலியுக வாழ்க்கை**
இதயச்சுமை
ஒரு புறம் வதைக்க
முதுகுச் சுமை
மறுபுறம் கனக்க
என்னில்
இன்றைய மானுடத்தின்
நிலை காணீர்.
சுப்பிரமணியம் வாணீஸ்வரி
அப்பர் கலஹா.



**தேசத்தின் சுமை!**
ஆயுத நச்சரிப்பு
நேயத்தின் நஞ்சானது!
அனாதை வாழ்வுதான்
தேசத்தின்
சுமையானது!
அ.குமணன்-கல்முனை.

**பாலகன்**
போரில்லாத இடம்தேடி
பாரெல்லாம் அலையும்
பாலகன்.
த.ஜெயப்பிரபா
தம்பிலுவில்-02.

**விதி செய்த சதி**
விதி செய்த போராலே
பதியிழந்த அன்னைக்கு
கதி ஒன்றும் இல்லையென்று
பொதி சுமக்க வந்தாயோ.
கா.யோகேந்திரன்
ஆரையம்பதி-02.

**போவதெங்கே?**
போரின் தாக்கத்தால்
பொலிவிழந்த
மண்ணைவிட்டு
பொதியோடு கண்ணே நீ
போவதெங்கே
என்னைவிட்டு!
லேகா-கொழும்பு-13.

**பிரார்த்தனை**
தாண்டிக்குளம் தாண்ட முதல்
வேண்டிக்கொள் இறைவனிடம்
ஊரைச் சென்றடையும்வரை
உயிரோடிருக்க
வேண்டுமென்று!
கவிதா ராஜரட்ணம்-கண்டி.

**அவலச்சுமை**
என்
தேசத்தின் அவலங்கள்
நெஞ்சை அழுத்துகையில்
இச்சுமைதான் ஒரு பொருட்டோ!
சித்ராஞ்ஜனி தாமோதரம்பிள்ளை-கண்டி.

**தேசத்தின் கொடுமை**
வயிறும் பசிக்குதம்மா,
முதுகும் வலிக்குதம்மா
வடக்கிலே பிறந்ததினால்
வாழ்க்கை இதுதானா?
எஸ்.புகர்தீன்-புத்தளம்.

## கவிதைப் போட்டி இல-51



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=.

**அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 28.05.1994.**

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 51
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5

## வாசகசாலை

முரசே,
வெள்ளி விழா மலருடன் ரசிகன் எழுதிய குறு நாவல் புத்தகத்தை வாசகர்களாகிய எமக்கு பரிசளித்தீர்கள்- நன்றி. பொன் விழா மலருடன் அப்படியொன்றும் வேண்டாம். ரசிகன் என்ற பெயரில் முரசில் ஆக்கங்கள் எழுதி வரும் அந்த மர்ம எழுத்தாளர் ரசிகனை அறிமுகப்படுத்தி விடு. அதுவே போதும் நமக்கு.

மொஹமெட் நஸான்-அக்குறணை.

□□

முரசே, உனக்கு நான் முதன் முதலாய் வரையும் கடிதம். உன்னை நான் காண என்னூரிலிருந்து 8 மைல் (கல்முனை) போக வேண்டும். எனவே என்னருகில் நீ இருந்தால் எல்லையில்லா இன்பம் நான் அடைந்திடுவேன். எனவே என்னூரில் உன் வருகைக்காக காத்திருக்கும்-அன்பன்

எஸ்.சிவநாயகம்-களுவாஞ்சிகுடி.

□□

ஏய்! தினமுரசே, என் தலையிலுள்ள கட்டுகளை பார்த்தீரா? என்ன கட்டு தெரியுமா? உனக்காக எனது அண்ணனுடன் நான் சண்டையிட்டதால் ஏற்பட்ட காயம். நல்லவேளை இந்தக் காயம் வராவிட்டால் நீ என் கைக்கு பிந்தியே கிடைத்திருப்பாய். ஆனால் நீ எனக்கே முந்தி கிடைத்து விட்டாய்! எனக்கேற்பட்ட காயத்தின் வலி வழி தெரியாமல் போய்விட்டது. பார்த்தாயா உன் மகிமையை!

கலைச்செல்வி ஜியா-
அட்டாளைச்சேனை.

□□

அன்பின் முரசே!
வியக்கத்தக்க செய்திகளை வாரம் தோறும் வாரித் தந்து எம்மை வியப்பின் விளிம்பிற்கே கொண்டு செல்கிறாய். புத்தம் புதிதாய் நித்தம் நீ தரும் தித்திக்கும் ஆக்கங்கள் எண்ணிலடங்கா. அற்புதன் வழங்கும் நில்! கவனி!! முன்னேறு!!! முரசின் வாசகர்களுக்கு நீ தரும் இலவச டானிக்கா??? உன் நீடூழி வாழ்வுக்கு இனிய வாழ்த்துக்கள்!

எஸ்.தாஜுன் நிஸா றஹ்மான்-பிலியந்தலை.



என் அன்பான முரசே,
உன் இதழ்களில் வரும் அனைத்து அம்சங்களுமே சுவையானவை. ரசிகனின் கொலை விழும் நேரம், இலக்கிய நயம், தேன்கிண்ணம், சிறு கதைகள் இன்னும் எவ்வளவோ அம்சங்களை வாரி வழங்கும் உனக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

செல்வி எம்.உமா-பசறை.

□□

அய்யாத்துரையின் கவனத்திற்கு,
அதிரடி அய்யாத்துரையார் ஒவ்வொரு வாரமும் கூறும் சித்தர், பட்டிணத்தார் கவிதை வரிகள் இக்காலத்து பெடியள் பெட்டைகளுக்கு பிடிக்கவில்லையாம். ஆதலால் நல்ல வைரமுத்துவின் காதல் வரிகள் இரண்டை எடுத்து விடுங்கோவன் பாப்பம்.

ம.ராஜேஸ்,றைகம-இங்கிரிய.

□□

அன்பின் முரசே,
வாரம் தோறும் நீ அள்ளித்தரும் அனைத்து அம்சங்களையும் கண்டு என் மனம் பூரிப்படைகிறது. உன் அங்கங்கள் அனைத்தும் ரசிக்கத்தக்கவை. ரசிகனின் கொலை விழும் நேரம் பிரமாதம். உன் பணி தொடர வாழ்த்தும் பலகோடி இரசிகர்களில் ஒருத்தி.

உதயகுமார் அல்றீனா-மூதூர்.

□□

யோவ், ரசிகனே, என்னாய்யா நீர்? கண்ணே மதுமிதாவில்தான் ரம்யாவை சாகவைத்தீர். ஏனுய்யா...மறுபடியும் மறுபடியும் கொலை, கொள்ளை, சஸ்பென்ஸ்... எல்லாம். பேசாம ஒரு சமூகக் கதைய தாருமய்யா.

ரசிகை-இக்கிரிகொல்லாவை.

□□

எனது இனிய முரசே!
தினம், தினம் உன்முகம் நினைவினில் வருகுது முரசே, நெஞ்சத்தில் போராட்டம் - போராட்டம். உன்னை எண்ணி நானும், என்னை எண்ணி நீயும், ஒரு வாரம் காத்திருக்க வேண்டி உள்ளதே என் குயிலே.

எம்.எ.சமூன் 75010-பாரிஸ்.

□□

எழில் கொஞ்சம் தேன் முரசே!
உன் இருபது பக்கங்களும் அற்புதமானவை. அவ்வப்போது நடைபெறும் நிகழ்ச்சிகளை பக்க சார்பில்லாமல் ஆணித்தரமாக எடுத்துக்கூறுவதில் நிகர் உனக்கு வேறு யாருமில்லை. உன் பக்கங்களில் சிலவற்றைக் கைப்பற்றியிருக்கும் எக்ஸ்ரே ரிப்போர்ட், அரசியல் அலசல், தகவல்பெட்டி, மருத்துவ விந்தை, தேன் கிண்ணம், ரசிகன் தரும் கொலை விழும் நேரம், இலக்கிய நயம் என்பன என் இதயத்தையும் கைப்பற்றிக் கொண்டவைகளாகும்.

ஏ.எம்.எம்.சறாப்தீன்-கிண்ணியா-05.

□□

தித்திக்கும் தேன் சுவையை தேசமெங்கும் சுமந்து வந்து தித்திக்க வைக்கும் தினமுரசே, நீ வாரம் ஒரு முகத்துடன் பொலிவு பெறும் காட்சி கண்டு மகிழ்கிறேன். இருந்தும் என் அபிமான நடிகர் கார்த்திக்கின் முகத்தையும் சேர்த்துக்கொள்.

ராஜ்குமார் தங்கத்துரை-அவிசாவளை.

என் அபிமான தினமுரசே!
உனக்கு என் புத்தாண்டு வாழ்த்துக்கள் சகல அம்சங்கள் கொண்ட தினமுரசை தவறாது பார்ப்பவர்களில் நானும் ஒருத்தி! உங்கள் பத்திரிகையில் நான் எதிர்பார்க்கும் அம்சம் இடம்பெற வில்லையே ஏன்? ஒரு கர்ப்பம் ஏற்பட்ட பெண் என்ன முறையாக இருக்க வேண்டும்? என்னென்ன உணவு முறைகளை உட்கொள்ள வேண்டும்? என்பதனை என் அபிமான தினமுரசு மூலம் பதிலை எதிர்பார்க்கின்றேன்.

றீட்டாராணி சிவாஜிராஜா-கொழும்பு-14.

# இலங்கைக்கு ஆயுத விற்பனை வேண்டாம்! இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு வேண்டும்!!

## பிரிட்டனில் உள்ள நான்கு அமைப்புக்கள் தீர்மானம்

பிரிட்டனில் உள்ள நான்கு அமைப்புக்கள் இம்மாதம் பதினொராம் திகதி பிரிட்டிஷ் பிரதிநிதிகள் சபையில் கூட்டம் ஒன்றை நடத்தியுள்ளன.

இலங்கையில் மனித உரிமைகள் என்னும் விடயம் பற்றி அக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இலங்கையில் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கான அமைப்பு, இலங்கையில் ஜனநாயகத்துக்காக குரல் கொடுப்போர், இலங்கையில் ஜனநாயகத்துக்கும், நீதிக்குமான குழு, பன்னாட்டு தமிழ் நிறுவனம் ஆகிய நான்கு அமைப்புக்கள் அக்கூட்டத்தில் கலந்துகொண்டன.

இலங்கையைச் சேர்ந்தவர்களான சிங்கள, தமிழ், முஸ்லிம் பிரமுகர்கள், பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் பிரிட்டிஷ் பிரஜைகளான ஜனநாயக இயக்க வாதிகள் ஆகியோர் அந்த அமைப்புக்களில் உறுப்பினர்களாக உள்ளனர்.

அந்த நான்கு அமைப்புக்களும் ஒன்றுகூடி இலங்கை அரசுக்கும், இலங்கை அரசுக்கு உதவி வழங்கும் நாடுகளுக்கும் பின்வரும் கோரிக்கைகளை விடுத்துள்ளன:

1. தமிழ் மக்கள் மீது குண்டு பொழிவதையும் பீரங்கி வேட்டுக்களைத் தீர்ப்பதையும் நிறுத்த வேண்டும். வடக்கு கிழக்கில் உள்ள மக்களுக்கு போதுமான மருத்துவ உதவிகள் மற்றும் உணவுப் பண்டங்களை அனுமதிக்க வேண்டும்.
இனப்பிரச்சனைக்கு அமைதியுடன்கூடிய அரசியல் தீர்வுக்கான நம்பிக்கை தரும் நடவடிக்கைகளை உடன் ஆரம்பிக்க வேண்டும்.
2. விசாரணைகளெதுவுமின்றி 1989 முதல் தடுத்து வைத்துள்ள ஆயிரக்கணக்கானோரை விடுதலை செய்ய வேண்டும். தினசரி கட்டுப்பாடெதுவுமின்றி கைது செய்வதையும் சித்திரவதை செய்வதையும் நிறுத்தி, சட்ட ஒழுங்கினை நிலை நிறுத்த வேண்டும்.
3. ஆயிரக்கணக்கில் காணாமற் போனவர்கள், அண்மையில் புதைகுழிகளில் கண்டெடுக்கப்பட்ட பிரேதங்களின் விபரங்கள் ஆகியவற்றின் பட்டியல் வெளியிடப்பட வேண்டும்.

தமது மேற்கண்ட கோரிக்கைகள் இலங்கை அரசால் நிறைவேற்றப்படும்வரை அகதிகள் நாடு திரும்புவதை அங்கீகரிக்கவோ அல்லது அதற்கான நடவடிக்கைகளுக்கு உறுதுணை புரியவோ வேண்டாம் என்று அந்த நான்கு அமைப்புக்களும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்திடம் (யூ.என்.எச்.சி.ஆர்) கோரிக்கையும் விடுத்துள்ளன.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளுக்கும் பின்வரும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன:

ஆயுதங்களையோ, சித்திரவதைகளுக்கான உபகரணங்களையோ இலங்கைக்கு விற்பனை செய்யக்கூடாது.

இலங்கை மக்களது தேவைகளுக்காக வழங்கப்படும் உதவிகளை அரசியல் கட்சிகளுக்காகவோ, அல்லது இராணுவ நடவடிக்கைகளுக்காகவோ பயன்படுத்தாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

## அலுவலகங்களை புலிகள் மூடவேண்டும்
### ஐரோப்பிய பாராளுமன்றம் அறிவிப்பு

ஐரோப்பிய நாடுகளின் பாராளுமன்றம் என்பது ஐரோப்பிய அங்கத்துவ நாடுகளைக் கொண்ட பொது அமைப்பாகும்.

பிரான்சில் உள்ள ஸ்றாஸ்பூர்க்கை தலைமையகமாகக் கொண்டு ஐரோப்பிய பாராளுமன்றம் இயங்கி வருகிறது.

சமீபத்தில் ஐரோப்பிய பாராளுமன்றம் தனது அங்கத்துவ நாடுகளில் உள்ள புலிகள் அமைப்பின் அலுவலகங்கள் மூடப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது.

இக்கோரிக்கை நடைமுறைப்படுத்தப் படுமானால் ஐரோப்பிய நாடுகளில் புலிகள் அமைப்பினரின் நடவடிக்கைகள் பின்னடையக் கூடும் என்று நம்பப்படுகிறது.

## மாற்றுக் கருத்துக்களுக்குப் படுகொலைகள் தீர்வாகாது!
### "சபாலிங்கம் கொலை" கண்டனக் கூட்டத்தில் உரை

"எதிர்க் கருத்துக்களைக் கொண்டவர்களோடு கருத்து ரீதியாக மோதிக்கொள்ளுவதே உலக நாகரிகம். அதை விடுத்து, பேனாவைத் தங்கள் கரங்களிற் கொண்டவர்களைத் துப்பாக்கிகளால் படுகொலை செய்வது தர்மத்திற்கு முரணானதும், கண்டிக்கப்பட வேண்டியதுமாகும்."

இவ்வாறு கனடாவில் ரொறண்டோவிலுள்ள "தேடகம்" கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கண்டனக் கூட்டமொன்றிற்குத் தலைமை வகித்து உரையாற்றிய திரு. ஜயகரன் தெரிவித்தார். அண்மையில் பாரிஸ் நகரிற் கொலை செய்யப்பட்ட ஈழத்தவரான சபாலிங்கத்திற்கு அஞ்சலி செலுத்து முகமாகவும், அக் கொடூரச் செயலுக்குக் கண்டனம் தெரிவிக்குமுகமாகவும் இடம்பெற்ற இக்கூட்டத்திற்கு நூற்றுக் கணக்கானவர்கள் வருகை தந்திருந்தார்கள். அங்கு உரை நிகழ்த்திய திரு.ஜயகரன் தொடர்ந்து பேசும்போது;

"எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் பல புத்தி ஜீவிகளை நாங்கள் இழந்துவிட்டோம். அவர்கள் திட்டமிட்டுக் கொலை செய்யப்படுகின்றார்கள்.

"இத்தனைக்கும் அவர்கள் தங்கள் எழுதும் பணியை மேற்கொண்டதுதான் குற்றமா? எமது தாயகத்தில் நிகழ்ந்த அரசியற் படுகொலைகள் ஏராளம். அவைகளின் பாதிப்பினால் புலம்பெயர்ந்த நாடுகளில் குடியேறியுள்ள எம் மக்கள், இங்கும் இவ்வாறான கொடூரச் செயல்கள் இடம்பெறுவதனால், திகைப்பிற்குள்ளாகியிருக்கின்றார்கள். இவ்வாறான கொலைகளினால் எதையாவது சாதித்துவிட முடியும் என எண்ணுகின்றவர்கள், மக்களையும் தவறான வழிகளிற் திசை திருப்புகின்றார்கள். இந்நிலை மாற வேண்டும். எதிர்த்துக் கருத்துக்களுக்கு மதிப்பளிக்க வேண்டும்" என்றார்.

திரு.சிவானந்தன், திரு.சபேசன், திரு.மலையன்பன், பாமதி ஆகியோரும் உரையாற்றினார்கள். இறுதியில், கலந்துரையாடலும் இடம்பெற்றது. இதே வேளை, உலகில் பல நாடுகளிலிருந்தும் பல்வேறு தமிழர் அமைப்புக்களால் கொலைக்கு கண்டனம் தெரிவித்துப் பிரசுரிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்களும் அங்கு விநியோகிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## முஸ்லிம்களின் தேவை ஒன்றுபட்ட தலைமை!
### பேராசிரியர் இப்றாஹீம்

"முஸ்லிம் சமூகத்தின் இன்றைய தேவை ஒன்றுபட்ட தலைமைத்துவமாகும்." இவ்வாறு பேராதனை பல்கலைக்கழக அரபுத்துறை பேராசிரியர் இப்றாகிம் தெரிவித்துள்ளார்.

கடந்த 14.5.94 அன்று கொழும்பு பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற முஸ்லிம் சமூகத்தின் பிரச்சனைகள் பற்றிய கலந்துரையாடலில் பேசும்போதே அவர் அவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் அங்கு பேசும்போது:

"கட்டுப்பாடும், ஒழுங்கும் சரியான தலைமைத்துவமும் இல்லாத சமூகமாக முஸ்லிம் சமூகம் இருக்கிறது.

"கடந்த மூன்று வருடத்திற்கு மேலாக ஒரு இலட்சத்திற்கும் அதிகமான முஸ்லிம் மக்கள் அகதிகளாய் உள்ளனர். இவர்களுடைய பிரச்சனைகள் எந்த மட்டத்தில் பேசப்பட்டன? எமது இன்றைய தலைமைகளால் இதற்கு தீர்வு காண முடிந்ததா?

"எமது அரசியல்வாதிகளுக்கு ஆயிரம் பிரச்சனைகள் உண்டு. ஆகவே நமக்கு தலைமை தாங்கக்கூடிய ஒரு தலைமையை நாம் ஏற்படுத்த வேண்டும். எமது பிரச்சனைகளை எமக்கு நியாயமாகவும், மற்ற இனத்தை பாதிக்காத வகையிலும் நாம் தீர்க்க வேண்டும்." என்றும் அவர் தெரிவித்தார்.

கலந்துரையாடலுக்கு முகமது சமீம் தலைமை தாங்கினார்.

## மூன்று இலட்சத்திற்கு விலை பேசப்பட்ட சிலை!
### கையும் களவுமாக மடக்கினார்கள் கண்டிப் பொலிசார்
### உரிமையாளர்கள் யார் என்று தெரியவில்லை

(கண்டி நிருபர்)

இது 22 அங்குலம் உயரமுடைய ஸ்ரீ செல்வவினாயகர் சிலை. கண்டி பொலிசார் இந்தச் சிலையைக் கைப்பற்றியுள்ளனர். மத்திய பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் இது இப்பொழுது பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.



இந்தச் சிலை 40 கிலோ பாரமானது. வெண்கலம் போன்ற உயர் உலோகத்தினாலானது. பொலிசார் இந்தச் சிலையை கண்டி உடுநுவரை ரங்கம என்னும் இடத்தில் - உலோக வேலை செய்யும் ஒருவரின் அறையில் இருந்து கடந்த 6.5.94ல்- பொலிசாருக்குக் கிடைத்த துப்பு ஒன்றின் மூலம் இதனைக் கைப்பற்றினர். அதனை வைத்திருந்தவர் இப்பொழுது கண்டியில் விளக்குமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

1985ம் ஆண்டு அநுராதபுரத்தில் வீதி வழியாக உரச் சாக்கு ஒன்றில் போட்டுக் கொண்டு சென்று நடந்த ஒருவரிடம் இந்தச் சிலையை தற்பொழுது விளக்கமறியலில் இருப்பவர் 225/= ரூபா கொடுத்து வாங்கியுள்ளார். வாங்கியவரிடம் இருந்து மற்றும் ஒருவர் இரண்டு இலட்சம் ரூபாவுக்கு வாங்கிக்கொள்வதாக பேரம் பேசினார். மூன்று இலட்சம் தந்தால் தரலாம் என்றார் அவர். இதற்கிடையில் எப்படியோ பொலிசாருக்குக் கிடைத்த துப்பு ஒன்றினால் உடுநுவரை நபர் சிலையோடு வகையாக மாட்டிக்கொண்டார். எமது நிருபர் இந்தச் சிலையைப் படம் எடுத்த வேளையில்-

"மிகப் பெறுமதியான அழகு வாய்ந்த இந்தச் சிலை தமிழ்நாட்டின் வார்ப்பாகும். எனவே முடியுமானால் பத்திரிகை மூலம் இதனைக் காட்டி இந்தச் சிலைக்கு உரித்துடையவர் யார்? அல்லது எந்தக் கோவிலுக்குச் சொந்தமானது? என்ற விபரங்களை நாம் அறிய வேண்டுமாதலால் பொதுமக்களின் ஒத்துழைப்பு எமக்குத் தேவைப்படும்", என்று இதுபற்றி விசாரணை செய்யும் சிரேஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் 'முரசு' நிருபரிடம் கேட்டுக்கொண்டார். அடையாளம் காண்பதற்கு கண்டி பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தை எவரும் நாடலாம். இதனோடு புத்தர் சிலை ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. அதுவும் இங்கேதான் உள்ளது.

## தமிழ் அமைப்புக்கள் ஏன் மௌனம்?

பிரான்சில் மே மாதம் முதலாம் திகதி சுட்டுக்கொல்லப்பட்ட இலங்கைத் தமிழரான எஸ்.சபாலிங்கத்தின் அஞ்சலிக்கூட்டங்கள் பிரான்சிலும், கனடாவிலும் நடைபெற்றுள்ளன.

சீனாவின் செய்தி நிறுவனமான 'ஸிங்ஹீவா' சபாலிங்கம் கொலைக்கு புலிகள் அமைப்பே காரணம் என்று தெரிவித்துள்ளது.

சபாலிங்கம் கொலையை அடுத்து வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ள இலங்கையைச் சேர்ந்த எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், இலக்கியவாதிகள் ஆகியோர் மத்தியில் பதட்டமான நிலை ஏற்பட்டுள்ளது.

ஜேர்மனி, சுவிஸ், நோர்வே, கனடா, பிரிட்டன் போன்ற நாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்களால் வெளியிடப்படும் சஞ்சிகைகளும், மனித உரிமை அமைப்புக்களும் சபாலிங்கம் படுகொலையை கடுமையாகக் கண்டித்துள்ளன. பிரசுரங்களும் வெளியிட்டுள்ளன.

இலங்கையில் உள்ள பக்கச் சார்பற்றதாக கூறும் பத்திரிகைகளோ, அல்லது ஜனநாயக பாதைக்கு வந்துள்ளதாகக் கூறும் தமிழ் அமைப்புக்களோ சபாலிங்கம் கொலை பற்றி மௌனம் சாதித்துள்ளமை வேதனைக்குரியது என்று பிரான்சில் உள்ள சபாலிங்கம் நண்பர்கள் வட்டத்தைச் சேர்ந்தவர்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.



எஸ். சபாலிங்கம்

படுகொலையான எஸ்.சபாலிங்கம் பற்றி சில குறிப்புக்கள் கீழே:

- தமிழ் மாணவர் பேரவையின் ஆரம்பகால உறுப்பினர்.
- ஈழப் போராட்டத்தின் முதற் குரலாக வெளிவந்த 'காவலன்' பத்திரிகையின் ஆசிரியர்களுள் ஒருவர்.
- தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் பங்கெடுத்ததின் காரணமாக சிறைக்கொடுமைகளை அனுபவித்தவர்.
- பிரான்ஸிற்கு அகதியாக இடம்பெயர்ந்த பின்னரும் சமூகப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்தவர்.
- பிரான்ஸில் முதற் தமிழ் சஞ்சிகையின் தோற்றத்திற்கான முன்னோடி.
- தலை சிறந்த ஆவணச் சேகரிப்பாளர்.
- இறக்கும்வரை மனித உரிமை மீறல்களுக்கெதிரான அமைப்புகளுடன் தொடர்புகளை வளர்த்து வந்ததுடன் அதற்கெதிராக தீவிரமாக உழைத்தும் வந்தவர்.
- காலத்தின் தேவையை அறிந்து, பிரான்ஸில் 'ஆசிய வெளியீட்டு நிறுவன'த்தை நிறுவி அதனூடாக புதையுண்டு கிடந்த வரலாறுகளை வெளிக்கொணர முயற்சித்ததோடு ஈழத்துப் படைப்பாளிகளை ஊக்குவித்தும் வந்தவர். போர்க்கால புகலிட இலக்கிய வளர்ச்சிக்கு உரமூட்ட முனைந்தவர்.

'ஓசை' காலாண்டிதழின் இடைவெளி அதிகம். அதனை மாத இதழாக்க வேண்டுமென்ற அவாவோடும் துடிப்போடும் செயலாற்றி வந்தவர்...

- பெருகிவந்த எழுத்தாளர் தொடர்புகள்-வேண்டுகோள்களுக்கிணங்க இந்த ஆண்டு முடிவதற்குள் ஆறு நூல்களாவது 'ஆசியா'வுக்கூடாக வெளியிட்டு தமிழ் உலகிற்கு தன்னால் முடிந்தளவு பங்களிப்பை ஆற்ற பேரவாவோடு திட்டமிட்டு வேகமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தவர்.

## மோட்டார் சைக்கிளை பறிகொடுத்த கதை
### பிரதேச சபை உறுப்பினரின் அனுபவம்!

-நிந்தவூர் நிருபர்-

அம்பாறை மாவட்டத்திலுள்ள பாதுகாப்புப் படையினரின் வீதித்தடைச் சோதனை நிலையங்களில், புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதேச சபைகளின் உறுப்பினர்கள் அவமதிப்புக்குள்ளாவதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இந்த உறுப்பினர்களுக்கு சில சோதனை நிலையங்களில் உரிய கௌரவத்தையோ, கண்ணியத்தையோ அளிப்பதில்லையெனவும் கூறப்படுகின்றது.

"நீங்கள் என்ன எம்.பீ.க்களா?" என்றும் சில பொலிசார் பிரதேச சபை உறுப்பினர்களைப் பார்த்துக் கேட்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சமீபத்தில் நடைபெற்ற சம்மாந்துறை பிரதேச சபையின் மாதாந்த செயலமர்வின்போது இரு உறுப்பினர்கள் மேற்படி நிலமை தொடர்பாகத் தமக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பிரஸ்தாபித்து கவலை தெரிவித்தனர்.

உறுப்பினர் ஜனாப்.எஸ்.நபீர் (மு.கா) உரையாற்றுகையில், "நான் இன்று பிரதேச சபை செயலமர்விற்கு வந்து கொண்டிருக்கும் போது சவளக்கடையில் வைத்து அதிரடிப்படையினர் வழி மறித்து எனது மோட்டார் சைக்கிளைக் கேட்டனர். நான் பிரதேச சபை உறுப்பினர், செயலமர்விற்குப் போகிறேன் என்றும் அவர்கள் சைக்கிளை வாங்கிச் சென்றனர். நீண்ட நேரம் காத்து நின்று பின்னர் பத்து மணிக்குத் தான் இங்கு வந்தடைய முடிந்தது. எனவே உடனடியாக எம்மை பிரதேச சபை உறுப்பினர்கள் என அடையாளப்படுத்தும், அடையாள அட்டைகளைப் பெற்றுத்தரவேண்டும்" என்றார்.

## கும்பாபிஷேகம்

நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள கந்தப்பளையில் பார்க் தோட்ட ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 29.05.94 ஞாயிற்றுக்கிழமை பகல் 10.15 மணிக்கு நடைபெறும். அன்று அன்னதான வைபவமும் நடைபெறும். கிரியை காலங்கள் 27.05.94 வெள்ளிக்கிழமை துவங்கி 48நாள்வரை மண்டலாபிஷேகம் நடைபெறும். இதில் தோட்ட மக்களும் கந்தப்பளை கடை வீதி வர்த்தகர்களும், சைவ அபிமானிகளும் பங்குபற்றி கும்பாபிஷேகத்தை சிறப்பிப்பார்கள்.

## திருமலை தமிழ் தினப் போட்டிகளும் தடுமாறித் தவறுசெய்த நடுவர்களும்!

( திருகோணமலை நிருபர்)

திருகோணமலை கோட்டப் பாடசாலைக்கு இடையிலான தமிழ்தினப் போட்டியில் நடுநிலையாளர்களின் தீர்ப்புக்கள் சிலவற்றுக்கு கடுமையான ஆட்சேபங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

நாடகப்போட்டி, குழு நடனப் போட்டி போன்ற சில போட்டிகளுக்கு நடு நிலையாளர்கள் பிழையான தீர்வுகளை வழங்கி விட்டதாக சில பாடசாலைகள் தங்கள் முறைப்பாடுகளைச் சமர்ப்பித்துள்ளனர். நடுநிலையாளர்கள் இவ்வாறு செயல்படுவதால் திறமையுள்ள மாணவர்கள் முன்வர முடியாது போய்விட்டதோடு, மாகாண தேசிய மட்டங்களிலான போட்டிகளில் வெற்றி வாய்ப்பை இழக்கக்கூடும் என்றும் கருதப்படுகின்றது.

இப்போட்டிகள் கடந்த 11,12,13ந் திகதிகளில் முறையே புனித மரியாள் கல்லூரி, புனித சவேரியார் பாடசாலை, ஸ்ரீ சண்முக வித்தியாலயம் ஆகியவற்றில் இடம் பெற்றன.

# தமிழக காங்கிரஸ் கட்சிக்குள் கோஷ்டி மோதலில் கொடி பறக்கிறது



(தமிழகத்திலிருந்து ஏழுமலை)

இந்தியாவில் மத்திய ஆளும் கட்சி இந்திரா காங்கிரஸ். அதன் தமிழ்நாட்டு கட்சிப் பிரிவில் அதனை தமிழக ஆளும் கட்சியாக்கும் செயல்வீரர்களுக்கு பஞ்சம் என்றாலும், கோஷ்டி மோதலுக்கு குறைவே இல்லை. தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு வாழப்பாடி ராமமூர்த்தி தமிழக முதல்வர் ஜெயலலிதாவோடு இனி உறவே வேண்டாம், சொந்தக் காலில் நின்று கோட்டையைப் பிடிப்போம் என்கிறார். ஆனால் இந்திரா காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் திரு தங்கபாலு தலைமையில் உள்ள கோஷ்டி திரு.ராமமூர்த்திக்கு சவால் விடுகிறது. 'தனித்து நின்றால் தேர்தலில் களைத்துப்போவோம். ஜெயலலிதாவோடு இணைந்தால் மட்டுமே மீட்சி' என்கிறது. இரு கோஷ்டிகளும் சமீபத்தில் தமிழக காங்கிரஸ் அலுவலகம் முன்பு அடிபட்டுக்கொள்ள, பொலிஸ் தலையிட்டு பின்னி எடுத்துவிட்டது. அந்தக் காட்சிதான் படத்தில் பதிவாகியிருக்கிறது.


## விளம்பரப் பகுதி



### மலையாள மாந்திரீகம்

வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் கடந்த 27 வருடங்களாக மாந்திரீகத் துறையில் உண்மையான, நிலையான சேவையை ஒட்டியே தற்பொழுது எனது நிறுவனம் வரையறுக்கப்பட்ட தனியார்துறையாக (PVT. LTD) உருவாகியுள்ளது. இதன் சொத்து அனைத்துமே சிறீ துர்க்கா அம்மனுக்கே.

இதைவிட உண்மையை அறிய நேரில் வாருங்கள்.
உங்கள் குறை என்ன?
வாழ்வில் நிந்திப்பா?
வறுமையில் தவிப்பா?
இஷ்ட தேவவைகளில் குறையா?
இஷ்டப்பட்டவனையோ,
இஷ்டப்பட்டவளையோ
தீர்க்கமாகவே அடைந்து தீர வேண்டுமா? இன்னலுக்குப் பின் இன்னலாக வரும் தறுவாயில் எதிர் நீச்சலுக்கு ஏணிப்படியாக பற்பல உற்சாடனங்கள் உண்டு.
இன்னும் வசியத் தொப்பி, தீர்க்க முடியாது என முடிவெடுக்கப்பட்ட ஆஸ்துமா நோய், தீராத நோய்கள் அனைத்துக்கும் அம்மனிடம் வாருங்கள்.



கொழும்பு கொட்டாஞ்சேனையில் மகாவிகாரை, கொட்டாஞ்சேனைப் பொலிஸ் நிலையம் இவற்றின் மத்தியில் அமைந்துள்ள புதியதோர் இடத்தில் மாதந்தோறும் 20முதல் 31 வரை நிச்சயம் சேவையில் இருப்பேன். இத்தினங்களில் பூஜைகள், ஆராதனைகள், அன்னையின் அன்பு, அரவணைப்பு, ஆசீர்வாதங்கள் பெறலாம். அதுமட்டுமல்ல. எமது பிரிவில் கைரேகை நிபுணத்துவம், வாழ்க்கைச் சுவடி சாஸ்திரம், ஜாதகக் குறிப்பு, என் ஞானக் குறிப்பு, இனியும் வேறு என்ன என்பதற்கு நேரில் வரவும்.

**வறியவர் எனக்கண்டால் எமது ஸ்தாபனத்தில் தனி இடம் உண்டு.**

**தலைமைப்பீடம்**

P.K.சாமி JDGAN (மாந்திரீகச் சக்கரவர்த்தி)
சிறீ துர்க்காதேவி ஆலயம்
32, தினச்சந்தை காம்பிளக்ஸ்
நுவரெலியா.
தொலைபேசி: 052-2508, 052-3093

கொழும்பில்- இல. 162,
கொட்டாஞ்சேனை வீதி,
கொட்டாஞ்சேனை.
கொழும்பு-13.
தொலைபேசி: 078-71592, 078-71243

வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.
FAX: 0094 2508, 0094 3093

நுவரெலியா மாவட்ட மக்களின் நலனைக்கருதி P.K. Samy Associates (PVT) Ltd ஸ்தாபனத்தால் அறிமுகப்படுத்தும் புதிய தொலைத்தொடர்புச் சேவை

**இல: 21, பஸ்தரிப்பு நிலையம் நுவரெலியா.**

நினைத்த நேரத்தில் நினைத்த இடத்தில் உலகின் எப்பாகமும் உள்ளூர்களெங்கும் தொடர்புகொள்ள வேண்டுமா?
இனிமேல் கவலை வேண்டாம். எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.
தொலைபேசி: 052-2508, 052-3093


## ஊரவர் ஆட்டில் அதிகாரிக்கும் பங்கு

(காரைதீவு நிருபர்)

அம்பாறைப் பிரதேசத்திலுள்ள வைத்தியசாலையொன்றில் புதுவிதமான சத்திரசிகிச்சை இடம் பெற்றிருக்கிறது. வழமையாக மனிதனுக்கு நடாத்தப்படும் சத்திரசிகிச்சை அங்கு ஆட்டிற்கு நடந்துள்ளது.

பிரஸ்தாப ஆடு தினமும் வைத்தியசாலை வளவினுள் புல்மேய்ந்து வருவது வழக்கம். சம்பவ தினம் அங்குள்ள தொழிலாளிகளினால் ஆடு பிடிக்கப்பட்டு வாய்க்குள் பஞ்சு திணிக்கப்பட்டு கொல்லப்பட்டது. பின்பு ஆட்டைப் பங்கு வைத்தவர்கள், மேலதிகாரிகள் இருவருக்கும் பார்சலை அனுப்பி வைத்து தாமும் பிரித்துக்கொண்டார்கள்.

ஓரிரு நாட்களில் விடயமறிந்த ஆட்டு உரிமையாளர் அம்பாறைப் பிராந்திய சுகாதார அத்தியட்சகரிடம் நீதி கேட்டு முறையிட்டுள்ளார்.

## இயந்திரப் படகுச் சேவை இரவிலும் தேவை

(கிண்ணியா நிருபர்)

கிண்ணியாத்துறையில் சேவைகளில் ஈடுபடுத்தப்படும் இரண்டு இயந்திரப் படகு சேவைகளில் இப்பகுதியின் அத்தியாவசிய தேவைகளை ஈடுபடுத்த உதவுமாறு இப்பகுதி அனைத்து மக்களும் கோரிக்கை விடுகின்றனர்.

இவ் இயந்திரப் படகுச் சேவை பெருந்தெருக்கள் திணைக்களத் திடமிருந்து தனியார் மயமாக்கப்பட்டுள்ளது.

கிண்ணியா அரச வைத்தியசாலை, மாவட்ட வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டும், அவசர சிகிச்சைப் பிரிவுகளை திருகோணமலை மாவட்ட வைத்திய சாலைக்கே கொண்டு சொல்ல வேண்டியுள்ளது.

இவ் வியந்திரப் படகுச் சேவை மாலை 7.00 மணியோடு இடை நிறுத்தப்படுவதால், அவசரச் சிகிச்சை நோயாளிகளும், ஏனைய பகுதிகளிலிருந்து வரும் பிரயாணிகளும் மிகவும் பாதிப்பிற்குள்ளாகின்றனர்.

இவை தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆவன செய்யுமாறு இப்பகுதி மக்கள் தினமுரசு வாயிலாக கோரிக்கை விடுக்கின்றனர்.

## புகார் பெட்டி

### இருபதாயிரம் பேருக்கு இல்லை ஒரு மருத்துவமனை!

ம.தெ.மே.பட்டிப்பளை பிரதேசத்தில் மொத்தம் 20,000பேர் வசிக்கும் இடத்தில் ஒரு அரசாங்க மருத்துவமனைதான் இருந்தது. இது மகிழடித்தீவு என்னும் கிராமத்தில் நிரந்தர கட்டிடங்களுடன் செயல்பட்டது. கடந்த 90ம் ஆண்டு ஏற்பட்ட நெருக்கடி நிலை காரணமாக கொக்கட்டிச்சோலைக்கு இடம் பெயர்ந்து மாதத்தில் ஐந்து அல்லது ஆறு நாட்கள் இயங்கி வந்தது. இவற்றுக்கான மருத்துவர் அண்மையில் காலம் சென்றதினால் மூடுவிழா கொண்டாடும் நிலையில் இருந்தது. இப்பொழுது பெண் மருத்துவர் ஒருவர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டு வாரத்தில் 3 நாட்கள் மாத்திரமே திறக்கப்பட்டு 10 மணி தொடங்கி 1 மணிவரை செயல்படுகின்றது.

இப்பகுதி ஏழை விவசாய மக்கள் பணத்துக்கு மருந்து வாங்க முடியாமல் மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

எனவே தாங்கள் பத்திரிகை வாயிலாக இவற்றை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு தெரியப்படுத்துமாறு தாழ்மையுடன் கேட்கின்றேன்.

சா.தில்லைநாயகம்.

## முரசுக்கு வாழ்த்து! அதிகாரிகளுக்கு பாராட்டு!!

கடந்த 1994.1.25ந் திகதியன்று வெளியான தினமுரசு வாரமலரின் புகார் பெட்டிப் பகுதியில் 'சொன்னார்கள் சரி! செய்தார்களா? இதுவரை இல்லை!' எனும் தலைப்பின்கீழ் வெளியான செய்தியையடுத்து தற்போது இனிகலையிலுள்ள வீதி மின்கம்பங்களில் வீதி மின்விளக்குகள் (டியூப்லைட்டுகள்) பொருத்தப்பட்டுள்ளதையிட்டு தற்போது இனிகலை மக்கள் மத்தியில் மகிழ்ச்சியைக் காணக்கூடியதாகவுள்ளது.

எனவே இக்காரியத்தை மிக விரைவில் செய்துத்தர உதவிய தினமுரசையும், மற்றும் உடன் நடவடிக்கைகள் மேற்கொண்ட அதிகாரிகளையும் இனிகலை மக்கள் பாராட்டுகின்றார்கள்.

இனிகலை முஜீப்-கண்டி.

## இராம கிருஷ்ண மிஷனின் சேவை!

(காரைதீவு நிருபர்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீகண்ணகை அம்மனாலயத்தின் வருடாந்த உற்சவம் இம் மாதம் 16ஆம் திகதி ஆரம்பமாகி 24.05.94 அன்று திருக்குளிர்த்தியுடன் நிறைவடைகிறது.

இதே வேளை இராமகிருஷ்ண மிஷன் ரூ.39 இலட்சம் செலவில் காரைதீவில் சாரதா குருகுல கட்டிடம் ஒன்றை அமைத்துள்ளது. அகில உலக இ.கி.மி. செயலாளர் சுவாமி ஆத்மஸ்தானந்தாஜீ திறந்து வைப்பார். இத்திறப்பு விழா எதிர்வரும் 27ம் திகதி இ.கி.மிஷன் கொழும்பு தலைவர் சுவாமி ஆத்மகனானந்தாஜீ தலைமையில் நடைபெறவுள்ளது.


# DIPLOMA IN FINANCIAL TRAINING
## நிதித்துறையில் டிப்ளோமா பயிற்சிப் பாடநெறி

REGISTRATION No.W/A 3596

### யாருக்கு?

1. தொழில் தேடிக்கொண்டிருப்பவர்களுக்கு.
2. சுய தொழில் பார்ப்பவர்களுக்கு அல்லது சுயதொழிலில் ஈடுபட விரும்புகின்றவர்களுக்கு.
3. தொழில் செய்து கொண்டிருப்பவர், எனினும் முன்னேற வாய்ப்புக்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு தமிழ் மொழி மூலம் முதன் முறையாக இப்படியான ஒரு பாடத்திட்டத்தை வகுத்து, இதுவரையில் நான்கு தொகுதியினர்களை வெற்றிகரமாகப் பயிற்றுவித்த அனுபவமிக்க பட்டயக் கணக்கறிஞர்களால் (CHARTED ACCOUNTANTS) இந்த 06 மாத காலப் பயிற்சிப் பாடநெறி மீண்டும் 05.06.1994ல் ஆரம்பமாகின்றது. ஆகக் குறைந்த கல்வித் தகைமை G.C.E. O/L, ஆனால் கட்டாயமில்லை.

### 500 புலமைப் பரிசில்கள்

நுழைவுப் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு பாடநெறியை இலவசமாகவும் அரைக் கட்டணத்திலும் பின்பற்ற வசதியாக புலமைப் பரிசில் வழங்கப்படும். புலமைப் பரிசில் பரீட்சையும் மாணவர் பதிவும் நடைபெறும் தினம் 05.06.94. இடம்: கொட்டாஞ்சேனை பிரின்ஸ் கல்லூரி (கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்துக்கு அடுத்ததாக) இப்பயிற்சிப் பாடநெறியைப் பின்பற்றுவதால் பின்வரும் தொழில்களைப் பெற வாய்ப்பு ஏற்படும்.

| | | |
|---|---|---|
| * ACCOUNTS CLERKS | * TAX ASSISTANTS | *ACCOUNTS EXECUTIVES |
| * BANK CLERKS | * WAGES CLERKS | * ACCOUNTS ASSISTANTS |
| * COST CLERKS | * STORE KEEPERS | * AUDIT CLERKS |
| * STORES CLERKS | * BOOK KEEPERS | * GENERAL CLERKS |

வகுப்புகள் பிரதி ஞாயிறு தோறும் நடைபெறுவதால் தூர இடங்களில் இருப்போரும் இலகுவாகப் பங்குபற்றலாம்.
VENUE: கொட்டாஞ்சேனை பிரின்ஸ் கல்லூரி (கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தையடுத்து)
♥ வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யும் பயிலுநர்களுக்கு சான்றிதழ் ♥ செயன்முறைப் பயிற்சி

இலவசமாக ETF., EPF., GRN, PRO, MRF, INVENTRY RECORD, LEDGER SHEETS, VOUCHERS, CASH MEMOS, CREDIT INVOICE போன்றவை வழங்கப்படும். இப்பயிற்சி நெறியைப் பின்பற்றுவோர் இடையில் வேறு ஏதேனும் பரீட்சைக்குத் தோற்ற விரும்பினால் உ+ம்: GOVERNMENT CLERICAL EXAM, GOVT. TEACHERS EXAM, BANKERS ENTRANCE EXAM etc. எவ்வித கட்டணமும் இன்றிப் பயிற்சி அளிக்கப்படும்.

**கணனி (Computer) சார் கணக்கியலும் ஆங்கிலப் பாடநெறியும் இலவசமாக நடத்தப்படும்**

விபரங்களைப் பெற விரும்புவோர் சுயமுகவரியுடன் கூடிய ரூபா எட்டு 8/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட (9x5) கடித உறையுடன் தொடர்பு கொள்ளவும்.
விபரங்களை நேரடியாகப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் ஞாயிறு தினத்தில் மட்டும் கொட்டாஞ்சேனை பிரின்ஸ் கல்லூரிக்கு வருகை தரவும்.

FTB

DIRECTOR OF STUDIES,
FINANCIAL TRAINING BASE,
S-71, 3rd FLOOR, (CENTRAL SUPERMARKET COMPLEX)
COLOMBO-11

முக்கிய கவனிப்பு- இலங்கையில் எமக்கு வேறு எந்த இடத்திலும் கிளைகள் கிடையாது.


## முகவர்கள் தேவை

அம்பாறை, துல்கிரிய, பொத்துஹற, பெரஹல, தியத்தலாவ, தெமோதர, பதியத்தலாவ, மின்னேரிய, ஹிங்குராங்கொட, சூரியகந்தை, புத்கந்தை, ரம்படகல, தங்கொட்டுவ.

மேற்காணும் ஊர்களில் தினமுரசு வாரமலர் விற்பனை செய்வதற்கு முகவர்கள் தேவைப்படுகின்றார்கள். நியாயமான விற்பனைத் தரகு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு—
விநியோக மேலாளர்
இல.88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை, கொழும்பு-05.

CIRCULATION MANAGER
NO: 88/14, SOMADEVI PLACE,
KIRILAPONE, COLOMBO-5.
PHONE: 820265

# அந்நியர் மண்ணில் எம்மவர் மோதல்கள்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

சுவிட்ஸர்லாந்தில் இருந்து இலங்கைத் தமிழ் அகதிகளை வெளியேற்றுகிறார்கள்.

நெதர்லாந்தில் இருந்தும் வெளியேற்றப் படும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் வெளிநாட்டவர்களுக்கு எதிரான இயக்கங்கள் தோன்றிவருகின்றன.

வெளிநாட்டவர்கள்மீது வன்முறைகளும் ஏவப்பட்டு வருகின்றன.

அந்நிய எதிர்ப்பு வெறுப்பு நம்மவர்மீதும் திரும்பி வருகிறது. அச்சுறுத்திக் கொண்டு மிருக்கிறது.

அப்படியிருந்தாலும்கூட இலங்கைப் பிரச்சனை பற்றி அறிந்து வைத்துள்ள வெளிநாட்டவர்கள் பலரும், மனிதாபிமான அமைப்புக்களும் இலங்கை அகதிகள் திருப்பி அனுப்பப்படக்கூடாது என்று ஆங்காங்கே குரல்கொடுத்து வருகின்றன.

சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் இலங்கைத் தமிழர் மீது அனுதாபமான பார்வையை செலுத்தி வருகின்றன.

ஒரு சில நாடுகள் அகதிகளை திருப்பி அனுப்பத் தொடங்கிவிட்டால் ஏனைய நாடுகளும் தாமும் திருப்பி அனுப்பி வைத்தால் என்னவென்று யோசிக்கக்கூடும்.

முதலில் இந்தியா தமிழ் அகதிகளை திருப்பிக் கப்பலில் ஏற்றியது. ராஜீவ் கொலை ஏற்படுத்திய அதிர்ச்சி திருப்பி அனுப்புவதைத் தடுக்கும் கோரிக்கைகளை பலவீனப்படுத்தியிருந்தது.

இப்போது சுவிட்ஸர்லாந்து; அடுத்து நெதர்லாந்து. இப்படியே பட்டியலில் நீளுமோ என்று வெளிநாட்டில் உள்ள நம்மவர்கள் பயந்துகொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறான நிலையில் வெளிநாடுகளில் இருக்கக்கூடிய கொஞ்ச நஞ்ச அனுதாபத்தையும், ஆதரவையும் இல்லாதொழிக்கும் வகையில் நம்மவர்கள் சிலரே நடந்து கொள்கிறார்கள்.

இறுதியாக நடந்த அத்துமீறல் இம்மாதம்-மே முதலாம் திகதி பாரிசில் நடந்தது.

சபாலிங்கம் என்னும் இலங்கைத் தமிழர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சுட்டவர்கள் அந்நியர்கள் அல்ல-நம்மவர்கள்! சபாலிங்கமும் இலங்கையில் சிறையிலே இருந்தவர். இன உரிமைக்கான போராட்டத்தில் பங்கு கொண்டவர்.

இயக்கங்களில் இருந்து விலகியவர்கள் எல்லோரும் தவறானவர்களுமல்ல.

இப்போது இயக்கங்களில் இருப்பவர்கள் எல்லோரும் சரியானவர்களுமல்ல.

சபாலிங்கமும் ஒரு கட்டத்தில் நாட்டை விட்டு வெளியேறிச் சென்றபோதும், சென்ற இடத்தில் இருந்தே இங்கு மனித உரிமைகள் மீறப்படும் விடயங்களை வெளிப்படுத்த இயன்றவரை முயன்றார்.

ஒவ்வொரு இயக்கமும் தனது வரலாற்றையே தமிழர்களது அரசியல் போராட்ட வரலாறாக சித்தரிக்கவே முற்படுகின்றன.

இப்போது மேலும் முன்னேறி ஒவ்வொரு இயக்கமும் தனது தலைவராக யார் இருக்கிறாரோ அவரது வரலாறுதான் இலங்கைத் தமிழர்களது எழுச்சி வரலாறு என்று சொல்லிக்கொள்ள முற்படுகின்றன.

உதாரணமாக ஒரு விடயத்தை இங்கே சுட்டிக்காட்டலாம்.

தமிழ் இளைஞர் பேரவை கூட்டணியின் இளைஞர் அணியாக செயற்பட்டபோது ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் இளைஞர்கள் சிலர் பிரிந்து சென்றனர். தமிழ் ஈழ விடுதலை இயக்கம் என்னும் புதிய அமைப்பையும் உருவாக்கினார்கள். பின்னர் அந்த அமைப்பு ஒரு கட்டத்தில் செயல் இழந்து போனது. அதன் தலைவர் முத்துக்குமாரசாமி உட்பட பல முக்கியஸ்தர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றனர்.

அதற்கெல்லாம் பிறகுதான் தங்கத்துரை, குட்டிமணி ஆகியோர் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் என்னும் பெயரில் இயங்குவதற்கு யோசித்தார்கள். இதுதான் வரலாறு.

ஆனால் பின்னர் உருவான தமிழ் ஈழ விடுதலை இயக்கம் தனது இயக்கப்பாடலில் "முதன் முதல் தோன்றிய இயக்கம். தமிழ் ஈழ விடுதலை இயக்கம்" என்று சொல்லி திருப்திப்பட்டுக்கொண்டது.

அதுபோல், புலிகள் அமைப்பினரும் தாமே முன்னர் தோன்றிய முதல் இயக்கம் என்று கூறுவதையும், பாடல்களில் குறிப்பிடுவதையும் கேட்க முடிகிறது.

இவ்வாறு தமது இயக்கங்களை பெரிதாக தூக்கிக்காட்ட வரலாறுகள் திரிக்கப்படுவதும், தவறான தகவல்கள் வெளியிடப்படுவதும் நாளைய சந்ததி உண்மை வரலாற்றை அறிய முடியாது செய்து விடுகின்றன.

இயக்கப் போட்டிகளும், மோதல்களும் முதலிடத்தில் இருப்பதால் ஒரு இயக்கம் ஏற்படுத்திய சாதனையை மற்றொரு இயக்கம் மூடி மறைத்துவிடும்.

எனவே-இயக்கங்களுக்கு அப்பால் நின்று, சரியான தகவல்களை ஒன்று திரட்டுவதும், ஆதாரங்கள் கொண்ட ஆவணங்களைத் தேடி சேகரித்துப் பத்திரப் படுத்துவதும் முக்கியமாகும்.

இதனால் புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இருந்தும் செய்ய முடியாது. செய்தால் புலிகளது தடை முகாமில் இருக்க வேண்டிவந்துவிடும்.

ஏனைய இயக்கங்கள் உள்ள பகுதிகளில் இருந்தும் செய்ய முடியாது. தமக்கு சாதகமான முறையில் எழுதச் சொல்லி நச்சரிப்பார்கள். அல்லது எச்சரிப்பார்கள். அதுவும் முடியாது போனால் கூட்டத்தில் ஏறி நின்று வசைபாடுவார்கள்.

மறுபுறம் தேடுதல் வேட்டைகள். சேகரித்த ஆவணங்களோடு தடுப்புக்காவலுக்கு செல்லவேண்டி ஏற்படலாம்.

எனவே-வெளிநாடுகளில் உள்ளவர்கள் நமது வரலாற்றுக்கு உதவக்கூடிய தகவல் களையும், ஆவணங்களையும் திரட்ட முடியும்.

சபாலிங்கம் அப்படியானதொரு முயற்சியில்தான் ஈடுபட்டிருந்தார்.

தமிழர் வரலாறு தமது இயக்க வரலாறாக மட்டுமே இருக்க வேண்டும் என்று நினைத்தவர்களுக்கு அது பிடிக்கவில்லை.

மே முதலாம் திகதி, சிக்காகோவில் உழைப்பாளர்கள் உரிமை கேட்ட தினத்தில், பாரிசில் நம்மவர் துப்பாக்கிகள், நம்மவர் ஒருவரின் கருத்துச் சுதந்திரத்தை கருவறுத்து ஓய்ந்தன.

புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்களே தமது கணவரைக் கொன்றனர் என்று சபாலிங்கத்தின் மனைவி கூறியிருக்கிறார்.

சீனாவின் செய்தி நிறுவனமும் புலிகளே காரணம் என்றுதான் சொல்லுகிறது.

ஆனால்-புலிகளது பிரான்ஸ் பிரதிநிதி மறுத்திருக்கிறார்.

புலிகளது மறுப்புக்களை இப்போது அநேகமானவர்கள் கண்டுகொள்வதில்லை. புலிகள்தான் கொலைக்கு காரணம் என்றே எல்லோரும் நம்புகின்றனர்.

பிரான்சிலும், கனடாவிலும் சபாலிங்கம் கொலைக்கு கண்டனம் தெரிவித்து இலங்கைத் தமிழர்கள் பிரசுரங்கள் வெளியிட்டுள்ளார்கள். கூட்டங்களும் நடத்தியுள்ளார்கள்.

வெளிநாடுகளில் இருந்து புலிகளுக்கு எதிரான விமர்சனங்களும், வெளியீடுகளும் அங்குள்ள தமிழர்களால் வெளியிடப் படுகின்றன.

எங்கிருந்தாலும் எம்மை விமர்சிக்கக் கூடாது; எதிர்த்துக் கருத்துச் சொல்லக்கூடாது; சொன்னால் இதே கதிதான் என்றொரு எச்சரிக்கைதான் சபாலிங்கம் படுகொலை!

வெளிநாடுகளில் இருந்துகூட இலங்கையில் நடந்துவரும் நிகழ்வுகள் பற்றி சுதந்திரமாகவும், உண்மையாகவும் கருத்து வெளியிட முடியாமல் அச்சுறுத்தல் நீளக்கூடாது என்ற உணர்வின் வெளிப்பாடுதான் சபாலிங்கத்தின் கொலைக்கான கண்டனங்கள்.

பாரிசில் கொல்லப்பட்ட சபாலிங்கத்திற்கு கனடாவில் அஞ்சலி செலுத்தியிருக்கிறார்கள். ஏன் இந்தக் கொலை என்று கோபப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால், இலங்கையில் உள்ள தமிழ் அமைப்புக்கள் வாயே திறக்கவில்லை.

ஜனநாயக நீரோட்டம், வெள்ளோட்டம், தேரோட்டம் என்றெல்லாம் பேசிக்கொண்டு யாரை யார் முந்துவது என்று போட்டி போட்டுக்கொள்கிறார்கள். அதனால் வெளிநாட்டில் நம்மவர் ஒருவர் கொலையானதும், நம்மவர்களே அந்தக் கொலைக்கு காரணம் என்பதையும் கண்டுகொள்ளவோ, கண்டிக்கவோ அவர்களுக்கு நேரமிருக்கவில்லை.

பிரான்ஸ் பொலிசார் கொலையாளிகள் யார் என்று விசாரித்து வருகிறார்கள்.

புலிகள்தான் கொலைக்கு காரணம் என்று கண்டறியப்பட்டால், பிரான்சில் உள்ள புலிகளும், பாரிசில் இருக்கும் அவர்களது அலுவலகமும் நெருக்கடிக்கு உள்ளாகலாம்.

வெளிநாடுகளில், குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் போதைக் கடத்தல், மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகள் காரணமாக இலங்கைத் தமிழர்கள் பலர் நிலவறைச் சிறைகளில் இருக்கின்றனர்.

முன்னாள் போராளிகள் சிலரும் அப்படியான சிறைகளில் இருக்கின்றனர்.

அதில் சிலருக்கு புலிகள் உட்பட ஏனைய தமிழ் அமைப்புக்களோடு தொடர்புகள் உண்டு.

வெளிநாடுகளில் வியாபாரம் செய்வதற்கு வசதியாக இயக்கப் பிரதிநிதிகளாக தம்மை மாற்றிக்கொள்ளும் புத்திசாலிகளும் இல்லாமல் இல்லை.

இயக்கங்களது தலைமைகளோடு உள்ள தனிப்பட்ட உறவுகளை வைத்து இலட்சிய வாதிகளாக நாடகமாடிப் பிழைத்துக் கொள்கிறார்கள்.

தமது சொந்த உழைப்பில் இயக்கங்களுக்கு உதவி செய்கின்றவர்களும் இருக்கவே செய்கிறார்கள். அவர்கள் விதி விலக்குகள்.

இந்த நேரத்தில் அரசியல் படுகொலைகளும் ஐரோப்பிய நாடுகளில் அரங்கேறுமானால், நம்மவர்களை அங்கிருந்து வெளியேற்ற நம்மவர் செயல்களே போதுமான காரணங்களாகிவிடும்.

மனிதாபிமான அமைப்புக்கள்கூட மனம் வெறுக்கும் நிலை வந்துவிடும்.

சம்பந்தப்பட்டவர்கள் சற்று யோசித்து நடந்தால் என்ன?

■

# தெற்கு அரசியலும் சொத்தி உபாலியும்!



"என்மீது வீண்பழி சுமத்தவும் அமைச்சர் ஒருவருக்குக் கெட்டபெயர் ஏற்படுத்தவும் சிலர் விரும்புகின்றனர்."

-சொத்தி உபாலி-



"அவர் நம்ம பையன் தான். அவர்மீது அவதூறு ஏற்படுத்தி என்னையும் அதில் சம்பந்தப்படுத்த சிலர் முயலுகிறார்கள்."

-சிறிசேன குரே-

தென்னிலங்கை அரசியலில் ஆளும் கட்சிக்குள் ஏற்பட்ட பிரச்சனையால் நாடறிந்த பிரபலமாகியிருப்பவர் சொத்தி உப்பாலி.

கொழும்பு குண்டு வெடிப்பில் நடைபெற்ற விசாரணைகளின் பரபரப்பு செய்திகள் கூட அடங்கிப்போய், சொத்தி உப்பாலியை பொலிசார் தேடிக்கொண்டிருந்தார்கள்.

"சொத்தி உப்பாலி 'நமது பையன்தான்' என்று ஐ.தே.கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் சிறிசேன குரே தலைநகரின் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு சொல்லியிருந்தார்.

அவர் அப்படிச் சொல்லிக்கொண்டிருந்த போதே பொலிஸ் மேலும் தீவிரமாகி சொத்தி உப்பாலியை வலைவீசி தேடி அமுக்கிவிட்டது.

சிறிசேன குரேயின் கரங்களை பலவீனமாக்கவே அவரது நம்பிக்கைக்கு பாத்திரமான சொத்தி உப்பாலியை அவசர மாகத் தேடி மடக்கியதாக சொல்லப்படுகிறது.

ஆளும் கட்சிக்குள் பல கோஷ்டிகள் இருப்பதாக புதிய பொதுச் செயலாளர் பகிரங்கமாகச் சொல்லியிருக்கிறார்.

இந்த நிலையில் சிறிசேன குரேயின் தரப்பை பலவீனப்படுத்தவே சொத்தி உப்பாலியைப் பிடித்து உள்ளே வைத்திருக் கிறார்கள்.

அரசியல் கட்சிகள் அடியாட்களை வைத்துக்கொள்வது எனபது அறியப்படாத இரகசியம் அல்ல.

அதிகாரத்தில் உள்ள கட்சியின் அடியாட்களுக்கு பொலிசே அடங்கிப்போக வேண்டிய நிலையும் சமயத்தில் ஏற்படுவதுண்டு.

'ஆனைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கு ஒரு காலம் வரும்' என்பதுபோல ஆட்சிகள் மாறும்போது, தமக்கு அடங்காமல் வாலாட்டிய அடியாட்களை பொலிஸ் இதம் பதமாக கவனித்து எலும்புகளை எண்ணுவது உண்டு.

ஆனால், சொத்தி உப்பாலியின் கெட்ட நேரம் அவர் நம்பியிருந்த அரசியல்வாதி அவரைக் கைவிடாதபோதும் அவர் சார்ந்திருந்த கட்சி அவரைக் கை கழுவிவிட்டது.

உட்கட்சி பிரச்சனையால் சொத்தி உப்பாலியின் தலை உருட்டப்படுகிறது. ஆட்சி மாறவில்லை. ஆனால் உப்பாலியின் ஆட்டம் அடங்கிவிட்டது. உத்தரவு கிடைத்ததும் பொலிஸ் எட்டிப் பாய்ந்துவிட்டது.

ஆளும் கட்சி உறுப்பினரும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான திரு.ஹட்சன் சமரசிங்க வீட்டுக்கு குண்டெறிந்த விவகாரத்திலும் சொத்தி உப்பாலியின் பெயர் அடிபட்டது.

சிறிசேன குரேக்கும், ஹட்சனுக்கும் ஏற்பட்ட பிரச்சனையே குண்டெறியப்பட்டதற்கு காரணம் என்றும் பேசப்பட்டது.

எனினும், அப்போது குரே அதிகார முள்ளவராக இருந்தமையால் அந்தச் சம்பவம் அமுங்கிப் போனது. வழக்கும் பிசுபிசுத்தது.

காமினி திசாநாயக்காவோடு சம்பந்தப்பட்ட வட்டாரங்களுக்கு ஒரு சந்தேகம்.

லலித் கொலைக்கு சொத்தி உப்பாலி கோஷ்டியினர் காரணமாக இருந்திருக்கலாமோ என்பதுதான் அது.

தற்போது காமினி, கட்சிக்குள் அதிகார முள்ளவராக மாறுவதை குரே விரும்பவில்லை என்பதால், குரேயின் சுற்று வட்டத்தை காமினி வட்டாரம் கவனத்தோடு கண்காணிக்கிறது.

ஆயுதங்களும் அந்த அடியாட்களிடம் இருப்பதால் எதற்கும் முன் எச்சரிக்கையாக இருப்பது நல்லது என்றே காமினி வட்டாரம் நினைத்திருக்கக்கூடும்.

எனவேதான், ஏதோ நேற்றுத்தான் சொத்தி உப்பாலியைப் பற்றி அறிந்ததுபோல சட்டம் ஒழுங்குப் பிரிவுகள் பத்திரிகைகளுக்கு படத்தோடு செய்தி கொடுத்தன. தீவிரமாக தேடி ஆளையும் அமுக்கிவிட்டன.

சொத்தி உப்பாலி மட்டுமல்ல, கடந்த பல வருடங்களாக தேடப்பட்டவர்கள் என்ற பட்டியலில் இருந்தபோதும், அரசியல் செல்வாக்கால் பகிரங்கமாக நடமாடித் திரிந்த சிலரையும் பொலிசார் தயக்கமில்லாமல் தொட்டிருக்கிறார்கள்.

செய்திகளைத் தினசரிகளில் அறியும் மக்களுக்கு ஆச்சரியம். திடீரென்று புள்ளிகள் எல்லாம் பொலிஸ் வலையில் விழுவது எப்படி என்று யோசிக்கிறார்கள்.

குற்றங்கள் அதிகரிக்கும்போது பொலிசைத்தான் குறை சொல்வார்கள். ஆனால் குற்றவாளிகளை பொலிஸ் நெருங்க முடியாமல் அரசியல் செல்வாக்கு குறுக்கே நிற்பதை மக்கள் அனைவரும் அறிய முடியாது.

குறுக்குத் தடை விலக பொலிஸ் பாயும். ஐந்து வருடமாக தேடப்பட்டவர்கள் ஐந்து மணிநேரத்தில் பொலிஸின் கைகளில் இருப்பார்கள்.

மறுபுறம், அரசியல் கட்சிகளால் பயன் படுத்தப்பட்டுவிட்டு, அதே அரசியல் கட்சிகளின் உள் பிரச்சனைகளால் கைவிடப் படும் அடியாட்களையும் அனுதாபத்தோடு தான் பார்க்க வேண்டியிருக்கிறது.


அம்புகள் தண்டிக்கப்படுவது முழுமை யான நீதியாகுமோ என்று யோசிக்கத் தோன்றுகிறது.

சிறிசேன குரே அதிகாரமுள்ளவராக இருந்திருந்தால் சொத்தி உப்பாலி கையில் விலங்கு ஏறியிருக்காது. அவர் படமும் பத்திரிகைகளில் வந்திருக்காது.

"யாரும் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே." கட்சித் தொண்டர்களின் கதையும் அதுதான்.

●

# அதிரடி அய்யாத்துரை



பாரிசிலை கொல்லப்பட்டவர், முந்தி ஊரிலை இருந்த காலத்திலை ரெண்டு எழுத்து தலைவர் காலிலை பட்ட காயத்திற்கு பராமரிப்புக் கொடுத்தவராம். இறந்தவற்றை உறவினர்கள் பழசைச் சொல்லிக் கவலைப்படுகினம்.

பிரான்சுக்கும், பிரிட்டனுக்கும் இடையிலை சுரங்கப் பாதையாலே ரயில் ஓடத் தொடங்கிப் போட்டுது. இதைக் கேள்விப்பட்ட எங்கடை ஏஜென்சிக்காரர் சிலருக்கு எக்கச்சக்கமான குசி. புது ரூட் ஒண்டு கிடைச்சிருக்கு. இடையிலை தொங்கி நிற்கிற ஆட்களை கொண்டு போய் சேர்த்துப் போடலாம் எண்டு நினைக்கினமாம். சுரங்கப் பாதையிலும் எங்கடை மானம் நாறப்போகுதாக்கும்.

லிங்கங்கள்தான் இந்த நாட்டிலை தமிழ் சனத்துக்கு உள்ள மரியாதையை உதாரணம்காட்ட பயன்படுகிறவை. இப்ப ஒரு லிங்கத்தின்ரை பவரிலை கொஞ்சத்தை குறைச்சுப் போட்டினம்.

சுவிச்சிலை இருந்து எங்கடை பெடியளை நாடு கடத்த அடுக்குப் பண்ணுகினம். உண்ணாவிரதம் இருந்தும் ஒண்டும் நடக்கேல்லை. இப்ப பார்த்தா 600 பெடியளைக் காணேல்லை. பிள்ளையள் சத்தம் கித்தம் போடாமல் எல்லை தாண்டிப்போட்டுதுகள். இஞ்சை வந்துதான் என்ன செய்யிறது?

புதுசா வெகுஜனப் பிரதிநிதியானவர் தன்ரை சக சட்டத்தரணிகளை அவசரமாய்க் கூப்பிட்டவராம். என்ன ஏதோ எண்டு அவையும் ஓடிப்போய் காதைக் குடுத்தினமாம். கடந்த முப்பது வருசத்திற்கு பிறகு இப்பதான் ஒழுங்காக பேசத் தெரிஞ்ச ஆள் சபைக்கு வந்திருக்கிறார் எண்டு சபைக்கு இரண்டாவது நாயகர் சொன்னவராம். அதைச் சொல்லத்தான் கூப்பிட்டிருக்கிறார். கேட்டவைக்கு வாழ்க்கை வெறுத்துப் போச்சுது. புது வெகுஜனப் பிரதிநிதிக்கு வாய் மாதிரி கையும் நீளம். அதுதான் தன்ரை முதுகிலையே... ஹி...ஹி....ஹி...

வவுனியாவிலை கள்ளமரம் வெட்டி கடத்திற விசயத்திலையும் இயக்கப்போட்டி எண்ட கேள்வி. சமீபத்திலை திருவான மலையிலை மாநாடு நடத்தின இயக்கம் மர வியாபார விசயத்திலை மாட்டுப்பட்டுப் போச்சுதாம். மறத் தமிழன்...பெயர் மரம் வெட்டவும் பாவிக்கப்படுகுது பார்த்தியளோ...?

பச்சை வட்டாரத்திலை முன்னாள் செயலரை 'டச்' பண்ணாமல், அவருக்கு வலது கரமாக இருந்த ஆட்கள் மேலை கண் வைச்சு கண்ணியும் வைச்சாச்சாம். தலைமறைவாய் இருந்து பேப்பரிலை படம் போட்டு தேடி பிடிபட்டவர் பிடிச்சவைக்கு என்ன சொன்னவர் தெரியுமோ? "ஒரு பத்திரிகையாளர் மாநாடு வையுங்கோ. வண்டவாளங்களை எடுத்து விட்டுக் காட்டுறன்" எண்டு. அவர் வாயை திறந்தா வம்புவரும் எண்டு கடும் பாதுகாப்பாம்.

கிழக்கிலை இருக்கிற தமிழ் அரச அதிகாரி இரண்டு எழுத்தாருக்கு முக்கிய தகவல்களை விநியோகிக்கிறார் எண்டு சிங்களப் பத்திரிகை ஒண்டு எழுதியிருக்குது. ஏற்கனவே மாற்றல் விவகாரத்திலை அவர் நொந்து போனவர். புதுசா வெளிக்கிட்டிருக்கிற அம்பு என்ன செய்யப் போகுதோ தெரியேல்லை....

பத்திரிகை எண்டா எப்படியிருக்க வேணும்? பாரதிதாசன் சொல்லியிருக்கிறார் கேளுங்கோ:

"அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர்தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்!
நறுமண இதழ்ப் பெண்ணே உன்
நலம் காணார் ஞாலம் காணார்."

குறுகிய செயல்களை கண்டிச்சா சிலருக்கு கோபம் எல்லோ வருகுது.


# 1450 முதல் 1994 வரை

# சுதந்திரத்தின் பாதை

சர்வதேச செய்தி நிறுவனங்கள் தற்போது தமது தலைப்புச் செய்திகளில் அடிக்கடி உச்சரிக்கும் பெயர்களில் இரண்டு,

ஒன்று - தென்னாபிரிக்கா! இரண்டு- நெல்சன் மண்டேலா!!

தென்னாபிரிக்காவின் வரலாற்றை சுருக்கமாக தொகுத்துத் தருகிறோம்:




**கி.பி.1450-1500:** தென்னாபிரிக்காவுடன் ஐரோப்பியர்களின்-பிரதானமாக- போர்த்துக்கேய கடலோடிகளின் ஆரம்ப காலத் தொடர்பு.

**1652:** டச்சுக்கார குடியேற்ற வாசிகளால் (போயர்கள்) கேப்ரவுண் உருவாக்கப்பட்டது.

**1659:** டச்சுக் குடியேற்ற வாசிகளை எதிர்த்து நடைபெற்ற கிளர்ச்சிகள் தோல்வி கண்டன.

**1685:** இனங்களுக்கிடையிலான திருமண உறவு தடுக்கப்பட்டது.

**1707:** கேப்ரவுணில் முதலாவது குடிசனக் கணக்கெடுப்பு- 1,779 வெள்ளையருக்கு 1,107 கறுப்பு இன அடிமைகள் என்று காட்டியது. இனக் கணக்கெடுப்பில் தற்போதுள்ள ஆஃபிரிக்கானர்களின் முதாதையர் பெரும்பாலும் அடங்குவர். 1700ன் ஆரம்பத்தில் போயர் குடியேற்ற வாசிகள் வடக்கே செல்ல ஆரம்பித்தனர்.

**1806:** நெப்போலியனின் யுத்த காலத்தில் கேப்பை பிரிட்டிஷார் கைப்பற்றினர்.

**1833:** கேப் குடியேற்றத்திலிருந்த கறுப்பர்களின் அடிமைத்தளை நீக்கும் சட்டத்தை பிரிட்டன் அமுலாக்கியது. இதனால் 1838ல் சகல அடிமைகளும் விடுதலையாக நேர்ந்தது.

**1835-1843:** பிரிட்டிஷ் ஆட்சியின் கொடூரத்துக்கு அஞ்சிய 12,000 போயர்கள் வடக்கு நோக்கிப் பெயர்வு.

ட்ரான்ஸ்வால் (1852) ஒரேஞ்ச் ஃபிறி ஸ்ரேற்ஸ் (1854) ஆகிய ஆஃபிரிக்கானர் குடியாட்சிகள் உதயமாயின.

**1867-1886:** வைரம் மற்றும் தங்கம் கண்டுபிடிப்பு.


மண்டேலா மனைவி வின்னியோடு (1958)


குத்துச் சண்டை வீரராக மண்டேலா, அரசியல் மோதலில் அவரிற்கே வெற்றி

**1899-1902:** போயர் யுத்தம் மூண்டது. ஆஃபிரிக்கானர் குடியரசினர் கெரில்லா யுத்தம் நடத்தியும் பிரிட்டிஷ் படைகளின் தாக்குதலைச் சமாளிக்க முடியவில்லை. ஆஃபிரிக்கானரின் பெண்கள் குழந்தைகளை வதை முகாம்களில் பிரிட்டிஷார் அடைத்தனர்.

**1907:** பிரிட்டனில் பதவியேற்ற தொழிற் கட்சியினர் ஆஃபிரிக்கானர் குடியரசுகளுக்கு சுயாட்சி வழங்கினர். வெள்ளையருக்கு அதிகாரம் அதிகம் வழங்கும் புதிய அரசியல் யாப்பு அமுலுக்கு வந்தது.

**1913:** வெள்ளையருக்கும் கறுப்பின மக்களுக்கும் தனித்தனி குடியிருப்புகளை வகுக்கும் புதிய காணிச்சட்டம் அறிமுகமானது. தொடர்ந்து இரு இனங்களுக்குமிடையில் பிரிவுகளை வலியுறுத்தும் வேறு பல சட்டங்களும் அமுலுக்கு வந்தன.

**1948:** இனப் பாகுபாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஆஃபிரிக்கானர் தேசியக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது.

**1949-1951:** இனப் பாகுபாட்டுக்கு மேலும் வலுவூட்டிய கலப்புத் திருமணத் தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டது. பல்வேறு இனங்களையும் தனித்தனியே பதிவு செய்யும் குடிமதிப்பு சட்டமும் இன அடிப்படையில் காணிகளை வரையறுக்கும் சட்டமும் இயற்றப்பட்டன. தனித்தனி வாக்காளர் பட்டியலும் இனவாரியாக அமுலுக்கு வந்தன.

**1960:** ஷாப்வில்லி படுகொலை- 69 கறுப்பர்கள் படுகொலை செய்யப்பட்டனர். உலகின் கவனத்தை ஈர்த்த கொடுஞ் செயல் இதுவாகும்.

**1961:** கொமன் வெல்த் எனப்படும் பொதுநல அமைப்பிலிருந்து தென்னாபிரிக்காவை நீக்க கனடா தூண்டியது.

**1963:** கறுப்பு இனத்தவர்களுக்கென தனித்தாயகமான ட்ரான்ஸ்கீ முதன் முதலில் அமைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பல குடியிருப்புகள் அமைக்கப்பட்டு கறுப்பின மக்கள் பலாத்காரமாக குடியேற்றப்பட்டனர்.

**1964:** நாசவேலைகளுக்குத் தூபமிட்டார் என்ற குற்றம் சுமத்தப்பட்டு நெல்சன் மண்டேலா ஆயுள் சிறைத் தண்டனை பெற்றார்.

**1976:** சுவெட்டோ கிளர்ச்சி உருவெடுத்தது. நூற்றுக்கணக்கான கறுப்பு இனத்தவர்களை வெள்ளை பொலிசார் கொன்று குவித்தனர்.

**1986:** சர்வதேசங்களின் எதிர்ப்பு தென்னாபிரிக்காவுக்கு எதிராகத் திரும்பியது. இதனால் பொருளாதாரத் தடை ஏற்படுத்துவதற்கான தாக்கம் அதிகரித்தது. கலப்புத் திருமணச் சட்டம் தளர்த்தப்பட்டது.

**1989:** எஃப்.டபிள்யூ.டி.கிளேர்க் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

**1990:** நெல்சன் மண்டேலா விடுதலை செய்யப்படுகிறார்.

**1991:** இனப் பாகுபாட்டுச் சட்டங்கள் யாவும் ஜனாதிபதியால் நீக்கப்பட்டன.

**1992:** வெள்ளையர்கள் மட்டும் பங்கு பற்றிய கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பின் படி இனப்பாகுபாட்டு முறை ஒழிக்கப்பட்டது.

**1993:** மண்டேலாவும் டி. கிளேர்க்கும் சமாதானத்துக்கான நொபல் பரிசைப் பெறுகின்றனர்.

**1994:** ஏப்ரல் 26-28 பொதுத் தேர்தல் நடைபெறுகிறது. பல இனத்தவர்களும் பங்குகொள்ளும் முதலாவது தேர்தல், புதிய அரசியல் யாப்பின் அடிப்படையில் நடத்தப்பட்டு புதிய பல வர்ணக்கொடி- ஏற்றப்படுகிறது. ●

## குப்பையில் கிடந்த படம்

## சாராவுக்கு வெட்கம் இல்லை



பிரிட்டிஷ் அரச குடும்ப அங்கத்தவர்களின் அந்தரங்க லீலைகள் அங்கு வெளியாகும் நாளிதழ்களில் அவ்வப்போது வெளிவந்து பெரும் பரபரப்பினை ஏற்படுத்துவதுண்டு.

அண்மையில் இலண்டனில் வெளியான 'சண்' நாளிதழ் இளவரசர் ஆண்ட்றுவின் முன்னாள் மனைவியான சாராவின் அரை நிர்வாணப் புகைப்படத்தைப் பிரசுரித்திருந்தது.

இந்தப் புகைப்படம் ஆண்ட்று-சாரா திருமணத்துக்கு ஐந்து வருடங்களுக்கு முன்னர்-1981ல் மத்தியதரைக் கடலிலுள்ள கோஸா தீவில் எடுக்கப்பட்டதாம். இந்தப் படம் 'சண்' பத்திரிகைக்கு எவ்வாறு கிடைத்தது என்பது ஆச்சரியமான சம்பவம்!

மத்திய இங்கிலாந்தில் தோட்டக்காரராகப் பணிபுரியும் ஒருவர், ஒரு குப்பை மேட்டை குடையும்போது சாராவின் பல படங்களும் வேறு பலவும் கிடைத்ததாகக் கூறுகிறார். 'சண்' பத்திரிகை இப்படத்தில் சாராவின் மார்பகங்களை மறைத்தே பிரசுரித்திருந்தது. இதனையிட்டு சாரா எந்தக் கவலையும் கொண்டதாகத் தெரியவில்லை. ●

## கடலுக்கடியில் ஒரு பாதை!

## 1751 இல் போட்ட திட்டம் 1994 இல் பூர்த்தி!!

ஆங்கிலக் கால்வாய் எனப்படும்- இங்கிலாந்தையும் பிரான்சையும் பிரிக்கும் கடலின் அடியில் புகையிரதம் செல்வதற்கென பாதாள ரயில் பாதை கட்டி முடிக்கப்பட்டு விட்டது.

அந்த வியத்தகு பாதையின் படம் பக்கம் 20ல் உண்டு. இந்தச் சுரங்கப்பாதையின் நீளம் 50 கிலோ மீட்டர் (31மைல்). இலண்டனிலிருந்து பாரிஸ் மற்றும் பேர்ஸெல்ஸ் ஆகிய இடங்களை இந்தப் பாதாள ரயில் பாதை இணைக்கிறது.

இந்தச் சுரங்கப்பாதையினை நிர்மாணிக்க 14.62 இலட்சம் கோடி டொலர் செலவாகியிருக்கிறது.

கடலின் அடி- (நில) மட்டத்திலிருந்து 145 அடிக்குக் கீழே இந்த பாதாளச் சுரங்கம் மூன்று சமாந்தர பாதைகளை உடையதாக அமைக்கப்பட்டிருக்கிறது.

1996ல் தான் இந்தப் பாதையின் முழுப் பலனையும் அடைய முடியும் என்று தெரிகிறது. அக்கால கட்டத்தில் வருடம் ஒன்றுக்கு 20 இலட்சம் மோட்டார் கார்களில் 80 இலட்சம் மக்கள் பயணம் செய்வார்கள். 45 இலட்சம் பஸ் பயணிகள் செல்ல முடியும்.

சுரங்கப் பாதைக்குள் நேரடியாக மோட்டார் வாகனங்கள் செல்லுவதற்கில்லை. அப்பாதையில் செல்லும் மோட்டார் வாகனங்களுக்குள் பயணிகள் அமர்ந்தபடியே இருக்க அவ்வண்டிகள் ரயிலில் ஏற்றப்படும். அந்த ரயிலே வாகனங்களை அக்கரை கொண்டு சேர்க்கவிடும்.

1751ல் ஃபிரான்ஸ் நாட்டு பொறியியலாளர் நிக்கோலஸ் டெஸ்மாரட் இதற்கான ஆரம்ப ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினார். விக்டோரியா சகாப்தத்தில் பிரிட்டிஷ் பொறியியலாளர்கள் பாராளுமன்ற வளாகத்துக்கு முன்புறத்தில் சுரங்கப்பாதை அமைக்கும் பணியினைத் தொடங்கி ஒரு மைல் தூரம் குடைந்தும் விட்டனராம். சுரங்கப் பாதை அமைந்தால் ஃபிரெஞ்சுப் படைகள் அதன் வழி புகுந்து இங்கிலாந்தை ஆக்கிரமித்துவிடக்கூடும் என்று பயந்து அந்தத் திட்டம் உடனடியாகக் கைவிடப்பட்டுவிட்டதாம்.

1950 நடுப்பகுதியில் ஒரு குழு அமைக்கப்பட்டு சுரங்கப்பாதை அமைப்புக்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டன. இருப்பினும் பல தடைகளின் பின்னர் 1967ல் திட்டத்துக்கு பச்சைக்கொடி காட்டப்பட்டது. 1970ல் சுரங்கப்பாதை அமைப்புக்கான பூர்வாங்கப் பணி தொடங்கியது. ஆனாலும் நிதி நெருக்கடி காரணமாக ஒத்தி வைக்கப்பட்டு மீண்டும் 1985ல் பணி துவங்கியது. ■

## போதும் போர் போதும்!



பொஸ்னியாவில் உள்ள செர்பிய படைவீரர்களுக்கு போர் வெறுத்துவிட்டது. இவர் இவர் மோட்டார் ஷெல் ஒன்றில் பூச்செடிகளை வைத்து அழகு பார்க்கிறார். போரை நிறுத்து. பூக்களை விதை. முட்கள் எதற்கு?

## முறிந்த உறவு!

அமெரிக்காவில் ஒரு ஜோடியினர் ஒரே ஒரு நிமிடம் மட்டுமே திருமண வாழ்க்கை வாழ்ந்து சாதனை படைத்துள்ளனர். திருமணப் பதிவாளர் அலுவலகத்தில் திருமணம் செய்துகொண்ட அவர்களிடையே மறுவினாடி திடீரென வாக்குவாதம் ஏற்பட்டது. மணமக்கள் இருவரும் ஒருவரையொருவர் காரசாரமாகத் திட்டிக்கொண்டனர். உடனே பக்கத்து அறையில் இருந்த வக்கீலை அணுகி விவகாரத்து பெற்றுக்கொண்டனர்.


அவர்கள் சண்டைக்குக் காரணம் என்ன தெரியுமா? மணமகன் மணமகளைப் பார்த்து, "உன் அம்மா ரொம்ப குண்டு," என்றானாம், அதன் விளைவு மறு நிமிடமே விவாகரத்து. ●

## இம்ரான்கானின் இலட்சியக் கனவு!

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் இம்ரான்கான் தனது இலட்சியக் கனவுகளில் ஒன்றை நிறைவேற்றும் நிலையில் இருக்கிறார். தனது தாயார் பெயரில் லாகூரில் கட்டி வரும் புற்றுநோய் ஆஸ்பத்திரியை அவர் இந்த ஆண்டு இறுதிக்குள் திறந்து விடத் தீர்மானித்துள்ளார்.

கவாஸ்கர், இயன் சப்பல், றிச்சர்ட் ஹாட்லி ஆகிய வீரர்களைப்போல குறிப்பிட்ட காலத்திற்குள் கௌரவமாக கிரிக்கெட் வாழ்க்கையில் இருந்து ஒதுங்கி விட்ட இம்ரான்கான் பாகிஸ்தான் நாட்டு மக்கள் மீது அளவு கடந்த பிரியம் வைத்துள்ளார்.

பாகிஸ்தான் மக்களுக்காகப் புற்றுநோய் ஆஸ்பத்திரி கட்டி இருக்கும் அவர், அடுத்த கட்டமாகப் பாகிஸ்தான் முழுவதும் சென்று கல்வி அறிவில்லாத மக்களுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுக்கும் இயக்கத்தைத் தொடங்கப் போகிறாராம். தற்போது பாகிஸ்தான் முழுவதும் 25 சதவீத மக்களே




கல்வியறிவு பெற்றவர்களாக உள்ளனர். அந்த எண்ணிக்கையைத் தனது பிரசாரம் மூலம் உயர்த்த முடியும் என்று இம்ரான்கான் நம்புகிறார்.

## ஸ்போர்ட்ஸ்

## ஓய்வுக்கு விடை! மறுபடி வருகிறார்

கடந்த ஆறு மாதத்திற்கு முன் டென்னிஸ் விளையாட்டில் பங்குகொள்வதிலிருந்து விலகியிருந்த அமெரிக்காவைச் சேர்ந்த ஜெனிபர் கப்ரியாட்டி மீண்டும் டென்னிஸ் விளையாட தொடங்கவுள்ளார்.



ஜெனிபர் பள்ளித் தேர்வுக்காகப் படித்துக் கொண்டிருந்ததால்தான் அவர் விளையாடாமல் இருந்தார் என்றும் இப்போது பயிற்சிகளில் கலந்து கொண்டு இம்மாதம் 23ம் திகதி தொடங்கும் பிரெஞ்சு ஓப்பன் போட்டிகளில் பங்கு கொள்வார் என்றும் ஜெனிபர் கப்ரியாட்டின் தந்தை ஸ்டிபானோ தெரிவித்தார்.

## கால்பந்து களத்தில் மேலும் 8 அணிகள்



பிரான்ஸில் 1998ம் ஆண்டு நடக்கவிருக்கும் உலகக் கோப்பை கால்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்ளும் அணிகளின் எண்ணிக்கையை 24ல் இருந்து 32 ஆக உயர்த்த உத்தேசித்து வருவதாகச் சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் தலைவர் ஜோவே ஹேவலான்ஜே கூறியுள்ளார். போட்டியில் கலந்து கொள்ளும் அணிகள் 8 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் 4 அணிகள் வரை இடம்பெறும். ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் அடுத்த சுற்றுப் போட்டிக்குத் தகுதி பெறும். இந்தப் போட்டிகளை நடத்துவதற்கு 8 நகரங்கள் தேர்வு செய்யப்படும் எனவும் அவர் கூறினார்.

உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியில் ஐரோப்பாக் கண்டத்திலிருந்து மட்டும் 13 நாடுகள் இடம்பெற்றுள்ள போதும் இனிமேல் விஸ்தரிக்கப்படும் அணிகளின் பட்டியலில் மீண்டும் ஒரு போட்டியில் கலந்துகொள்ளும் வாய்ப்பு அளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் ஆசியா கண்டத்தின் சார்பாக இரு நாடுகளும், ஆபிரிக்கா கண்டத்தின் சார்பாக மூன்று நாடுகளும் மட்டுமே இடம்பெற்றுள்ளன. எனவே இந்த இரு கண்டங்களும் அணிகள் விஸ்தரிப்புப் பட்டியலில் இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென வற்புறுத்தி வருகின்றன. ●

அலசுவது – இராஜதந்திரி

# இலங்கைக்குப் படிப்பினையாகும் தென்னாபிரிக்க, இஸ்ரேல் அரசியல் மாற்றங்கள்!

அடக்குமுறைகள், அராஜகம் என்பன என்றோ ஒருநாள் மண்கவ்வியே தீரும் என்பதை எடுத்துக்காட்டுவதாகவே தென்னாபிரிக்காவில் தோன்றியுள்ள புதிய ஆட்சி விளங்குகின்றது.

தென்னாபிரிக்காவில் வெள்ளையர் ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது. கறுப்பினத்தவர்கள் டாக்டர்.நெல்சன் மன்டெலாவின் தலைமையில் ஆட்சியதிகாரங்களைத் தம்வசமாக்கியுள்ளனர்.

தென்னாபிரிக்காவில் வெள்ளையர்களிடமிருந்து, கறுப்பர்களிடம் ஆட்சி கைமாறியுள்ளது குறித்து அரசியல் விமர்சனங்கள் பல்வேறு கோணங்களிலும் வெளியாகியுள்ளன.

ஆனால் இந்த ஆட்சிமாற்றத்தை விமர்சிப்பதாயின் அடக்குமுறையாளர்களிடமிருந்து, அடக்கி ஆளப்பட்டவர்களிடம் ஆட்சி கைமாறியுள்ளது எனக் குறிப்பிடுவதே மிகப் பொருத்தமானதாகும்.

17ம் நூற்றாண்டில் ஆபிரிக்கக் கண்டத்தின் 'தென்கோடி'ப் பிரதேசமான தென்னாபிரிக்கா ஆங்கிலேய மற்றும் வெள்ளையர்களின் குடியேற்றத்துக்குள்ளாகியது.

இந்த வெள்ளை இனத்தவர்கள் தென்னாபிரிக்காவின் பெறுமதிமிக்க இயற்கை வளங்கைக் கண்டறிந்தனர்.

தங்க, வைரச்சுரங்கங்களாக ஜொலித்த தென்னாபிரிக்காவின் மூலவளங்களை இந்த வெள்ளையினத்தவர்கள் நன்கு சுரண்டியிருந்ததுடன், நாளடைவில், தமது ஆதிக்கத்தையும் தென்னாபிரிக்காவில் விஸ்தரித்திருந்தனர்.

வெள்ளையினத்தவர்களின் ஆதிக்கம் தென்னாபிரிக்க கறுப்பினத்தவர்களை தீண்டத்தகாதவர்களாக மாற்றியிருந்தது.

கறுப்பினத்தவர்கள் காட்டுமிராண்டிகளாகவே தென்னாபிரிக்க வெள்ளையர்களினால் கருதப்பட்டிருந்தனர். அவர்களின் அனைத்து உரிமைகளும் மறுக்கப்பட்டிருந்தன.

தென்னாபிரிக்க மக்கள் அவர்களின் பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து அடித்து விரட்டப்பட்டிருந்தனர்.

காலத்துக்குக் காலம் கறுப்பினத்தவர்கள் மீது தென்னாபிரிக்கப் படையினர் கடும்போக்கைக் கடைப்பிடித்து கண்மூடித்தனமாக நடந்து கொண்டிருந்தனர்.

கறுப்பினத்தவர்களின் உரிமைக் குரல்களுக்கு வெள்ளையர்களின் துப்பாக்கி வேட்டுக்களே பதிலளித்தன. கறுப்பர்களின் குடிமனைப் பகுதிகளை வெள்ளை இனத்தவர்களின் கவச வாகனங்கள் ஊடறுத்துச் சென்று அட்டகாசங்கள் புரிந்தன.

கடந்த முந்நூறு ஆண்டுகளில் எண்ணிலடங்காத கறுப்பினத்தவர்கள் வெள்ளையர்களினால் வேட்டையாடப்பட்டிருந்தனர்.

தென் ஆபிரிக்க கறுப்பினத்தவர்களின் உரிமைப் போராட்டத்தில் மகாத்மா காந்தியும் பங்கு கொண்டிருந்தார். மகாத்மா காந்தி தென்னாபிரிக்காவில் இளம் வழக்கறிஞராக தொழிலை ஆரம்பித்த காலத்தில் பல்வேறு இனரீதியிலான நெருக்கடிகளுக்கும் உள்ளாகியிருந்தார்.

தென்னாபிரிக்காவில் கறுப்பர்களின் உரிமைப் போராட்டத்துக்கு ஒத்துழைத்த பின்னரே, இந்தியா திரும்பி இந்தியர்களின் சுதந்திரப் போராட்டத்தை காந்தி முன்னின்று வழி நடத்தியிருந்தார்.

இன்று தென்னாபிரிக்காவில் வெள்ளையர்களின் ஆட்சி அஸ்தமித்துள்ளது. தென்னாபிரிக்காவின் புதிய தலைவராக நெல்சன் மன்டெலா பதவியேற்றுள்ளார்.

நெல்சன் மன்டெலா தென்னாபிரிக்காவில் பெரும்பான்மை கறுப்பர்களினதும், அவர்களை ஆண்டுவந்த வெள்ளையர்களினதும் ஜனாதிபதியாக இன்று காணப்படுகின்றார்.

ஆனால் தென்னாபிரிக்காவின் இனவாத வெள்ளையர்களினால் 1963ம் ஆண்டிலிருந்து 1990ம் ஆண்டுவரை நெல்சன் மன்டெலா 27 ஆண்டுகள் சிறை வைக்கப்பட்டிருந்தார்.

இது தவிர பல கறுப்பின தீவிரவாதத் தலைவர்கள் வெள்ளை இன ஆட்சியாளர்களினால் கொல்லப்பட்டிருந்தனர்.

தமது ஆயுதபலம், மற்றும் பணபலம் என்பவற்றினால் வெள்ளையர்கள் தென்னாபிரிக்க கறுப்பர்களை மிக மோசமான முறையில் அடக்கி ஒடுக்கியிருந்தனர்.

இன்று தென்னாபிரிக்காவில் இன நிற வேறுபாடுகள் தற்போது முடிவுக்கு வந்துள்ளன. வெள்ளையர்களும், கறுப்பர்களும் ஒன்று கலந்து சமத்துவத்துடன் கூடிவாழும் நிலை தோன்றியுள்ளது.

தென்னாபிரிக்காவின் உரிமைப் போராட்டம் உலக அரங்கில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகக் காணப்படுகின்றது.

அத்துடன் இந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதி தசாப்தத்தில் இடம்பெற்ற ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகவும் தென்னாபிரிக்காவின் ஆட்சி மாற்றம் விளங்குகின்றது.

ஜனாதிபதி நெல்சன் மன்டெலா தென்னாபிரிக்க கறுப்பினத்தவர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்திருந்த வேளை, தீவிரவாத நடவடிக்கைகளிலும் கறுப்பினத்தவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

வெள்ளை இனத்தவர்கள் கறுப்பர்களுடன் அரசியல் ரீதியிலான அணுகுமுறைகள் எதற்கும் முன்வரவில்லை.

கறுப்பினத்தவர்களின் உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்தவர்களில் பலர் தலைமறைவாகவே இருந்து தமது நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.


எனவே தென்னாபிரிக்காவில் வெள்ளையர்களின் ஆட்சிக்கெதிராக மிதவாதமும், தீவிரவாதமும் ஒன்று கலந்த நிலையிலேயே போராட்டங்கள் இடம்பெற்றிருந்தன.

இருந்த போதிலும் கறுப்பினத்தவர்களின் நம்பிக்கைக்குரிய தலைவரான ஜனாதிபதி நெல்சன் மன்டெலா தீவிரவாதிகளையும், மிதவாதிகளையும் ஒருங்கிணைத்த நிலையில் சகல தரப்பினரையும் ஒன்றிணைத்தே கறுப்பினத்தவர்களின் போராட்டத்தை தலைமை தாங்கியிருந்தார்.

வெறிபிடித்த, மூர்க்கத்தனமான, தீவிரவாதப் போக்கை நெல்சன் மன்டெலா நிராகரித்திருந்தார். ஆயுதப் போராட்டம் அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டுமென்பதில் அவர் அக்கறை காட்டினார்.

தென்னாபிரிக்காவில் பெரும்பான்மையினத்தவர்களான கறுப்பர்களின் உணர்வுகள் முற்று முழுதான தீவிரவாதமாக மாறக்கூடாது என்பதில் நெல்சன் மன்டெலா உறுதியாக இருந்தார்.

இருபத்தியேழு ஆண்டுகள் வெள்ளை இன ஆட்சியாளர்களால் சிறை வைக்கப்பட்டிருந்தவரே நெல்சன் மன்டெலா. தமது 44வயதில் சிறை சென்ற நெல்சன் மன்டெலா தமது மனைவி, குடும்பத்தவர்கள் மற்றும் சுகபோகங்கள் அனைத்தையும் இழந்திருந்தார்.


யாசீர் அரபாத்

ஆயினும் சிறை வாழ்க்கையின்போது அவர் தமது சுதந்திர உணர்வுகளை சிறைவைத்து விடவில்லை. அந்த உணர்வுகளை சிறைக்குள்ளிருந்தே சிறகடிக்க விட்டிருந்ததுடன், தென்னாபிரிக்க மக்களின் சுதந்திர வேட்கைக்கு உரமூட்டுபவராகவே நெல்சன் மன்டெலா விளங்கியிருந்தார்.

தென்னாபிரிக்காவில் கறுப்பினத்தவர்கள் தமது உரிமைப் போராட்டத்தை தீவிரப்படுத்தியதையடுத்து, வெள்ளை இனத்தவர்கள் தமது கெடுபிடிகளை தளர்த்த வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளானார்கள்.

இதன் விளைவாகவே இன்று தென்னாபிரிக்காவில் இன-நிற ரீதியிலான வேறுபாடுகளை முடிவுக்குக் கொண்டுவந்த இரு முக்கிய தலைவர்களாக தென்னாபிரிக்க வெள்ளையரின் இறுதி ஜனாதிபதியான திரு.டி..கிளேர்க், மற்றும் பேதங்களற்ற தென்னாபிரிக்காவின் முதல் ஜனாதிபதியான நெல்சன் மன்டெலா ஆகியோர் விளங்குகின்றனர்.

தென்னாபிரிக்காவில் நிறவெறி ஆட்சி முடிவுக்கு வந்துள்ள இத்தருணத்திலேயே மத்திய கிழக்கில் இஸ்ரேல்-பாலஸ்தீன விவகாரத்திலும் முன்னேற்றகரமான மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றன.

பாலஸ்தீனர்கள் தமது பாதுகாப்பை நிர்ணயிக்கும் வகையில் தமக்கென பொலிஸ் படையொன்றை உருவாக்கியுள்ளனர்.

இப் பொலிஸ் படையின் ஆரம்பம் பாலஸ்தீனர்களின் சுயாட்சிப் போராட்டத்தில் ஒரு திருப்பு முனையாக இருக்கக் காணப்படுகின்றது.

இதுவரைகாலமும் இஸ்ரேலியர்களின் அடக்குமுறைகளுக்கும், ஊடுருவல்களுக்கும் உள்ளாகியிருந்த பாலஸ்தீன மக்கள் இன்று தமது பாதுகாப்பை தாமே நிர்ணயிக்கும் உரிமையுடையவர்களாகியுள்ளனர்.

இஸ்ரேலிய பாதுகாப்புப் படையின் மீது மறைந்திருந்து கெரில்லாப் போராட்டங்களை நடத்திய பாலஸ்தீனர்கள் இன்று சீருடையில் சட்டபூர்வமாக ஆயுதந்தரித்திருக்கக் காணப்படுகின்றனர்.

கடந்த ஆண்டின் இஸ்ரேலிய-பாலஸ்தீன சமாதான ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே தற்போது பாலஸ்தீனர்கள் தமக்கென சட்டபூர்வமான பொலிஸ் படையைக் கொண்டுள்ளார்கள்.

இலங்கையிலும் கடந்த சில தசாப்தங்களாக நிலவி வரும் இனப்பிரச்னை கடந்த பத்து வருடகாலத்தில் தீவிரவாதப் போக்கைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

இலங்கையில் இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட சகல முயற்சிகளும் எதுவித பலனையும் தராதவையாக இருக்கக் காணப்படுகின்றன.

இலங்கையில் இதுவரை காலமும் ஆட்சியிலிருந்தோர் உட்பட தற்போது ஆட்சியிலிருப்பவர்களும் இனப்பிரச்னையை தீர்க்க முடியாதவர்களாகவே காணப்படுகின்றனர்.

இந்நிலையில் இலங்கை இனப்பிரச்னையை தகுந்த வகையில் அணுக முடியாத நிலையில் நேர்த்தியான தீர்வுத் திட்டங்களை கொண்டிராத இலங்கையின் அரசியலாளர்களுக்கு தென்னாபிரிக்காவிலும், மத்திய கிழக்கிலும் இடம்பெற்றுவரும் மாற்றங்கள் நல்ல முன் உதாரணங்களாக இருக்கின்றன.

இலங்கையின் இனப்பிரச்னை ஒரு ஆயுதப் போராட்டமாக மாற்றமடைந்ததையடுத்து, இப்போராட்டத்தைக் கையாள இலங்கை ஆட்சியாளர்கள் பல்வேறு வழிவகைகளையும் கையாண்டிருந்தனர்.

இஸ்ரேல், தென்னாபிரிக்காவில் இருந்துகூட இலங்கையின் ஆட்சியாளர்கள் இராணுவ ரீதியான உதவிகளைப் பெற்றிருந்தனர்.

இஸ்ரேலிய இராணுவ நிபுணர்களின் உதவி இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் நாடப்பட்டிருந்தது. குண்டுவீச்சு விமானங்களை ஓட்டுவது, மற்றும் நவீன தன்னியக்க ஆயுதங்களைக் கையாளுவது, தாக்குதல் வியூகங்களை அமைப்பது போன்ற துறைகளில் இஸ்ரேலிய இராணுவ நிபுணர்கள் இலங்கைப் பாதுகாப்புப் படையினருக்குப் பயிற்சிகளை வழங்கியிருந்தனர்.

இதுதவிர தென்னாபிரிக்காவில் இருந்தும் 'பவலோ கவச வாகனங்கள்' (Buffalo Armoured Vehicles) என்ற கனரக கவச வாகனங்களை இலங்கை அரசு கொள்வனவு செய்திருந்தது.

தென்னாபிரிக்க படையினரின் பாவிப்பிலுள்ள முக்கிய இராணுவ சாதனமாகவே 'பவலோ கவச வாகனங்கள்' காணப்படுகின்றன.



**இஸ்ரேலிய ஆலோசனைகளையும் தென்னாபிரிக்க கவச வாகனங்களையும் பெற்ற இலங்கை அரசு, அந்நாடுகளின் அரசியல் முன்மாதிரிகளையும் பின்பற்றவேண்டும்!**

அண்மைக்காலம்வரை தென்னாபிரிக்க வெள்ளை இன ஆட்சியாளர்கள் கறுப்பினத்தவர்களின் போராட்டங்கள், கலகங்களை அடக்க 'பவலோ கவச வாகனங்களை'யே பயன்படுத்தியிருந்தனர்.

இலங்கைப் படையினரும் இத் தென்னாபிரிக்க பவலோ கவச வாகனங்களைப் பயன்படுத்தி வடக்கு-கிழக்கில் யுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

இவ்வாறு இஸ்ரேலிய, தென்னாபிரிக்க உதவிகளுடன் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெறமுடியாத நிலையிலேயே இலங்கை அரசு இருந்து வருகின்றது.

இலங்கைக்கு இராணுவ ரீதியாக உதவிகளை வழங்கிய நாடுகளான இஸ்ரேல், தென்னாபிரிக்கா ஆகியன அண்மைக் காலங்களில் தத்தமது பிரதேசங்களில் இனத்தகராறுகளைத் தீர்ப்பதில் துணிச்சலுடன் ஈடுபட்டிருந்தன.

இத்தகைய துணிச்சலான நடவடிக்கைகள் காரணமாகவே இன்று மத்திய கிழக்கில் பாலஸ்தீனர்களுக்கும், இஸ்ரேலியர்களுக்குமிடையிலான பிளவுகள் சுருக்கமடைய ஆரம்பித்துள்ளன.

தென்னாபிரிக்காவிலும், பெரும்பான்மை கறுப்பினத்தவர்களின் உணர்வுகள், உரிமைகளை மதித்து வெள்ளையர்களும் இன, நிற பேதமற்ற சமத்துவ ஆட்சி உருவாக ஒத்துழைத்துள்ளனர்.

ஆனால் இலங்கையில் இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கான நடைமுறைகள் காத்திரமற்றிருப்பதுடன் ஆட்சியாளர்கள் இனப்பிரச்னையை மேலும் சிக்கலாக்கி வருகின்றனர்.

இராணுவ ரீதியிலான அணுகுமுறைகளை இலங்கை அரசு முன்னெடுக்கலாம். ஆயினும் அந்த அணுகுமுறை அநியாய உயிரிழப்புகளுக்கே வழிவகுக்கும் என்பதனையே கடந்தகால அனுபவங்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

இந்நிலையில் இலங்கை இனப்பிரச்னை விடயத்திலும் மத்திய கிழக்கு, தென்னாபிரிக்காவில் பின்பற்றப்பட்ட நடைமுறைகளே நல்ல முன்னுதாரணங்களாக இருக்கின்றன.

எனவே இஸ்ரேல் மற்றும் தென்னாபிரிக்காவிலிருந்து இராணுவ உதவிகளைப் பெற்ற இலங்கை அரசு, இன்று அந்நாடுகளின் துணிச்சலான அரசியல் நடவடிக்கைகளைப் பின்பற்றி இலங்கை இனப்பிரச்னைக்கும் தீர்வு காண முயலுவதே காலத்துக்கேற்ற நடவடிக்கையாக அமைய முடியும். ●

# எதிரி தப்பிக்கொள்ள முடியாது!

## பெண் குத்துச்சண்டை வீரர்கள்




படத்தில் லின்டா கரோல் (வலதுபுறம்) ஜோன்னெஸ்சின் மூக்கை லின்டா உடைக்கிறார். பெண்ணாலும் முடியும்!

இதுவரை காலமும் குத்துச் சண்டை ஆண்களுக்கான விளையாட்டாகவே இருந்து வந்தது. ஆனால் இப்போதெல்லாம் பெண்களும் களத்தில் குதித்துவிட்டார்கள். அண்மையில் இங்கிலாந்தில் நடைபெற்ற பெண்களுக்கான குத்துச் சண்டைப் போட்டியில் இரண்டுபேர் கொண்ட அணியினர் சண்டையிட்டனர்.

இந்தப் போட்டியில் பிரிட்டனைச் சேர்ந்த மென் எடை வீராங்கனையான டோன் டேவிஸ் கலந்து கொண்டார். அவர் சண்டையிடும்போது இவருடைய தோற்றத்தை அவதானிப்பவர்கள், இவர் உண்மையிலேயே சண்டையிடுகிறாரோ என்றுதான் ஐயுறுவார்களாம்.

"நான் என் எதிராளியைத் தாக்கும் போது பார்வையாளர்கள் அதிசயிப்பார்கள். நான் நல்ல உயரமாகவும் மெலிந்தும் காணப்படுவதால் எதிரியின் தாக்குதல்களிலிருந்து சுலபமாகத் தப்புவதுடன் எதிர்க்கு என் தாக்குதல்களிலிருந்து தப்பிவிட முடியாத நிலையும் ஏற்படுகிறது. இதனால் அவர்களை எளிதில் என்னால் வெல்ல முடிகிறது" என்கிறார் டோன்.

# மீன் விழிகள் மேலும் சிறக்கும்



பெண்ணுக்குக் கண் அழகு என்பார்கள். பெண்களின் இடையை அடுத்து கவிஞர்கள் வர்ணிப்பது கண்களைத்தான்.

கண்கள் சுருக்கமில்லாமல், கருமை நிறம் படராமல், வீக்கம் இல்லாமல் 'பளிச்' என்று இருக்க இங்கே சில யோசனைகள்:

பழக்க வழக்கங்கள், உணவு ஆகியவை தான், இயற்கையாகவே பெண்கள் அழகாய் இருப்பதற்கு அடிப்படைக் காரணம். சுத்தமான பச்சைக் காய்கறிகளை அதிகம் சாப்பிட வேண்டும். நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும்.

தினசரி உடற்பயிற்சி, தேவையான அளவு நல்ல தூக்கம் ஆகியவையும் இருந்தால் கண்கள் மிக இளமையாக இருக்கும்.

அழகான கண்களைப் பெற விரும்புபவர்கள் தேனீர் தயாரித்த பிறகு மிஞ்சும் தேயிலையைத் தூரப்போட்டு விடாமல் அதைச் சிறிதளவு தண்ணீரில் கலக்கிக் குளிர வைத்து, பின்னர் பஞ்சு வைத்த பருத்தித் துணியில் அந்தத் தண்ணீரைத் தொட்டுக் கண்களை ஒற்றி எடுத்துவர வேண்டும்.

இதே போல் வெள்ளரிக்காயை ஜூஸ் செய்து துணியால் கண்களை ஒற்றி எடுக்கலாம். அல்லது வெள்ளரிக்காயைத் துண்டு துண்டாக நறுக்கி அதை அப்படியே கண்களில் ஒற்றி எடுக்கலாம்.

கண்கள் வீங்கி இருப்பவர்கள் உருளைக் கிழங்கை வெட்டித்துண்டு துண்டாக்கியோ அல்லது ஜூஸ் செய்தோ கண்களை ஒற்றிவர குணமாகும்.

# நிலவு முகம் செழிப்பதற்கு ஒரு யோசனை!



- உடலில் தேவையில்லாமல் முடி வளர்ந்து இருப்பதாக நினைக்கிறீர்களா? ஒரு மேசைக்கரண்டி எலுமிச்சம் பழச்சாறு, ரோஸ்வோட்டர், அரை மேசைக்கரண்டி தேன் மூன்றையும் கலந்து முடியுள்ள இடத்தில் தேய்க்க வேண்டும். 15 நிமிடம் கழித்து குளித்து வந்தால் பலன் கிடைக்கும்.
- இது கோடை காலம் என்பதால் சந்தனத்தை உடலில் அடிக்கடி தேய்ப்பது நல்லது. வியர்வை நாற்றம் மறைவதோடு தோலும் மிருதுவாக பளபளப்பாக மாறும்.
- முகத்தை மலர்ச்சியுடன் பளபளப்பாக வைத்துக்கொள்ள வாரத்திற்கு 2 தடவை முகத்தில் தக்காளிப் பழகத்தைத் தேய்த்து (15 நிமிடம் கழித்து) குளித்தாலே போதும்.
- கறுப்பாக இருக்கிறோமே என்று கவலைப் படுகிறீர்களா? அதை ஒரு போதும் நீக்க முடியாது. ஆனால் அந்தக் கருமையைக் கொஞ்சம் குறைக்க முடியும். பாதியாக வெட்டப்பட்ட எலுமிச்சம் பழத்தை உப்பில் தடவி உடலில் தேய்த்து வாருங்கள். பின்னர் நீங்களே ஆச்சரியப்படும் வகையில் கறுப்பு நிறம் மாறும்.

அரைக்கோப்பை முள்ளங்கிச்சாறு, சிறிது உப்பு, மற்றும் எலுமிச்சை சாறு கலந்து தினமும் குடித்து வரவேண்டும். 40 நாட்கள் இவ்வாறு செய்துவர உடலில் உள்ள தேவையற்ற சதைகள் கரைந்து அழகாகி விடலாம்.

வசதி உள்ளவர்கள் தங்கள் முகப் பளபளப்பிற்கு அப்பிளைத் துண்டு துண்டாக வெட்டிப் பயன்படுத்தலாம்.

உங்கள் தோல் கெட்டியாக கரடு-முரடுபோல உள்ளதா? வாதுமை எண்ணெயைப் படுக்கப் போகும் முன்பு தேய்த்து வந்தால் தோல் மென்மையாகிவிடும்.

# அழகுபெற உதவும் விளம்பர உத்தி!



மிக்ஸி, கிரைண்டர், கார், ஸ்கூட்டர் ஆகியவற்றிற்கு மட்டும் அல்ல, இனி உங்கள் முகத்திற்கும் இலவச சேர்வீஸ் உண்டு.

ஆமாம், இலவச சேர்வீஸ் இல்லாமல் எந்தப் பொருட்களையும் விற்பது சிரமம்தான் என்கிற காலகட்டத்தில் சில அழகு சாதன நிறுவனங்கள் இப்போது இந்தப் புதிய யுக்தியைக் கையாளுகின்றன.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான். அந்தப் பிரபல நிறுவனங்களின் பிரத்தியேக விற்பனைக் கூடத்தில் நீங்கள் அழகு சாதனப் பொருட்கள் வாங்க வேண்டும்.

இப்போது நீங்கள் அவர்களது வாடிக்கையாளராகி விடுகிறீர்கள். இனி அடிக்கடி அந்த நிறுவனத்தின் அழகு பெண்கள் உங்களுக்கு இலவச முகாம் நடத்துவார்கள். முகத்திற்குப் பவுடர் தடவி, கண்ணுக்கு மை வைத்து, உதட்டிற்குச் சாயம் பூசி - இப்படித் தொடர்ந்து உங்களுக்கு நல்ல பல ஆலோசனைகளையும் வழங்குவார்கள்.

இந்த யுக்தி இப்போது இந்தியாவில் பம்பாய்க்கு மேற்கே நடந்துகொண்டிருக்கிறது. இது விரைவில் தமிழ் நாட்டிற்கும் வந்துவிடும். அதன் பின்னர் இங்கும் வரக்கூடும்.

## சமைப்போம் சுவைப்போம்

**தொகுத்துத் தருவது-சுகந்தினி**

### கேசரி

**தேவையானவை:**

ரவை- 1 1/4 தம்ளர்
மாஜரின்- 1/4 றாத்தல்
சீனி- 1 1/4 தம்ளர்
நீர்,பால்- 4 தம்ளர்
பிளம்ஸ்- 100 கிராம்

கேசரி பவுடர், உப்பு- அளவாக

**செய்முறை:**

மாஜரீனை உருக்கி எடுத்து வைக்க வேண்டும். பின் ரவையை சிறிது வறுத்து எடுத்துவைக்கவும். பின் பால், சீனி, தண்ணீர், கேசரி பவுடர், உப்பு போட்டு கொதிக்க வைக்க வேண்டும். கொதித்து வரும்போது ரவையை சிறிது சிறிதாக கொட்டி பின் உருக்கிய மாஜரீனை ஊற்றி நன்கு கிண்ட வேண்டும். கடைசியாக பிளம்ஸ் போட்டு இறக்கி பட்டர் பூசிய தட்டில் ஊற்றவும்.

### மரவள்ளி சிப்ஸ்

மரவள்ளி–1 இறாத்தல்,

சீனி– 100 கிராம்,
தே.எண்ணெய்–1/2 போத்தல்


மரவள்ளி கிழங்கை அவித்து சிறுசிறு துண்டுகளாக வெட்டி. காய வைக்கவும். சீனியை சிறிது நீர் விட்டு காய்ச்சவும். மரவள்ளியை பொரித்த பின் காய்ச்சிய சீனி பாகுக்குள் போட்டு கிளறி அடுப்பில் இருந்து இறக்கவும்.

## லேடீஸ் ஸ்பெசல்


## வீட்டுக் குறிப்புகள்



ஒரு வித்தியாசமான 'சான்விட்ச்' செய்ய விருப்பமா? காரட்டை துருவிக் கொள்ளுங்கள். தேன் போட்டு கலந்து கொள்ளுங்கள். இதை பாண்துண்டில் ஜாம் தடவுவது போல தடவி சாப்பிட்டுப் பாருங்கள். சுவையாக இருக்கும். குழந்தைகள் மிகவும் விரும்புவார்கள். உடலுக்கும் நல்லது.



குழந்தைகளின் படுக்கை அறையில் ஜன்னல்களுக்கு திரைச் சீலையை போட்டு வையுங்கள். பகல் நேரத்தில் ஜன்னல் கதவுகளை திறந்து விட்டு, திரைச்சீலையை கொண்டு ஜன்னலை மூடி விடவும், இதனால் காற்று வருவதோடு, வெளிச்சம் மட்டுப் படுத்தப்பட்டு, குழந்தை நிம்மதியாக தூங்க முடியும்.



ஃபிளவர் வாசில் அன்று மலர்ந்த புத்தம் புது மலர்களை வைத்து அழகு செய்பவர்களா நீங்கள்? அப்படி பூக்களை வைக்கும்போது, நல்ல வாசனையுள்ள 'சென்'டை பூக்களின் மீது தெளித்து வைக்கவும். அறை முழுவதும் வாசனையாக இருப்பதோடு, வந்த விருந்தாளிகளை ஆச்சரியப்படவும் வைக்கும்.

•••

மாடிப் படிகளில் உள்ள கைப்பிடி சுவருக்கும், படியை ஒட்டியுள்ள சுவருக்கும், ஒரே நிறமுள்ள பெயின்டை பூசவும். சுவர் அலங்கார பேப்பர் ஒட்டுவதாக இருந்தாலும், ஒரே மாதிரி டிசைன் உள்ள பேப்பரை ஒட்டி விடவும். இது பார்ப்பதற்கு அழகாகவும், சிறப்பாகவும் இருக்கும்.

## நீங்களும் தைக்கலாம்

### தையல் இயந்திரத்தில் சகஜமாக ஏற்படக்கூடிய சில தவறுகள்:

### (Some Common faults in a Sewing Machine)

I. **சிரமத்துடன் இயந்திரம் வேலை செய்தல்** (The machine Working heavily):

(1) எண்ணெய்ப் பசை கொண்டு உலர்ந்து விடுதல், (2) இயந்திர நாடா (Belt) அழுத்தமாக அமைந்திருத்தல், (3) பொபின் உழலும் பகுதி ஷட்டில் ரேஸ் (Shuttle Race) செலுத்தும் பகுதியில் தெறித்தலால் விசைச்சக்கரத்தில் (Balance Wheel) அழுத்தம் ஏற்பட்டு இலேசாகச் சுழல்வது தடைபடுதல்.

இதைச் சரிப்படுத்த (1) இயந்திரப் பகுதிகளில் ஃபரபின் (Paraffin) கலந்த எண்ணெய் விட்டு இயந்திரத்தைச் செலுத்தச் சிறிது நேரத்தில் குறை நீங்கும்.

(2) பொபினை ஷட்டில் ரேஸில் (Shuttle Race) பொருத்தமாக அமைப்பதன் மூலம் சரிப்படுத்தலாம்.

II. **தையல் இயந்திரத்தால் தைக்கப்படும் துணியைச் சரிவரத் தள்ளிக் கொடுப்பதில்லை** (Machine not Feeding Corrctly):

1. இழுவிசை (Tension) அதிகப் பிடித்தமாக (Tight) இருப்பது; (2) துணியின் மேல் மிதியின் அழுத்தம் மிகக் (Pressure foot) குறைவாயிருப்பது. (3) தையல் ஒழுங்கமைக்கும் (Regulator) கருவியைத் தவறுதலாக அமைத்திருப்பது.

மேலே கூறிய குறைகளைத் திருத்தி ஒழுங்கு பெற அமைத்தால், இயந்திரம் தைக்கப்படும் துணியைச் சரிவரத் தள்ளிக் கொடுக்கும்.

III. **சிறுங்கல் தையல் அல்லது சுருக்கத் தையல் ஏற்படல்** (Puckared Seams):

(1) துணிக்குப் பொருத்தமற்று நீண்ட தையலிடல் (2) இழுவிசை (Tension) மிகப் பிடித்தமாக இருத்தல்.

மேலே கூறிய குறைகளைச் சரிப்படுத்தித் துணியின் கனத்திற்குத் தக்க தையல் நீளத்தை அமைத்தும், இழுவிசையை (Tension) ஒழுங்குபடுத்தியும் நீக்கலாம்.

IV. **கண் விட்டுத் தைத்தல்** (Looping)

(1) இதற்கு இழுவிசை மிகத் தளர்த்தியாய் இருப்பதே காரணம்; (2) அல்லது பொபின் ஒழுங்கீனமாகச் சுற்றப்பட்டதும் காரணமாய் இருக்கும்.

மேலே கூறிய குறைகளைத் தீர்த்தால், தையல் ஒழுங்கு பெற ஏற்படும்.

V. **தையல் விட்டுத் தைத்தல்** (Stitches missing): இது ஊசி மழுங்கியதனாலோ, ஊசி வளைந்ததாலோ, ஊசி தவறுதலாகப் பொருத்தப்பட்டதனாலோ, நூலுக்குப் பொருத்தமற்ற வெகு சன்னமான (Fine) ஊசியை உபயோகித்ததாலோ ஏற்படும்.

மேலே கூறிய குறையைத் தீர்க்க (1) கூர்மையுள்ள ஊசியை உபயோகிக்கலாம்; (2) வளைந்த ஊசியை நீக்கிவிட்டு, ஒழுங்கான ஊசியை அமைக்கலாம்; (3) பொருத்தமுள்ள ஊசியை உபயோகிக்கலாம்.

மேல் தையல் மிகப் பிடித்தமாய் இருத்தல் (Top thread too tight): (1) ஊசியில் தவறாக நூலிடப்பட்டமை ஒரு காரணம்; (2) அல்லது இழுவிசை (Tension) மிகப் பிடித்தமாய் இருத்தல்.

மேல் இழுவிசையைச் சரிப்படுத்த இழுவிசைத் திருகை இடப்புறம் திருப்ப இழுவிசை தளரும் (Loosen): வலப்புறம் திருப்ப, இழுவிசை பிடித்தமாகும் (tighten).

(3) வளைந்த ஊசியையோ அல்லது உடைந்த முனையுடைய ஊசியையோ இயந்திரத்தில் அமைத்தல். ஊசியை இயந்திரத்தில் நுழைக்கையில் ஒழுங்காகவும் சரியாகவும் கடைசி வரைக்கும் செலுத்திய பிறகு திருகைத் திருப்பிப் பிடிமானப் படுத்தவும்.

மேலே கூறிய குறைகளை நீக்கத் தையல் ஒழுங்கு பெற ஏற்படும்.

கீழ் நூல் மிகப் பிடித்தமாக இருத்தல் (Under thread too tight): (1) பொபின் மிக அழுத்தமாக அல்லது மிக நிரம்ப நூல் சுற்றப்பட்டது ஒரு காரணம் ஆகையால், பொபினில் நூலிடும் பொழுது மிருதுவாகவும் (Smoothly) ஒழுங்காகவும் சுற்றப் பார்க்க வேண்டும்.


(2) பொபின் உள்ளுறை அல்லது ஷட்டில் ரேஸில் (Shuttle race) அமைந்திருக்கும் சிறு திருகாணி அவ்விழுவிசையை ஒழுங்கு படுத்துகிறது. இத்திருகாணியின் கீழ் அந்நூல் செல்லுகிறது. தையல் இயந்திரத்தைத் தயாரிக்கும் சாலையை விட்டு விற்பனைக்கு அனுப்புமுன் அதைச் சரியான இழு விசையில் அமைத்து அனுப்புகிறார்கள். அத் திருகாணியை மறு முறை திருத்தத் தேவையிருப்பின் வலப்புறமாகத் திருகினால், தளரும் (loosen); இடப் புறமாகத் திருப்பப் பிடித்தமாகும் (tighten).

*குறிப்பு:- சரியான தையலிடக் கீழ் நூலுக்கும் (பொபினிலிருந்து வெளிப்படும் நூல்) மேல் நூலுக்கும் (நூல் சக்கரத்திலிருந்து ஊசியின் மூலம் தைக்கப்படும் நூல்) இழுவிசை சம அளவில் இருக்கும்படி கவனிக்க வேண்டும்.*

ஊசி உடைதல் (Needle Breaking):

(1) துணிக்குத் தகுதியற்ற அளவு ரகமான (Type) ஊசியும் நூலும் உபயோகிக்காமை. (2) மிதி (Pressure foot) அல்லது சித்திரத் தையல் பகுதி முதலியவைகளை மிதி தண்டில் (Rod) தவறுதலாக இணைத்தல், (3) நெம்பு கோலுக்கு (Lever) மேல் முழு அளவு நூல் வெளி வந்தாலொழிய இயந்திரத்திலிருந்து துணியை எடுக்கக்கூடாது. இதைக் கவனிக்காமல் துணியை இழுத்தால் ஊசி உடைந்துவிடும்.

மேலே கூறியவைகளைக் கவனித்தால் இயந்திரத்தை உபயோகிக்கும் காலத்தில் குறை ஏற்படாது.


தங்க நகைப் பரிசுத் திட்டத்தில் பங்குபற்றி வெற்றியீட்டும் அதிஷ்டசாலிகளில் முதல் அதிஷ்டசாலிக்கு தங்க நகை காத்திருக்கிறது.

ஏனைய பத்து அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.

1. மகளிர் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
2. இல 1 முதல் 20 வரையான பரிசுத்திட்ட கூப்பன்களைச் சேகரித்து வையுங்கள்.
3. சேகரித்து வைத்துள்ள கூப்பன்களைப் பின்னர் நாம் குறிப்பிடும் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கலாம்.



# எடை கூடியதால் போடுகிறாயா தடை? உடனே எடு 15 இலட்சம்!!

## உடல் பருத்த பெண் தொடுத்துள்ள வழக்கு!

வாட்டசாட்டமான வளம் கொண்ட உடலோடு படத்தில் இருக்கும் மங்கையின் பெயர் டொப்ரா! வயது 38. அமெரிக்காவைச் சேர்ந்தவர்.

எடை 360 இறாத்தல்.

விருந்துகளுக்குச் சென்றால் இவருக்கு இருக்கை ஒன்று கொடுப்பதற்கு விருந்து ஏற்பாட்டாளர்கள் திணறிப்போவார்கள்.

அதனை டொப்ராவும் அறிவார். அதனால் விருந்துகளுக்கு செல்லும் போது வெறுங்கையுடன் செல்லாமல், தனக்காக சொல்லித் தயாரித்த விசேஷ மடக்கு நாற்காலியை கையோடு கொண்டு சென்றுவிடுவார்.

பெரும் உடலோடு கூடிய பெருந்தன்மை. ஆனால் அந்த பெருந்தன்மை திரையரங்க உரிமையாளர் ஒருவருக்கு தெரியாமல் போனதால் வந்தது தொல்லை.

15 இலட்சம் டொலர் நஷ்டஈடு கொடுக்க வேண்டிய நெருக்கடி வந்துவிட்டது அந்த திரையரங்க உரிமையாளருக்கு!

நடந்தது இதுதான்-டொப்ராவுக்கு சினிமா பார்ப்பது என்றால் கொள்ளை ஆசை.

ஆனால் திரையரங்குகளில் டொப்ரா உட்காரக்கூடிய வசதியுள்ள இருக்கை கிடையாது. எனவே முன்கூட்டியே திரையரங்க உரிமையாளர்களோடு தொலைபேசியில் பேசி, தனது மடக்கு நாற்காலியோடு வந்திருந்து படம் பார்க்க அனுமதி வாங்கிவிடுவார்.

அப்படித்தான் 'ஹைலண்ட்- 4' என்னும் திரையரங்க நிர்வாகிகளுடனும் தொடர்பு கொண்டு அனுமதி கேட்டார்.

அங்குதான் வசூல் குவிக்கும் 'ஜுராஸ்டிக் பார்க்' என்னும் படம் ஓடிக்கொண்டிருந்தது.

ஆனால் திரையரங்க உரிமையாளர் அனுமதிக்க மறுத்துவிட்டார்.

டொப்ராவுக்கு இருக்கை கொடுப்பதைவிட மேலதிகமாக மூன்று பேருக்கு ரிக்கற் கொடுக்கலாம் என்று இலாப நஷ்ட கணக்குப் பார்த்தாரோ தெரியவில்லை.

வந்தது பாருங்கள் கோபம் டொப்ராவுக்கு.

நீதிமன்றத்தில் உடனே வழக்குத் தொடுத்திருக்கிறார். படம் பார்க்கும் உரிமையை மறுத்தது, தன் உடல் பருமனை கிண்டல் செய்யும் நோக்கத்துடன் நடந்து கொண்டது, விரும்பிய படத்தை பார்க்க முடியாமல் 'மூட் அவுட்' ஆக காரணமாக இருந்தது என்று பல குற்றச்சாட்டுக்கள்.

நஷ்ட ஈடாக டெப்ரா 15 இலட்சம் கேட்டுள்ளார். பாவம் திரையரங்கு உரிமையாளர் நீதிமன்றத்திற்கு அலைந்து கொண்டிருக்கிறார். 15 இலட்சமும் கொட்டியழ வேண்டி வருமோ தெரியவில்லை.


உடல் பருமன் கொண்டவர்களை கிண்டல் செய்வோர் இனிக் கொஞ்சம் யோசிக்க வேண்டும்!

## முதுகு கையானால்....?!



எந்த முதுகிலும் இல்லாத ஒன்று ஏதோ அது ஏதோ இவரிடம் இருக்கிறது. முதுகை கையாக்கி கதிரையை தூக்கி கச்சிதமாக வைத்திருக்கிறாரே... அதுவா? அதுதான். அதுவேதான்! இவர் பெயர் ஃபெரியா முண்டியால். மெக்சிக்கோவைச் சேர்ந்தவர். மெச்சவும் வைத்துவிட்டார்!

## சாயாத கோபுரம்



சாதனை படைக்க இலண்டன் வாசியான டெரிகோலுக்கு ஆசை! உடனே தன் நண்பர்களை அழைத்தார். 36 கண்ணாடி கிளாசுகளை அவர்களிடம் கொடுத்தார். அவற்றை தன் நாடியில் கோபுரம் போல அடுக்குமாறு சொன்னார். நண்பர்களுக்கு நம்பிக்கையில்லை. என்றாலும் மறுக்காமல் அடுக்கினார்கள். என்னே ஆச்சரியம்! ஒரு கிளாஸ்கூட கீழே விழவில்லை. ஆடாமல் அசையாமல் அவர் நாடியில் கண்ணாடிக் கோபுரம். கில்லாடி மனிதர் இவர்!

## தகவல் பெட்டி

### வயது ஐந்து! கொலை மூன்று!!



தந்தையுடன் ஹரேந்தர்

இந்தியாவில் பீகார் மாநிலம். அங்கேதான் இருக்கிறது பொடியா என்ற கிராமம்.

அந்தக் கிராமமே கடந்த வருடம் டிசம்பர் 6ம் திகதி விக்கித்துப்போய் நின்றது.

8 வயதான ஷாகிதா. அவளது 6 வயதேயான தம்பி அக்பர். 18 மாத கைக்குழந்தை. மூன்று பேரும் கொல்லப்பட்டுக் கிடந்தார்கள்.

அவர்களைக் கொன்று போட்டது யார் என்று விவரம் தெரிந்தபோது கிராமமே திகைத்துப்போனது.

5 வயதான ஹரேந்தர் சவுத்திரி. பால் வடியும் முகம். சாதுவான குணம் என்று அயலவர்களிடம் நல்ல பெயர். பிறந்து ஐந்து வருடத்தில் ஒருநாள்கூட அடம் பிடித்தது கிடையாது. பெற்றோருக்கு மகிழ்ச்சி.

அவன்தான் மூன்று பேரைக் கொலை செய்தது என்று தெரிந்தபோது நம்பத்தான் முடியவில்லை.

கொலை நடந்த அன்று அந்த மூன்று குழந்தைகளும் ஹரேந்தர் வீட்டின் முன் விளையாடிக்கொண்டிருந்தார்கள்.

"எங்க வீட்டு முன்பு விளையாடாதே போ" என்றான் ஹரேந்தர்.

ஆனால் அவர்கள் போக மறுத்து விளையாடிக்கொண்டிருந்தனர்.

அப்போதுதான் அது நடந்தது. அருகில் கிடந்த ஒரு மூங்கில் தடியை எடுத்துக்கொண்டான் ஹரேந்தர். மூன்று குழந்தைகள் மீதும் தன் கோபம் தீரும்வரை விளாசினான்.

ஓடக்கூட முடியாத அதிர்ச்சியில் அடிவாங்கி அந்த இடத்திலேயே துடித்து மடிந்தன மூன்று குழந்தைகளும்.

இப்போது ஹரேந்தர் பொலிஸ் காவலில்.

பொலிசாருக்கு குழப்பம். 6 வயதுக்கு குறைந்த சிறுவர்கள் மீது வழக்கு பதிவு செய்ய முடியாது. தண்டிக்கவும் முடியாது என்கிறது சட்டம். என்ன செய்யலாம் என்று யோசிக்கிறது பொலிஸ்.

ஹரேந்தர் சிரித்துக்கொண்டு இருக்கிறான். தான் செய்தது எத்தனை பெரிய கோரம் என்று புரியவில்லை. விவரம் தெரியாத வயது. அதுதான் சிரிக்க முடிகிறது.



## கையில் ஆடும் கண்மணி!

வளரும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும். இங்கே அப்பாவின் கையில் விளையாடும் பிள்ளையும் வரும்காலத்தில் சாகசம் செய்து சாதனைப் படிக்கட்டில் உயரும் என்பது தெரிகிறதல்லவா? ஏழுமாதக் குழந்தை. பெயர் யூடித் அலயின் என்டைன். பென்சில்வேனியாவில் உள்ள பிலடெல்ஃபியா என்னும் இடத்தில் பிறந்தது. கையில் எழுந்து நின்று விழுந்துவிடாமல் உடலை சமநிலைப்படுத்தும் பயிற்சி கொடுக்கிறார் தந்தை. பச்சிளம் அரும்பு பயிற்சியில் தேறிவிட்டது என்பதை படம் காட்டுகிறது. 'ஜிம்னாஸ்டிக்' விளையாட்டில் சாகசம் படைப்போருக்கும் இப்படித்தான் சிறுவயதிலேயே பயிற்சி தொடங்கிவிடும்.

## மீண்டும் ஒரு சுற்று

## ...தோடு சொல்லுகிறோம்



ராம்கி
படம்-சின்ன மேடம்

## சோளிக்கே பீச்சே ...

## வாலி எழுதி ...

## அண்ணனும்-தம்பியும்

## பொன்னுக்குத்தாயி

## முதல் பயணம்

## இவருக்குப் பிடித்தது!





## மாற்றப்பட்ட நாயகிகள்

## ...காந்தாரி

தமிழ் படங்களுக்கு சூட்டப்படும் வித்தியாசமான பெயர்களில் கொஞ்சம் காரமான வித்தியாச பெயரில் ஒரு படம்.

'ஆம்பிளையாடா நீங்க' இதுதாண்டா சொதி. இதுதான் பெயர்.

மலையாளத்தில் வெற்றி பெற்ற காந்தாரி என்னும் படம்தான் தமிழில் காரமான பெயரில் வந்திருக்கிறது. ஆண் ஆதிக்கத்தை எதிர்க்கும் பெண்ணின் கதை. காந்தாரியாக நடித்திருப்பவர் மாதவி. கமல், ரஜனியோடெல்லாம் ஒரு கலக்கு கலக்கிய அதே மாதவிதான். சாருஹசன், பாபு அன்டனி ஆகியோரும் நடித்துள்ளனர். மாதவி துப்பாக்கி ஏந்தியும், ஆயுதம் மூலமும் எதிரிகளின் கதைக்கு எடுக்கும் காட்சிகள் நிறைய உண்டு. இங்கும் வீடியோவில் வந்திருக்கிறது.

## படமாகும் பாடல் வரிகள்!

"உசிலம்பட்டி பெண்குட்டி முத்துப் பேச்சி" பாடல் மூலை முடுக்கெல்லாம் முணுமுணுக்கப்பட்டது. இப்போது 'உசிலம்பட்டி பெண்குட்டி' என்ற பெயரில் படம் ஒன்று தயாராகிவருகிறது. கதாநாயகன் விக்னேஷ். ஜோடியாக சுபாஸ்ரீ. மற்றும் வீ.கே.ராமசாமி, வடிவேலு, செந்தில், சில்க்ஸ்மிதா, புன்னகை சாந்தி, சார்லி, எஸ்.எஸ். சந்திரன் என்று ஒரு நட்சத்திரப் பட்டாளமே நடிக்கிறது.

## தலைவரின் படங்கள்!

நடிகரும், நடிகர் சங்கத் தலைவருமான ராதாரவி ஒரு தயாரிப்பாளர் என்பது தெரியும்.

இப்போது புதிதாக அவர் தயாரித்துவரும் படத்தின் பெயர் 'இளைஞர் அணி' புது முகங்கள் நடிக்கின்றனர்.

மற்றொரு படத்தை விசுவை இயக்குநராகப் போட்டு தயாரிக்கும் எண்ணமும் உண்டாம். இந்த இரு படங்களிலும் ராதாரவியும் நடிக்கிறார்.

## கேரளாவில் கார்த்திக்

கார்த்திக் நடித்து திரைக்கு வந்துள்ள 'சீமான்' படம் பாதகமில்லாமல் ஓடிக்கொண்டிருக்கிறது. கார்த்திக் இப்போது நடித்து வரும் படம் 'இனியெல்லாம் சுகமே' விக்கிரமன் இயக்கத்தில் கேரளாவில் படமாகி வருகிறது. கார்த்திக்கு ஜோடி பயாய அழகி பூஜா.

## எப்படியோ ஜாலிதான்

முன்னர் பிரபலமாக இருந்து தற்போது இடைக்கிடையே தலைகாட்டிவரும் சுரேன் கதாநாயகனாக நடிக்கிறார். படத்தின் பெயர் 'ஜாலி லைப்' ஆனால் படத்தில் இரண்டு கதாநாயகர்கள். மற்றவர் ஜெயராம். எப்படியோ சுரேக்கு ஜாலிதான். கதை-திரைக்கதை-வசனம் எழுதி இயக்குவது விக்ரமன். இசை-சிற்பி.



முரளி-கஸ்தூரி
படம்-ஆகாயப் பூக்கள்



"சாதிக் கொடுமைகள் வேண்டாம்-அன்பு
தன்னில் செழித்திடும் வையம்
ஆதர வுற்றிங்கு வாழ்வோம்-தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்."
-சுப்பிரமணிய பாரதியார்-



## பூங்கொத்து

பவளமல்லி கட்டிலிலே
கண்ணுறங்கு கண்மணியே
கமலமொத்த இதழினிலே
கமழுதம்மா புன்னகையே
பாரிஜாத மலருடலில்
வாரிச் செல்லும் தென்றலடி
ஆரிரோ பாடிடுவேன்
ஆம்பல் மலரே கண்ணுறங்கு
ரோஜா போன்ற கன்னங்கள்
ஜோரா மின்னல் அடிக்குதடி
கூஜா தாங்கும் பூங்கொத்து
நீதானம்மா கண்வளராய்!

அனுப்பியது: ஐ.என்.எம். நிஹ்ரீர்-புத்தளம்.



## பாப்பா முரசு சிறுகதை

# பேனா ராசி



சீனு, தனது மாமா சிங்கப்பூரிலிருந்து கொண்டு வந்து பரிசாக அளித்த அந்த நீல நிறப் பேனாவை தன் நண்பன் சோமுவுக்குக் காட்டினான். சோமுவுக்குப் பேனாவைப் பார்த்ததும் சற்றுப் பொறாமையாகவே இருந்தது. இவ்வளவு அழகிய பேனாவை இதுவரை அவன் பார்த்ததே இல்லை. அந்தப் பேனாவின் வடிவமே புதுமையாக இருந்தது. ஏழு வண்ணங்கள் கொண்ட அந்தப் பேனாவில், நேரம் காட்டும் கருவியும் இருந்தது.

"சீனு, எனக்கு இந்தப் பேனாவை ஒருநாள் இரவல் கொடுக்கிறாயா?" கெஞ்சினான் சோமு.

சீனு பேனாவைப் பின்புறமாக ஒளித்து வைத்துக்கொண்டு, "எங்க மாமா இதை யாருக்கும் இரவல் தரக்கூடாது என்று சொல்லியிருக்கிறார். நான் தரமாட்டேன்," என்று கண்டிப்பாகக் கூறிவிட்டான். சோமு ஏமாற்றத்துடன் வீடு திரும்பினான்.

சமைத்துக்கொண்டிருந்த அம்மாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, சீனுவின் பேனாவைப் பற்றியும் அதை அவன் இரவல் கொடுக்க மறுத்ததையும் சொல்லித் தனக்கும் அதே மாதிரிப் பேனா வாங்கித் தரும்படி நச்சரித்தான்.

"அப்பாவின் நண்பர் துபாயில் இருக்கிறார். அவரிடம் சொல்லி உனக்கு இதைவிட நல்ல பேனா வாங்கித் தரச் சொல்கிறேன்," என்று சமாதானப்படுத்தி சோமுவைத் தூங்க வைத்தாள் அம்மா.

பரீட்சை வந்தது. சோமு பரீட்சை எழுத எழுத அவனுடைய பேனா சரியாக எழுத வராமல் அவனைக் கஷ்டப்படுத்தியது. பாதிப் பரீட்சை எழுதும்போது மை முடிந்து விட்டது. எரிச்சல் அடைந்த சோமு, ஆசிரியரிடமிருந்து ஒரு பேனாவை வாங்கிக்கொண்டு மறுபடியும் எழுதலானான்.

சீனு, பரீட்சை நேரம் முடிவதற்கு அரைமணி நேரம் முன்பாகவே, வேகமாகப் பதில்கள் எழுதித் தாளை ஆசிரியரிடம் கொடுத்து விட்டு வெளியேறி விட்டான்.

பேனா மக்கர் செய்ததால், சோமுவினால் குறித்த நேரத்தில் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் எழுத முடியாமல் போயிற்று. மணி அடித்தும்கூட நிறுத்தாமல் எழுதிக்கொண்டே போனான். ஆசிரியர் அவனிடம் வந்து, "மணி அடித்த பிறகு எழுத அனுமதிக்கக் கூடாது எனத் தலைமை ஆசிரியர் கூறியுள்ளார்," என்றவாறு நிற்க சோமு அவசர அவசரமாக பேப்பரை மடித்துக் கொடுத்துவிட்டுப் புறப்பட்டான்.

வீட்டிற்குப் போனதும் அவனுடைய அப்பா, "பரீட்சை நன்றாக எழுதினாயா?" என விசாரித்தபோது அழுதே விட்டான். தனக்கு நல்ல பேனா இல்லாததால் சரிவர கேள்விகளுக்குப் பதில் எழுத முடியவில்லை என்பதையும், சீனுவிடம் நல்ல பேனா இருந்ததால் அவன் அரைமணி நேரத்திற்கு முன்பாகவே எழுதி முடித்ததையும் சொல்லி வருத்தப்பட்டுக்கொண்டான்.

சோமுவின் அப்பா அவனது தலையை வருடியவாறே, "வருத்தப்படாதே! விரைவில் உனக்கு ஒரு நல்ல பேனா வாங்கித் தந்து விடுகிறேன்," என்று சமாதானப்படுத்தினார்.

"சோமு! பரீட்சையில் நீ பாஸ் பண்ணுவதும், பெயில் பண்ணுவதும் உன்னுடைய பேனாவினால் இல்லை. நீ எழுதுகிறாயே அந்தப் பதில்களில்தான் உள்ளது. ஓட்டைப் பேனாவால் சரியான பதில்களையும் எழுத முடியும். நல்ல அழகான பேனாவினால் தவறான பதில்களையும் எழுத முடியும். நீ புத்திசாலி. நன்றாகவே பரீட்சை எழுதியிருப்பாய் என நான் நம்புகிறேன். கவலைப்படாமல் போய் விளையாடு," என்றார் அப்பா.

சோமு விளையாடப்போய்விட்டான். என்றாலும் அந்தப் பேனா உறுத்தலில் இருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முடியாதவனாகவே இருந்தான்.

பரீட்சை முடிந்து முடிவுகள் வந்தன.

மாணவர்களிடையே முண்டியடித்துக்கொண்டு 'நோட்டீஸ் போர்ட்'டில் தன் பெயர் பாஸானவர்களின் பட்டியலில் இருக்கிறதா என்று பார்த்தான் சோமு. என்ன சந்தோஷம். சோமு பெயர் தேர்வானவர்களின் பட்டியலில் இருந்தது.

தாங்க முடியாத சந்தோசத்துடன் இச் செய்தியை பெற்றோர்களுக்குத் தெரியப்படுத்த ஓடின அவனது பார்வை, பள்ளிக்கு வெளியே மரத்தடியில் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்த சீனு மீது பட்டது.

"டேய் சீனு ஏண்டா அழுறே?" என்றபடியே அவனை நெருங்கினான்.

"சோமு நான் பரீட்சையிலே பெயிலாகி விட்டேன். என் அப்பா, அம்மா முகத்தில் எப்படி விழிப்பேன்? என் மாமா வாங்கிக்கொடுத்த பேனா ராசியில்லாத பேனா. அதை அவரிடமே திருப்பிக் கொடுத்து விடப் போகிறேன்," என்றான்.

சீனுவின் கண்களைத் துடைத்துவிட்ட சோமு அப்பா தனக்குச் சொன்ன சமாதானத்தையே திருப்பிச் சொன்னான்.

"சீனு! நீ பாஸ் பண்ணுவதும், பாஸ் பண்ணாததும் பேனாவிடம் இல்லை. நாம் எழுதும் பதில்களைப் பொறுத்தது அது. அதனால் பேனாவைக் குறை சொல்லாதே. வா போகலாம்."

இருவரும் நடந்தனர்.

## விடுகதைகளும் விடைகளும்

1. நீந்தத் தெரியாதவன் நீருக்குள் குதிக்கிறான். அவன் யார்?
2. பாடாத பாட்டெல்லாம் பாட வந்தான். கல்லான நெஞ்சையே கலங்க வைத்தான். அவன் யார்?
3. பல் உடைந்தால் பல் வராது. அது என்ன?
4. ஐந்து வீட்டுக்கு ஒரு முற்றம். அது என்ன?
5. இரவும், பகலும் ஓய்வு இல்லை. அவன் உறங்கினால் ஆளில்லை. அவன் யார்?

**விடைகள்**

1. சூரியன்
2. கொசு
3. சீப்பு
4. உள்ளங்கை
5. இருதயம்

நா. துவாரகா-கொழும்பு-13.


1. மேலும் தாவரம், கீழும் தாவரம், நடுவில் பழம். அது என்ன?
2. முட்டிக்குள் முத்துக்கள். அது என்ன?
3. ஏறி மிதித்தால் ஓடிவிடுவான். அவன் யார்?
4. அறிவை வழங்குவான். ஆனால் பேசமாட்டான். அவன் யார்?
5. ஒரு குகைக்குள் இரண்டு கோட்டைகள். அது என்ன?

**விடைகள்**

1. அன்னாசி
2. மாதுளம்பழம்
3. சைக்கிள்
4. புத்தகம்
5. மூக்கு


எஸ்.ஐ. நிலாம்தீன்
கம்பிரிகஸ்வெவ.

## கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!




இந்த சைக்கிள் மூலம் கோடுகள் வழியாக சென்று பாருங்கள். சைக்கிளைக் கண்டுபிடித்தவரின் பெயர் தெரியும்.


## ஆடும் பென்சில்



ஒரு நூலின் முனையை எடுத்துப் பென்சிலுடன் கட்டவும். அந்த நூலின் மறுமுனையை ஒரு கதவின் கைப்பிடியில் கட்டவும். அந்த நூலை வெட்டினாலும் பென்சில் அதே நிலையில் இருக்கும்படி செய்ய முடியுமா? என நண்பர்களிடம் கேளுங்கள். அவர்களுக்கு ஒரு இரகசிய நுட்பம் தெரிந்தால் முடியும் எனக் கூறுவார்கள். இல்லாவிட்டால் முடியாது என்று தான் கூறுவார்கள்.

பென்சிலில் கட்டியுள்ள நூலின் மறு முனையைக் கதவு கைப்பிடியில் கட்டும் போது படத்தில் காட்டியுள்ளபடி பூவடிவில் கட்டுங்கள். பிறகு பூ வடிவில் வளைந்துள்ள நூலை மட்டும் வெட்டுங்கள். அப்படி வெட்டினால் முடிச்சு அவிழாது. நீங்களும் உங்கள் சவாலில் வெற்றி பெறலாம்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!




மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 28.05.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 41
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு-05.



ஆபிரிக்காவில் உள்ள ஒருவகை நாகபாம்பு எதிரியின் கண்களை நோக்கி விஷத்தைப் பீய்ச்சியடிக்கும். இந்த விஷம் 2.5 மீற்றர் தூரத்திற்குப் பாயும்.



உலக அழகியாகக் கருதப்படும் எகிப்து ராணி கிளியோபாட்ரா அவைவில் இருக்கும் போது பொய்த்தாடி வைப்பது வழக்கம்.



மொரிசியஸ் தீவில் உள்ள 'கெஸ்ட்டரல்' என்ற பறவை மிக அரிய இனமாகக் கருதப்படுகின்றது. இவ்வகைப் பறவைகள் இப்போது எட்டு ஜோடிகள்தான் உள்ளன.



ஜோயஸ் வெதர்ட் என்ற இங்கிலாந்துப் பெண் கோல்ப் விளையாட்டில் சிறந்து விளங்கினார். 1920-25ம் ஆண்டுகளில் விளையாடிய அவர் உலகிலேயே மிகச் சிறந்த கோல்ப் விளையாட்டு வீரங்களை என்ற புகழ் பெற்றார்.

## அறிவோம் மனதில் பதிவோம்



சீனத் தலைவர் மா-சே-துங் எழுதிய சுயசரிதை புத்தகம் என்பது கோடி விற்பனையானது. மிக அதிகமாக விற்பனையான புத்தகம் என்று பெயர் பெற்றது.



அமெரிக்க நாளிதழ்கள், நிறைய தாள்களுடன் எடை அதிகமாக இருக்கும். 'சன்டே நியூயோர்க் டைம்ஸ்' என்ற நாளிதழ் மற்ற எல்லா நாளிதழ்களைவிட மிக அதிகமான எடையுடன் வெளி வருகிறது. ஒரு நாளிதழின் எடை ஆறு கிலோ.

## வர்ணம் தீட்டும் போட்டி இல. 38

**பரிசுக்குரியவர்**
செல்வன்.எஸ்.சுரேந்திரன்
ரோ.க.தமிழ் பாடசாலை-வத்தளை.

**பாராட்டுக்குரியவர்கள்**
கா.சஜீவ்
கோட்டமுனை கனிஷ்ட வித்தியாலயம்-மட்டக்களப்பு.
செல்வன்.எம்.ஐ.எம். முனீஸ்
ஈச்சநகர்-முள்ளிப்பொத்தானை.
பவுல் ஜெயகணேஷ்
அகதிகள் முகாம்-காரைதீவு.
சஹானா மகுமூட்
பாதிமா பெண்கள் மகா வித்தியாலயம்-ஒட்டமாவடி.
எம்.பிரசன்னாத்
புனித மரியாள் தமிழ் மகாவித்தியாலயம்
வட்டியாந்தோட்டை
இராஜேந்திரம் இதயராஜன்
கல்லடி-மட்டக்களப்பு.
எனி ரஜிதா செல்வராஜ்-கொழும்பு-13.
என்டனி டெக்ஸ்டர் பர்னாந்து
கொழும்பு-15.
ஏ.சீ.எம். சபீர்
இகள-கொட்டாரமுல்லை.
வி. கௌரிதாசன்
புனித சூசையப்பர் கல்லூரி-திருகோணமலை.
கேசினி வானிஷ்யா
ஹெந்தளை-வத்தளை.

# தேன் கிண்ணம்

## மரணபாதைகளில் மானுட யாத்திரை

இரத்தம் உறைந்த
தெருக்களில்
ஆணி அறைந்த
சப்பாத்தின் அரவம் கேட்கும்.
மரண பயங்களை
இதய உதடுகள்
மௌனமாய்
உச்சரித்தபடி
குடிசைகளின்
கும்மிருட்டில்
சத்தம் சப்தித்து,
உயிர்கள் உறைந்து,
விடியலின்
விபரங்களை
விசாரித்து! விசாரித்து!
அழும் மனங்களினை
அவஸ்தைகள் சுடும்.
★★★
இறக்கைகள்
படபடக்க..!
இரைந்து விரையும்
இயந்திரப் பறவைகளிடும்
அக்கினி எச்சங்களில்
இதயங்கள் வெடிக்கும்.
இரத்தம் கொப்பளிக்கும்
சதைகள் சிதைகளாக
வீதியின் வீதிகளில்
"கவரிமா ஓவியங்கள்"
தீட்டும்.
★★★
குண்டுகளின்
வீச்சில்
மூச்சு முறிந்து
முகங்கள் முறைக்கும்.
மரண கீதம்
பாடி வரும்
'ஷெல்' இசையில்
செவிகள்
செத்துப்போய்
விழி வானம்
இரசாயன மூலாம் பூசும்.
★★★
டயர்கள் தின்ற
மானுட எச்சங்களின்
மிச்சங்கள் நாறும்.
ஊனச் சதை
உண்டு கொழுத்த
நாய்களின் குரைப்பும்
நகரிகளின் ஊளையும்
ஊருக்குள்
ஓங்கி ஒலிக்க..!
அப்பாவி இதயங்கள்
அணு அணுவாய் சாகும்.
★★★
சுதந்திரத்தின்
சுவர்களில்
'போர்' மீண்ட மீண்டு
இரத்தம் மற்கள் காட்டி
'அராஜகம்' சிரிக்கும்.
★★★
துப்பாக்கிகளின் தீத்
துப்பல் நவைகளில்
மனிதம் குளிக்கும்.
காம வெறியரால்
புனிதம் தொலைத்து
மங்கையர் மானம்
சவமாய்
மடிவெட்டிப் புதையும்.
★★★
துப்பாக்கியின்
துரத்தலில்
நாளையை நோக்கி
எஞ்சிய மானுடத்தின்
இறுதி யாத்திரை தொடரும்
★★★
இன்னும், இன்னும்
துப்பாக்கிக்
கோழிகள் கூவும்.
நாளைய விடியலிலும்
நாட்டு நடப்புக்கள்
இவைகள்தான்.
★★★

நிவேப்பிரியன்
பொத்துவில்-03.

## ஒளியைத்தேடும் அகல் விளக்குகள்!

எங்களுக்காக
விழித்திருக்கும்
இரவுகளின்
கண்களும் சிவந்துவிடும்.

காமச் சூரியன்களின்
மூச்சுத் தணல்
வியர்வை வெள்ளத்தில்
மிதக்கும்..
மேனிப் படகுகள்.

சதைப் பொதிகளை
சுமந்து..சுமந்து..
ஒட்டை விழுந்து
உக்கிப்போன
[illegible]

அடிக்கடி
எழுது பார்க்கப்படும்-
வர்ணம் தீட்டி
வடிவாக்கப்படும்-
உல்லாச புரியின்
ஊர்வலத்திற்கு.

பகல்கள்
எம்மை பார்ப்பதில்லை.
அவைகளும்
உறங்கிவிடும்.

எங்கள் ஆன்மா
இரவு வெளிச்சத்தில்
ஒளியைத் தேடும்.

இறைவன்
நீதி-
தர்மம்-
சட்டம்-
பணம்-
இரவில் மட்டுமே
சந்திக்கும்
இரகசியத் தூதர்கள்.

உணர்வு
செத்துப்போன
மறுப்புக் நிறைவில்

தரைக் கழுவு
தூசிய
சமூகச் சித்திரங்கள்.
எண்ணை வற்றி
திரி மட்டும்
தூண்டி விடப்பட்டு
வெளிச்சத்தை
இருட்டில் தேடி
விழித்திருக்கும்
அகல் விளக்குகள்.

-குறிஞ்சி தென்னவன்-



## ஏ! தமிழினமே! என்ன செய்ய உத்தேசம்?

**பாரிசில் கொல்லப்பட்ட இலங்கைத் தமிழரான சபாலிங்கத்தின் நினைவாக கனடாவில் இருந்து வெளியான கொலைக்கு கண்டனம் கலந்த அஞ்சலி பிரசுரத்தில் இருந்து....**



நீ மனைவியையும், மகனையும் விட
மனிதத்தை நேசித்தவன்!...
அதனால்தான் மரணம் உனக்குப் பரிசானது!...
சொந்த மண்ணைத் துறந்து
வந்த மண்ணில்கூட உன்னை'
வாழவிடவில்லை இந்த மிருகங்கள்!...
ஐந்தறிவு மிருகங்களுக்கு
அன்பு பற்றியும், அகிம்சை பற்றியும்
எங்கே தெரியப் போகிறது...
மனித உயிர்களை மலிவாக நினைப்பவர்களிடம்
மனித நேயத்தை எப்படி நீ எதிர்பார்த்தாய்?...
குறிவைக்க வேண்டிய குற்றவாளிகள்
சுதந்திரமாகச் சுற்றித்திரிய
நிஜங்களை வெளிக்கொணர நினைத்த உனக்கு
பரிசு துப்பாக்கிக் குண்டுகள்!
நாட்டை நேசித்ததால் அன்று சித்திரவதை மட்டுமே!
இன்று நாட்டில் உலவும் காட்டு மிருகங்களால்
நரித்தனமாக நீ கொல்லப்பட்டாய்!...
உதவி என்று கேட்டுவந்தவர்களுக்கு
உதவுபவருக்கு உயிர்ப்பலிதான் பரிசா?...
ஏ!...தமிழினமே!
வந்த இடத்தில்கூட வாழவிடாத கயவர்களை
என்ன செய்வதாக உத்தேசம்?...
சொந்த மண்ணில் எம்மவர் சிந்தும்
குருதி வெள்ளம் போதும்!...
இந்த மண்ணிலும் இது தேவையா?...
இன்று நீ சிந்திய குருதியின் பின்னாவது
சிந்திப்போம்!... சிந்திப்போம்!...

இவ்வண்ணம்
கண்ணீர் அஞ்சலியுடன்
கனடா நண்பர்கள்.

## வேண்டுகோள்


ஐயா..
அரசியல்வாதிகளே....!
மெய்யாய்..
ஒன்று கேட்கிறோம்!
உங்கள்
செல்லாத..
கொள்கைகளை
பெரியபெரிய..
'போஸ்டர்'களில்
பதித்து..
பாதையோரத்து
சுவர்களுக்கு
உடுத்தாதீர்கள்!
பதிலாக..
சேரியிலும்
'லயன்'களிலும்
வாழ்கின்ற..
ஏழைகளின்
நிர்வாணத்தை மறையுங்கள்!

பொகவந்தலாவை-சோ.ஸ்ரீதரன்.

## பட்டுப்போகும் பச்சை மரங்கள்

வாலிப நதிகள்
வற்றிப் போகலாமா?
போதைத் தீயில்
இளைய தலைமுறை
எரிந்து போவதை
எப்படி அனுமதிப்பது?
☆
வெளிச்சத்தை
வெளியிடு செய்வதற்காக
தீயை யார்தான்
தின்ன முயல்வார்கள்?
இன்பத்தை போதை
எழுதித் தருவதாக எண்ணி
ஆரோக்கியத்தை அதற்கு
அன்பளிப்புச் செய்து விடாதே!
☆
போதை உணவு
பகல் நேரக் கனவு;
அர்த்தம் ஒன்றும்
அதிலே இல்லை.
ஆயிரம் தொல்லைகள்
அணிவகுத்து வந்து
அப்படியே வாழ்வை
அழித்துவிடும்!
☆
மது-
மனதைக் கிழித்து
மயக்கத்தில் எறியும்!
அப்போது-
கண்ணிலே வாழும்
கருணையெல்லாம்
காலமாகிவிடும்.

காத்தான்குடி-அனு.



## முதல் காதல்

பார்வைகளை மட்டும்
அறிமுகம் செய்து வைக்கும்
விழிகள்.

இதழ்களின் நந்தவனத்தில்
இலேசாய் பூக்கும்
புன்னகை மொட்டுக்கள்.

இரவுகளின் நீரில்
எண்ண மீன்களோடு
நீந்தி விளையாடும்
குதூகல குளிப்பு.

விடியலை விரைவாய்
நேசித்து

உள்ளத்து வினாக்கள்
உடன் விடை தேடும்.

'இன்று எப்படியும்'
இந்த வாசகத்தை
இதயத்துள் இருத்திக்
கொண்டு
இளமை அலைகள்
காதல் கரை
தொடுவதற்கு விரையும்!

எடின்பரோ-எஸ்.கலாதாசன்.



## மறக்க முடியவில்லை

நம்
விழிகள்
பேசிய பாசை
மறக்க முடியவில்லை!
✧
நிலவு
வானை
தீண்டும்போது
இட்ட
முத்தம்
மறக்க முடியவில்லை!
✧
இணைந்த
கையோடு
இருளில்
திரிந்தோம்
மறக்க முடியவில்லை!
✧
நம்
முதல்
இணைப்பு
நேரம்
பார்த்து
உன்
கால்கள்
போட்ட
கோலம் தன்னை
மறக்க முடியவில்லை!
✧
புன்னகை
கானம்
காற்றில்
தவழ்ந்து
கவர்ந்த
இடமோ
மறக்க முடியவில்லை!
✧
நாம்
கூடும்போது
நிலவு
பார்த்து
சிரித்தநேரம்
மறக்க முடியவில்லை!
✧
அமாவாசை
இருளில்
அமைதியாகப்
பேசிய நாட்கள்
மறக்க முடியவில்லை!
✧
எழுதுகோலின்
கண்ணீர்த்
துளியால்
எழுதிய
கடிதம்
மறக்க முடியவில்லை.
✧
இருளை
உலகு
அணைத்தபோது
நான்
அணைத்த
அணைப்போ
மறக்க முடியவில்லை!
✧

வஜுர்தீன்-எம்.ரைஷ்
கிண்ணியா-06.

## நட்புக்கு!

நானும் நீயும்
நல்ல
நண்பர்கள்தான்...
மனங்களுக்கு
மதம் பிடிக்கும்வரை....!
✦✦
மலர்களின் மென்மையை
கண்டு கொண்டதும்
உன்
நட்பில்தான்.
தென்றலின் தழுவலைத்
தெரிந்து கொண்டதும்
உன்
அன்பில்தான்...
✦✦
விழுதுகளாய்
விழுந்து கிடந்தவன்
வேர்களையே
திருடிக்கொண்டது
எப்போது...?
✦✦
உனக்கு தெரியுமா...
உன் வார்த்தைகளால்
காயப்பட்ட காற்றை
நான்
ஆறுதல் சொல்லி
அனுப்பியது...?
✦✦
மறந்துவிட்டாயா..
மனம் முழுக்க
'ரணமாகி'
என்முன்னே
மண்டியிட்டபோது
அன்னையாய்
உன்னை
அள்ளி கொண்டது.....!
✦✦
இனி
நம் நட்பு
நிற்பதும் நடப்பதும்
உன்
கைகளில்
✦✦
நண்பா!
நானும் நீயும்
நல்ல நண்பர்கள்தான்...!
மனங்களுக்கு
மதம் பிடிக்கும்வரை...!

செல்வி.சசிகலா சுப்பையா
கிழக்கு வளாகம்.

### ரோஜா

முட்களுக்கு
காயம்
அழுதது
பூக்கள்.

### ரோபோ

மனிதன்
மனிதனையே
உருவாக்கினான்
தேடினோம்
காணவில்லை
இதயத்தை.

### கம்ப்யூட்டர்

மனித மூளையை
நுஜ்யப்படுத்திவிட்டு
தன்
அணுக்களின்
சுவாசிப்பில்

அறிவுகளை
அடிமைப்படுத்தி
கொண்டிருக்கும்
எலக்ட்ரானிக்
கன்னி.

### பூக்கள்

இயற்கையின்
மடியில்
தவழும்
சின்ன மழலைகள்

-கிண்ணியா சபா-

## இந்த வாரம் உங்கள் பலன்

(22.05.94 முதல் 28.05.94 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| இடபம் | - சூரியன் |
| மிதுனம் | - புதன், வெள்ளி |
| துலாம் | - வியாழன், இராகு |
| கும்பம் | - சனி |
| மேடம் | - செவ்வாய், கேது |

சந்திரன்— துலாம், விருட்சிகம், தனு ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வெளியிடப் பயணம், ஆடம்பரச் செலவு. | காலை 7 மணி |
| திங்கள்- | மனமகிழ்ச்சி, தொழில் விருத்தி. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | உறவினரால் கஷ்டம், மனக்கவலை. | பகல் 12 மணி |
| புதன்- | வீண் முயற்சி, செலவு மிகுதி. | காலை 9 மணி |
| வியாழன்- | துயர் அதிகம், மறைமுக எதிர்ப்பு. | காலை 6 மணி |
| வெள்ளி- | தெய்வ நம்பிக்கை, கௌரவம். | பி.ப 2 மணி |
| சனி- | செலவு மிகுதி, உறவினர் எதிர்ப்பு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 5

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனமகிழ்ச்சி, குடும்ப சுகம். | காலை 6 மணி |
| திங்கள்- | செய்தொழில் விருத்தி, கடின உழைப்பு. | காலை 9 மணி |
| செவ்வாய்- | பெரியோர் உதவி, பணக்கஷ்டம். | காலை 7 மணி |
| புதன்- | துயர் நீங்கும், புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- | வெளியிடப் பயணம், சுகவிருத்தி. | காலை 9 மணி |
| வெள்ளி- | பணவரவு, காரியசித்தி. | பகல் 11 மணி |
| சனி- | உறவினர் உபத்திரவம், மனக்கவலை. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 4

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தெய்வ நம்பிக்கை, மனக்குழப்பம். | பி.ப 2 மணி |
| திங்கள்- | காரியானுகூலம், பணவரவு. | காலை 10 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப 1 மணி |
| புதன்- | மனக்குறை தீர்தல், பணக்கஷ்டம். | காலை 7 மணி |
| வியாழன்- | செய்தொழில் விருத்தி, முயற்சி மேன்மை. | காலை 9 மணி |
| வெள்ளி- | பணவரவு, பெரியோர் சகாயம். | காலை 10 மணி |
| சனி- | செலவு மிகுதி, பணத்தட்டுப்பாடு நீங்கும். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 7

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் அதிகம், கடன் பயம். | பகல் 12 மணி |
| திங்கள்- | வெளியூர் பயணம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, பொருள் வரவு. | காலை 9 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, செய்தொழில் விருத்தி. | பகல் 11 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி, மனமகிழ்ச்சி. | காலை 10 மணி |
| வெள்ளி- | தெய்வ நம்பிக்கை, கடின உழைப்பு. | பகல் 12 மணி |
| சனி- | செலவு கஷ்டம், உறவினர் வருகை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | கௌரவம், தேகசுக நன்மை. | காலை 10 மணி |
| திங்கள்- | செய்தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி. | காலை 10 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, பெரியோர் சகாயம். | பகல் 12 மணி |
| புதன்- | வெளியிடப் பயணம், சுகவிருத்தி. | காலை 7 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, பணவரவு. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | காரியசித்தி, பொருட் பேறு. | காலை 7 மணி |
| சனி- | குடும்ப சுகம், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 4

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | அந்நியர் நட்பு, கௌரவம். | காலை 7 மணி |
| திங்கள- | மறைமுக எதிர்ப்பு, தேகசுகம் பாதிப்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியர் பகை, மனக்கவலை. | காலை 6 மணி |
| புதன்- | புதிய பதவி, செய்தொழில் விருத்தி. | பி.ப 1 மணி |
| வியாழன்- | எண்ணிய கருமம் சித்தி, பணவரவு. | காலை 9 மணி |
| வெள்ளி- | காரியானுகூலம், துயர் நீங்கும். | பி.ப 2 மணி |
| சனி- | திடீர் பயணம், செலவு மிகுதி. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 3

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரியசித்தி, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், காரியானுகூலம். | காலை 9 மணி |
| புதன்- | உறவினர் உதவி, மகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| வியாழன்- | செய்தொழில் விருத்தி, செலவு மிகுதி. | காலை 9 மணி |
| வெள்ளி- | அரச விரோதம், மனஸ்தாபம். | பகல் 12 மணி |
| சனி- | காரியானுகூலம், பொருள்வரவு. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -6

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 9 மணி |
| திங்கள்- | பணக்கஷ்டம், செலவு மிகுதி. | காலை 10 மணி |
| செவ்வாய்- | பெரியோர் எதிர்ப்பு, மனக்கவலை. | பி.ப 1 மணி |
| புதன்- | புதிய முயற்சி, பொருட்செலவு. | காலை 9 மணி |
| வியாழன்- | செய்தொழில் நஷ்டம், மனக்கவலை. | காலை 10 மணி |
| வெள்ளி- | வெளியிடச் சகாயம், பொருள் வரவு. | காலை 9 மணி |
| சனி- | திடீர் சுகயீனம், வைத்தியச் செலவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 5

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தெய்வ நம்பிக்கை, குடும்ப நன்மை. | காலை 9 மணி |
| திங்கள்- | வீண் செலவு, உறவினர் பகை. | காலை 10 மணி |
| செவ்வாய்- | காரிய சித்தி, பணவரவு. | பகல் 12 மணி |
| புதன்- | அந்நியர் எதிர்ப்பு,முயற்சி மேன்மை. | காலை 6 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, அரச சன்மானம். | பி.ப 1 மணி |
| வெள்ளி- | உறவினர் பகை, வீண் மனஸ்தாபம். | காலை 7 மணி |
| சனி- | கடன் பயம், செலவு கஷ்டம். | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம் -7

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, கௌரவ நிலை. | பி.ப 1 மணி |
| திங்கள்- | மனமகிழ்ச்சி, உறவினர் உதவி. | பி.ப 3 மணி |
| செவ்வாய்- | கௌரவம், தேகசுக விருத்தி. | காலை 10 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, முயற்சி மேன்மை. | பகல் 12 மணி |
| வியாழன்- | எண்ணிய கருமம் சித்தி, பொருள் வரவு. | காலை 6 மணி |
| வெள்ளி- | உயர்ந்த எண்ணம், செலவு கஷ்டம். | காலை 7 மணி |
| சனி- | அந்நியர் உதவி, செலவு மிகுதி. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வீண் கவலை, புதிய நம்பிக்கை. | காலை 7 மணி |
| திங்கள்- | செய்தொழில் நட்டம், பொருள் விரயம். | காலை 10 மணி |
| செவ்வாய்- | அந்நியர் எதிர்ப்பு, செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| புதன்- | துயர் அதிகம், பணத்தட்டுப்பாடு. | பகல் 12 மணி |
| வியாழன்- | காரிய சித்தி, பொருள் வரவு. | காலை 9 மணி |
| வெள்ளி- | தொழில் மேன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப 1 மணி |
| சனி- | தெய்வ அனுகூலம், பெரியோர் நட்பு. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 9

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செலவு கஷ்டம், தேகசுகம் பாதிப்பு. | காலை 7 மணி |
| திங்கள்- | மனக் கவலை, பெரியோர் உதவி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், அந்நியர் பகை. | காலை 7 மணி |
| புதன்- | காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப 1 மணி |
| வியாழன்- | செய்தொழில் மாற்றம், கடின உழைப்பு. | காலை 9 மணி |
| வெள்ளி- | உறவினரால் கஷ்டம், மனக்குழப்பம். | காலை 6 மணி |
| சனி- | காரியக்கேடு, திடீர் செலவினம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 2

அறிந்து கொள்ளுங்கள் — ஆரோக்கியம் பெறுங்கள் — ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ விந்தைகள்



## வெட்டிப் பிரிக்கப்பட்ட இரட்டையர்கள்!

## செயற்கை உறுப்புகளோடு வாழ்கின்றனர்!!

மியன்மார் என்று தற்போது வழங்கப்படும் முன்னாள் பர்மா நாட்டில், மாண்டலே நகருக்கருகே சகாயிங் என்ற ஊரில் 12 ஆண்டுகளுக்கு முன்னர் சையமிய இரட்டையர்கள் பிறந்தனர். சையமிய இரட்டையர்கள் என்பது உடல் ஒட்டிப்பிறக்கும் இரட்டையரை குறிக்கும். இவர்களுடைய இடை எலும்புக்கட்டின் கீழ் பாகம் ஒட்டியிருந்தது. இடைக்கு மேல் இரு உடல்கள் தனித்தனியே இருக்க, கீழ்ப்பகுதி மட்டும் ஒன்றாக இணைந்திருந்தது. இரு உடம்புகளுக்கும் இரு கால்கள் மட்டுமே இருந்தன.

இந்த இரட்டையரை வெட்டிப்பிரிப்பது நினைக்க முடியாததொன்றாக இருந்த போதிலும், கனடா நாட்டிலுள்ள ரொறன்ரோ நகரில், நோய்வாய்ப்பட்ட சிறுவர்களுக்கான மருத்துவமனையின் சத்திரசிக்ிச்சை நிபுணரான டாக்டர் ரொபேட் ஃபில்லர், துணிந்து இக்குழந்தைகளை வெட்டிப் பிரித்து விட்டார்.

பத்து வருடங்களுக்கு முன்னர் 1984ல் 17 மணி நேரம் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. 43 மருத்துவ நிபுணர்கள் ஒன்றாகச் செயற்பட்டு வெற்றிகண்டனர். ஆனால் இரண்டு குழந்தைகளுக்கும் தலா ஒருகால் மட்டுமே கிடைத்தது. ஒரே ஒரு ஆண் குறிமட்டும் இருவருக்கும் பொதுவாக இருந்தமையினால் ஒரு குழந்தையை ஆணாகவும் மற்றக் குழந்தையைப் பெண்ணாகவும் உருவாக்க வேண்டிய நிர்ப்பந்தம் மருத்துவர்களுக்கு இருந்தது. ஈரல், சிறுநீர்க்குழாய்கள் மற்றும் குடல் ஆகியவற்றிலும் பிரிவினை செய்யப்பட்டது.

இத்தனை வதைகளையும் தாங்கி இக்குழந்தைகள் இருவரும், மருத்துவ உலகின் பெரும் சவாலாக-சுகதேகிகளாக வளர்ந்து 12 வயதை எட்டிவிட்டனர்.

பிறந்தபோது லின் என்று பெயரிடப்பட்ட குழந்தை இப்பொழுது மாயோ ஆங் என்ற பெயருடன் ஆண்பிள்ளையாகிய போது வின் என்ற பெயர் பெற்ற குழந்தை மியின்ற்-மியின்ற் ஆங் என்ற பெயருடன் பெண்பிள்ளையாக வளர்ந்துவிட்டது. பர்மிய சோதிடர் ஒருவரின் ஆலோசனையின் பெயரில் இப்பெயர் மாற்றம் செய்யப்பட்டதாக சிறுவர்களின் தாய் மாமனாரான ரின் ஹற் கூறுகிறார்.

இவர்களுக்கு 1987ல் செயற்கை உறுப்புகள் பொருத்தப்பட்டன. இடுப்பின் அரை வாசியுடன் ஒவ்வொரு கால் இவர்களுக்கென பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டன. ஹியூக் மக்மிலன் புனர்வாழ்வு மையத்தைச் சேர்ந்த குழு ஒன்று இச்சிறப்பு உறுப்புகளைத் தயாரித்தளித்தன.

இவர்கள் கிடுகிடென வளர்ந்துவிட்டமையினால், 7 வருடங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட உறுப்புகளுடன் அவர்களால் நடமாட முடியவில்லை. இதனால் இவர்கள் மீண்டும் கனடா-ரொறன்ரோ நகரம் வந்துள்ளனர். தற்போதைய அவர்களின் வளர்ச்சிக்கேற்ப செயற்கை உறுப்புகளை நிபுணர்கள் வடிவமைத்து உருவாக்கிவிட்டனர். இப்போது அமைக்கப்பட்டுள்ள உறுப்புகள் 110 இறாத்தல் எடைவரை தாங்கக்கூடியதாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாற்று உறுப்புகளுக்காக கடந்த (ஏப்ரல்) மாதம் மக்மிலன் மையத்துக்கு பர்மாவிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளனர். தங்கள் ஊரில் நாலாவது படிக்கும் இருவரும் விரைவில்-புதிய கால்களுடன் நாடு திரும்பவிருக்கின்றனர். இந்தச் செயற்கைக் கால் உதவியுடன் சைக்கிள் சவாரி செய்யவும் இவர்களால் முடியும் என்று நிபுணர்கள் தெரிவித்தனர்.

## சிரித்தால் துன்பம் விலகும்

## வருத்தும் நோயும் பறக்கும்!



'சிரிப்பே சிறந்த நிவாரணி' என்பார்கள். மனம் விட்டுச் சிரிப்பவனை துன்பம் எதுவும் அணுகுவதில்லை. அத்துடன் மட்டுமல்ல நோய்களும் அணு காதாம்.

ஒருவருடைய முகத்தைப் பார்த்ததும் அவருடைய குணாதிசயங்களை அறிந்து கொள்ளலாம். எப்போதும் மகிழ்ச்சியை முகத்தில் குவித்து வைத்திருப்பவர் வாழ்க்கையில் என்றும் குதூகலத்தைக் காணலாம்.

பிறரை மகிழ்ச்சியாக வைத்திருப்பதற்காக சிரிப்பூட்டும் கலைஞர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வாழ்வில் சூறாவளி வீசினாலும் மகிழ்ச்சியாகவே அதனை ஏற்றுக்கொள்வார்கள். பிறரைச் சிரிக்க வைக்கும் கலைஞர் தன் துன்பங்களை மறைத்தாலும் நாளடைவில் அவரின் துன்பங்களும் மறைந்து சிறப்பினை அடைந்து மகிழ்வார்.

சிரிப்பு 18 வகைப்படும் என்று ஆய்வாளர்கள் வகுத்துள்ளனர். ஒரு குழந்தை தன் தாயைப் பார்த்துச் சிரிக்கும்போது தென்படுவதே உண்மையான சிரிப்பு என்கின்றனர். கள்ளங்கபடமற்ற-வஞ்சகமில்லாத சிரிப்பு அது. உண்மையில் நாம் ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்று விரும்பினால் அதே கபடமில்லாத குழந்தையின் சிரிப்பைப் போல் சிரிக்க வேண்டும்.

ஆனந்தத்தைத் தரும் சிரிப்பு முகத்திலுள்ள நரம்புகளுக்கும் தசைகளுக்கும் சிறந்த பயிற்சியைத் தருகிறது. வாயின் ஓரங்களிலும் கணக்களைச் சுற்றியுமுள்ள இரத்தக்குழாய்கள் இத்தகைய சிரிப்பின்போது விரிந்து சுருங்குகின்றன. இத்தகைய சிரிப்பு மூளையிலிருந்து பிறப்பிக்கப்படும் கட்டளைகளினால் பிறப்பதாகும். முகத்தில் இரத்தோட்டம் சீரடைவதற்கு இது மிகவும் உதவுகிறது. கள்ளங்கபடமில்லாத சிரிப்பு ஏற்படும்போது முகத்தில் இரத்தம் அதிகமாகப் பிரவகிப் பதை நம் கண் முன்னே அவதானிக்கலாம். முகம் சிவப்பாகிவிடும் சிலர் சிரிக்கும்போது.

மூளையில் ஏற்படும் ஒருவகை மின் அழுத்தத்தினாலேயே உண்மையான சிரிப்பு ஏற்படுவதாக 'சைக்கோலஜிக்கல் சயன்ஸ்' என்ற சஞ்சிகையில் அறிவியலாளர்கள் இக் கூற்றினை விளக்கியுள்ளனர். உண்மையான சிரிப்பு ஏனைய சிரிப்புக்களிலிருந்து மாறுபட்டே இருக்கும் என்று கூறப்படுகிறது.

இன்று நமக்கு உற்சாகமளிக்காத சோம்பல் தரும் நாளாக இருந்தாலும் சிரிப்பை வரவழைத்துக்கொள்ளுங்கள். ஆனால் போலித்தனமாகவல்ல- நகைச் சுவையாகப் பேசும் உங்கள் நண்பர்களைத் தேடிப்பிடித்து சிரிப்பூட்டும் கதைகளைக் கேட்டு சிரித்துச் சிரித்து உங்கள் சோம்பலை அகற்றுங்கள்.

### வீட்டு வைத்தியம்

## பாதத்தில் முள் தைத்தால்....



வெறுங்காலுடன் நடந்து செல்லும் போது முட்களோ அல்லது மர சிராய்ப்புகளோ பாதத்தைப் பதம் பார்த்து விடும். உடனடியாக கூரிய ஊசியால் குடைய ஆரம்பித்து விடாதீர்கள். புண்ணாகி வேதனையும் அதிகரித்துவிடும்.

பொஸ்ரன் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த டாக்டர் மேரியன் எச்.புட்னம் சாதாரண-எளிய மருத்துவ முறையினைத் தருகிறார். "சற்றுச் சூடான நீரில் 10 முதல் 15 நிமிட நேரம் பாதிப்புக்குள்ளான பாதத்தை வைத்திருங்கள். முள்ளோ அல்லது மரத்துண்டோ சிறிதளவு பருக்கும். அதேவேளை முள்குத்திய இடமும் சற்று மென்மையடையும். இதனால் முள் தானாகவே வெளியேறிவிடும்" என்கிறார்.




## நில்! கவனி!! முன்னேறு!!!

### சிந்திக்கலாம் இங்கே...

எதிர்நீச்சல் போட்டு கரை சேரும் போதுதான் கஷ்டம் தெரிகிறது.

மீண்டும் கடலுக்குள் விழுந்துவிடக் கூடாது என்ற கவனமும் வருகிறது.

எதிர்ப்புக்களை சந்தித்து வாழ்வில் வெற்றி பெறும்போதுதான் அந்த வெற்றியின் பெறுமதி புரிகிறது.

கிடைத்த வெற்றியை கீழே போட்டு உடைத்துவிடாமல் இருக்கும் பக்குவம் வருகிறது. சந்தித்த எதிர்ப்புக்கள் பெற்றுத் தந்த அனுபவம் அந்த பக்குவத்தை வளர்த்துவிடுகிறது.

எதிர்ப்புக்களை வெல்ல வேண்டுமானால் எதிரிகளை மதிப்பிடுவது எப்படி என்று தெரிந்திருக்க வேண்டும்.

அனுபவம்தான் ஆசான். அதற்காக அனைத்தையும் அனுபவப்பட்டுத்தான் அறியவேண்டும் என்று அர்த்தமாகி விடாது.

தீயைத் தொட்டு கையைச் சுட்டுக் கொண்டவன் தீ சுடும் என்று சொல்வது அவன் கண்ட அனுபவம்.

அந்த அனுபவத்தை அங்கீகரித்து நாமும் கையை சுட்டுக்கொள்ளாமல் இருப்பதுதான் புத்திசாலித்தனம்.

அவன் என்ன சொல்வது, நானும் தொட்டுப்பார்த்துத்தான் தெரிந்து கொள்வேன் என்று அடம்பிடித்தால் நேரமும் விரயமாகும். உன் விரலும் காயமாகும்.

எப்படியான எதிரிகள் மிகவும் கொடியவர்கள் என்பதை அனுபவத்தில் அறிந்தவர்கள் அடையாளம் காட்டிவிட்டு போயிருக்கிறார்கள்.

அவர்களது குணாம்சங்கள் எப்படியிருக்கும் என்னும் தடயங்களையும் நமக்கு தந்துவிட்டு சென்றிருக்கிறார்கள்.

நேருக்கு நேராய் உன்னோடு உள்ள முரண்பாடு சொல்லி மோத வருபவன் மதிக்கப்படவேண்டிய எதிரி.

அவ்வாறான எதிரியிடம் தோற்றுப் போனால்கூட வருத்தப்பட வேண்டி வராது.

உன்னை வீழ்த்த நேராக வராமல் சுற்றி வளைத்து சூழ்ச்சி செய்து, முதுகுப் பின்னால் நின்று தருணம் பார்ப்பவன் பலவீனமான எதிரி!

அவன் மதிக்கப்படவேண்டியவன் அல்ல. மிதிக்கப்பட வேண்டியவன். என்றாலும் விழிப்பாயிருந்து உன்னால் கவனிக்கப்படவேண்டியவன்.

அவன் விடயத்தில் சற்று விழிப்பை தளர்த்தினால் நீ விழ்ந்துபோக சந்தர்ப்பம் இருக்கிறது.

இந்த இரு எதிரிகளுமே வெளியில் இருப்பவர்கள். உன்னைவிட்டு விலகியிருப்பவர்கள்.

அதனால் ஒரு இடைவெளி இருந்து கொண்டே இருக்கும்.

அந்த இடைவெளி அவர்கள் உன்னை நெருங்குவதற்கு முன்னர் நீ நிமிர்ந்து தயாராகும் சந்தர்ப்பத்தை வழங்கும்.

அப்படியானால் ஆபத்தான எதிரி யார்? நீ விழித்துக்கொள்ள முன்னரே உன்னை விழுங்கும் விரோதி யார்?

அதற்கும் நம்பிக்கெட்டவர்கள், முகத்துக்கு முன்னால் சிரித்தவனால் முதுகில் குத்தப்பட்டவர்கள் பெறுமதியான முதுமொழி ஒன்றை சொல்லியிருக்கிறார்கள்.

"எதிரியைவிட நண்பனாக நடிக்கும் எதிரி கொடிதிலும் கொடியவன்."

நண்பர்களாக நடிக்கும் எதிரிகளிலும் இரு வகையானவர்கள் இருக்கிறார்கள்.

ஒரு வகையினர் உன் கூடவே ஒட்டியிருப்பார்கள். அப்படி ஒட்டியிருப்பதால் தாங்கள் எதனை தட்டிக்கொள்ளலாம் என்பதுதான் அவர்களது கெட்டிக்கார நோக்கமாக இருக்கும்.

நீ தவறுவிட்டாலும்கூட உன் முதுகில் தட்டிக்கொடுப்பதுபோல குளிர்ச்சியான வார்த்தைகளைக் கொட்டுவார்கள்.

(தங்கள் பெயரை உன் பெயர் சொல்லி வளர்த்துக்கொள்வதற்காக, உனது பெயரை நூறுதரம் உச்சரித்துக்கொண்டிருப்பார்கள்.)

நேர்மையானவர்கள் எவரும் உன்னை நெருங்கி விடக்கூடாது என்பதற்காக அவர்களைப் பற்றிய நேர்மாறான செய்திகளையே உன் செவிகளுக்குள் சொல்லிக்கொண்டிருப்பார்கள்.

உனக்கு ஏணியாக இருக்கிறார்கள் என்று நீ நினைத்துக்கொண்டிருப்பாய்.

அவர்களோ உன் பானையில் சோறு இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

பானையில் கடைசிப் பருக்கை இருக்கும்வரை தங்கள் உயிரையே உனக்காக இழக்க சித்தமாக இருப்பதாக உரத்துச் சொல்லிக்கொண்டிருப்பார்கள்.

அந்த பருக்கையும் முடிந்துவிட்டால் உன் தோளில் இருந்த அந்த காக்கைகள் உனக்கு சொல்லிக்கொள்ளக்கூட நேரம் இல்லாமல் வேறு இடம் பார்க்க பறந்துவிடும்.

உன் எதிரியிடம்கூட போய் ஒட்டிக் கொள்வார்கள்.

உன்னை எப்படி வீழ்த்தலாம் என்று ஆலோசனையும் அள்ளிக்கொடுப்பார்கள்.

இரண்டாவது வகை எதிரிகள் உன் எதிர் முகாமில் இருப்பவர்கள்.

உன் எதிரியின் வேண்டப்பட்டவர்களாக இருப்பவர்கள்.

அவர்களும் காக்கை மனிதர்கள்தான். எதிரி மேலே உயர்ந்து கொண்டிருந்த போது அவன் தோளில் இருந்து உன் தலையில் எச்சமிடுவார்கள்.

எதிரி பலம் தொலைத்து, தோல்விப் படிகளில் இறங்கத் தொடங்கும்போது, நீ மேலே ஏறத் தொடங்கிவிட்டாய் என்றால் அண்ணாந்து பார்ப்பார்கள்.

இங்கே இவன் சரியில்லை. நீயல்லவோ உத்தமன். அங்கே நான் வரவா என்று இனிய சொல் உதிர்த்து பல் இளிப்பார்கள்.

துரோகம் இழைக்கப்படுவது எதிரிக்குத் தானே என்று நீயும் அந்த காக்கை மனிதர்களை கட்டியணைத்துக் கொள்வாய்.

அவர்களோ உன் தூய உறவுகளை வெட்டிப்பிரித்துவிட்டு உன்னிடம் நல்ல பெயர் எடுக்க கள்ளத்தனம் புரிவார்கள்.

அமைதியாகவும், உறுதியாகவும், ஒற்றுமையாகவும் இருந்த உன் கோட்டைக்குள் குத்துவெட்டு நடக்கும்.

காக்கை மனிதர்கள் உன்னைக் காப்பது போல கத்தி வீசுவார்கள். நீ கைதட்டிக் கொண்டிருப்பாய். ஒரு நாள் தூங்கி எழுந்து நீ கண் திறக்கும் போது உன் நெஞ்சுக்கு நேரே அவர்கள் கத்தி நீட்டிக் கொண்டிருப்பார்கள்.

உன்னை காப்பாற்ற யாரும் இருக்க மாட்டார்கள். உன்னைக் காப்பாற்றுவதாற்காக உன் குறை நிறைகள் சொல்லி உன் கரத்தை வலுப்படுத்த நினைத்தவர்களையெல்லாம் காக்கை மனிதர்கள் உன்னிடம் இருந்து விலக்கி வேறாக்கியிருப்பார்கள்.

உனக்குச் செய்யப்பட்டால் என்ன, உன் எதிரிக்கு செய்யப்பட்டால் என்ன துரோகத்தின் குணம் ஒன்றுதான்.

பாம்பு பாம்புதான். அது உன் அருகே இருந்தால் என்ன? எதிர்தரப்பில் இருந்தால் என்ன? குணம் மாறாது. கொத்தினால் விஷம் பரவாமல் போகாது.

எனவேதான் "ஆழமறியாமல் காலை விடக்கூடாது."

அடுத்தவனை கெடுத்தவனை உன்னோடு வாரியணைத்து அணைத்துக் கொள்ளவும் கூடாது.

எதிர்ப்பை முறியடிக்க, உன்னை சரிப்பவர்களை வைத்துக்கொண்டு சாதிக்கலாம் என்று நினைக்காதே.

(மீண்டும் சிந்திக்கலாம்)

எழுதுவது

ரசிகன்



# கொலை விழும் நேரம்

ஊரெல்லாம் தூங்கையிலே
விழித்திருக்கும் என் இரவு!
உலகமெல்லாம் சிரிக்கையிலே
அழுதிருக்கும் அந்த நிலவு!
-கவியரசு கண்ணதாசன்-

சூர்யா ஆவேசமாகி, அதனால் வார்த்தைகளில் [illegible] [illegible] காட்டி, டி.ஐ.ஜி.டென்சிலோடு பேசினாள்.

"ஒரு பெண் துணிச்சலாக இருந்தால் எத்தனை பேரைத் தொட்டிருப்பாள் என்று யோசிக்கிறார்கள். அல்லது யாரையாவது தொலைத்துக் கட்டியிருப்பாளோ என்று சந்தேகிக்கிறார்கள். என்ன டி.ஐ.ஜி. இது? அடங்கி, ஒடுங்கி, நிலம் பார்த்து, கால் விரல்களால் நிலத்தில் கோலம் போட்டு, என்னென்றா..., என்னென்றா..., பெண்ணுக்கு உங்கள் அகராதி இதுதான்...இல்லையா?"

டி.ஐ.ஜி.டென்சில் சூர்யாவின் ஆவேசத்தில் போலித்தனம் இல்லை என்று மனதில் குறித்துக்கொண்டு, அவள் கேள்விக்கு உடனே பதில் சொல்லாமல், அவள் முகத்தையே உற்று நோக்கிவிட்டு, தனது கதிரையில் நிமிர்ந்து அமர்ந்து கொண்டார்.

காலையில் சூர்யாவுக்கு ஃபோன் செய்து "அலுவலகம் வர முடியுமா?" என்று கேட்க, தயங்காமல், மறுக்காமல் சம்மதம் சொல்லி குறித்த நேரத்தில் வந்து ஆஜராகிவிட்டாள்.

குறித்த நேரத்தில் சூர்யா வந்ததும், [illegible] இல்லாமல் கழுவித் துடைத்த வெள்ளிக் கிண்ணம்போல பளிச்சென்று அவள் முகம் இருந்ததும் டி.ஐ.ஜியின் சந்தேகத்தில் ஒரு தொண்ணூறு சதவீதத்தை தள்ளுபடி செய்து விட்டது.

[illegible]

சூர்யாவின் கூந்தலில் சின்னதாய், அழகாய், சிவப்பாய் ஒரு ரோஜாப்பூ அமர்ந்திருந்தது.

இறுதியாகக் கேசவன் கொலையிலும் 'ரோஜாப்பூ' தலைகாட்டியிருக்கிறது.

இப்போது சூர்யாவின் கூந்தலிலும் ரோஜாப்பூ தலைகாட்டுகிறது.

'ரோஜா' வசீகர வாசமலர். பலரால் விரும்பப்படும் மலர். 'ரோஜா'வை நேசிப்பவர்கள் அனைவரையும் சந்தேகிப்பது எப்படிச் சரியாகும்? டென்சில் யோசித்தார். மனதில் விடை தேடினார்.

அந்தத் தேடலோடு சூர்யாவிடம் பேசினார். டென்சிலின் பேச்சில் சந்தேக [illegible] உணர்ந்து சூர்யா கோபப்பட்டாள். [illegible] இடைக்கிடையே குரலில் [illegible] காட்டினாள். சிவப்பு [illegible] வெள்ளை நிறத்தில் [illegible] அணிந்து தன் கூந்தலில் இருந்த ரோஜாப்பூவை விடவும் அழகாக இருந்தாள். கோபப்படும்போது முகம் சிவக்க, ரோஜாவின் சிவப்பு நிறம் தோற்றுப் போனதுபோல் தெரிந்தது.

டென்சில் பதில் சொல்லாது, தன் மனசில் தூண் மாட்டி, அவளை எடை போட்டுக்கொண்டிருக்க, சூர்யா திடீரென்று கேட்டாள்.

"டி.ஐ.ஜி! என் டயறி எங்கே?"

"எந்த டயறி?"

கேள்வியில் நூறுவீத பொய் இருப்பது புரிந்து சூர்யா மேலும் சிவந்தாள்.

"தூக்கில் தொங்கிய சித்ரா வீட்டில் கிடந்த எனது டயறி. அது உங்களிடம்தான் பத்திரமாக இருக்கிறது. தெரியும். அதை வைத்து என்ன செய்யப்போகிறீர்கள்? சித்ராவின் தற்கொலைக்கும் என் டயறிக்கும் முடிச்சுப் போட்டு..."

சூர்யாவின் பேச்சை கை உயர்த்தி தடுத்தார் டென்சில்,

"சித்ரா மரணம் தற்கொலை என்று யார் சொன்னது?"

"தினசரிகள்."

"பொலிஸ் அப்படிச் சொல்லவில்லை."

"சோ...கொலை."

"யெஸ். நூறுவீதம்!"

சூர்யா டி.ஐ.ஜி.டென்சிலை சந்தேகமாகப் பார்த்தாள்.

"கொலைக்கு காரணம் என்ன? யார் செய்தார்கள்?"

"இரண்டும் தெரிந்திருந்தால் இந் நேரம் ஃபைலை மூடியிருக்கலாம். உங்களை இங்கே அழைத்திருக்கவும் தேவையில்லை."

இப்போது சூர்யா அலட்சியமாய் சிரித்தாள். ஒரு நொடியில் உதட்டில் இருந்து சிரிப்பைக் காலி செய்துவிட்டு,

"என்மீது சந்தேகப்படுகிறீர்களா டி.ஐ.ஜி?"

"பொலிஸ் எல்லோர் மீதும் சந்தேகப்படும் - கேள்வி கேட்கும்."

"சோ...இப்போது, இந்த நிமிசம் என்மீது சந்தேகம். நல்லது. சந்தேகம்வரக் காரணம் என்ன? சூர்யா துணிச்சலான பெண். துடிப்பான பெண். அதனால் கொலைகூட செய்யக்கூடும் என்று நினைக்கிறீர்கள். அப்படித்தானே டி.ஐ.ஜி?"

அவளிடம் பொய் உதவாது என்று முடிவுக்கு வந்து, தன் கதிரையில் இருந்து முன்னே சரிந்து, மேசையில் முழங்கைகள் ஊன்றியபடி, சூர்யாவின் விழிகளுக்குள் பார்த்தபடி,

"உங்கள் டயறியை நான் வாசித்துப் பார்த்தேன் சூர்யா."

"நாகரிக மீறல்."

சூர்யாவிடம் மெல்லிய கோபம் தெரிய, டி.ஐ.ஜி. மெல்லச் சிரித்து, மேசை மீது கிடந்த பேப்பர் வெயிட்டை இடது கையால் ஒரு சுற்றுச் சுழற்றிவிட்டு,

"விசாரணைக்கு அவசியமானால் அந்தரங்கங்களின் அடி முதல் முடி வரை பொலிஸ் அலசும் மிஸ் சூர்யா! உங்கள் கோபம் அனாவசியமானது என்று நினைக்கிறேன். உங்கள் டயறியில் நிறைய கவிதைகள். பத்துமாத கர்ப்பமான பெண் மாதிரி, பக்கங்கள் முழுக்க கவிதைகள் நிறைந்து, சோகத்தில் தோய்ந்து ஏதோ ஒரு செய்தியை பிரசவிக்கத் துடிப்பது மாதிரித் தெரிகிறது. ஐ....திங்...லவ் பிறேக்!"

டி.ஐ.ஜி. சொல்ல கதிரை தள்ளி ஆவேசமாய் எழுந்தாள் சூர்யா!

■

கேசவ் என்று நிர்மலாவால் நினைக்கப் பட்டவன் ஜவாஹரோடு சேர்ந்து சிரித்தான்.

நிர்மலாவுக்கு புரியவில்லை. ஏன் சிரிக்கிறார்கள்?

ஜவாஹர்தான் சந்தேகம் தீர்க்க முதலில் பேசினான்.

"நிம்மி! இது கேசவன் அல்ல. கேசவனின் தம்பி ராகவன். சுருக்கமாக ராகவ். கேசவனைவிட பெண்கள் வட்டாரத்தில் பிரமாதமான பெயர் எடுத்திருப்பவன். ராகவ். இது நிர்மலா. நேற்றுவரை கேசவனை காதலித்தாள். இன்றும் காதலிக்கிறாளா தெரியவில்லை."

ஜவாஹர் சொல்லிவிட்டுச் சிரித்தான். 'ஹலோ' என்று ராகவன் நிர்மலாவை நோக்கி கை நீட்டினான். அதிர்ச்சியில் இருந்து விலகி, ராகவனின் கையைப்பற்றி குலுக்கியபோது, வலிமையானவன்தான் என்று புரிந்துகொண்டான்.

கைபற்றி குலுக்கும்போதே நிர்மலாவின் உள்ளங்கையில் விரல்களால் வருடிவிட்டு, கையை விடுவித்தபடி, வெளியே தெரிந்த நிர்மலாவின் மார்புகளது விளிம்புகள்மீது விழிகளை மேய அனுமதித்து,

"அமோகம்தான்."

என்றான், அவள் மார்புகள் மீதிருந்து பார்வை விலக்காமல். அவன் எதைச் சொல்கிறான் என்று புரிந்து கொஞ்சம் வெட்கமும், கொஞ்சம் கர்வமும் கலந்து நிர்மலா முதற்தடவையாக அவனைப் பார்த்து புன்னகைக்க, ஜவாஹர் புரியாமல்,

"என்ன சொன்னாய் ராகவ்?"

"ஒன்றுமில்லை. நான் கரடியாக வந்துவிட்டேனா ஜவா?"

என்று கேட்டான் ராகவன். ஜவாஹர் மெல்லச் சிரித்து,

"அப்படித்தான். ஆனாலும் பாதகமில்லை. கிணற்று நீர்தானே? வேண்டியபோது எடுத்துக்கொள்ளலாம். எனவே, குறுக்கிட்டதற்கு நீ வருந்தத் தேவையில்லை,"

என்றான், நிர்மலா ராகவனையே வைத்த விழி வாங்காமல் பார்ப்பதைக் கவனித்தபடி.

கேசவன் கொல்லப்பட்டது ராகவனுக்கு தெரியவில்லை. . இதுவரை செய்தி எட்டவில்லை. தெரிந்தால் என்ன செய்வான்? என்மீதும் சந்தேகம் கொள்வானோ? என்று அவனையே பார்த்தபடி, அவனது தடித்த உதடுகளை கவனித்துக்கொண்டு யோசித்தாள் நிர்மலா.

"தாகம் இருக்கும்போதுதானே தண்ணீர் வேண்டும்?"

என்று சொல்லி ஜவாஹரைப் பார்த்து கண்ணடித்தான் ராகவன்.

நிர்மலா மூச்சு விடும்போது முன் எழுந்து தணியும் மார்புகளை முறைத்துப் பார்த்துக்கொண்டு மிகச் சாதாரணமாகக் கேட்பதுபோல் அந்தக் கேள்வியை கேட்டான் ராகவன்.

"நிம்மி! கேசவனை கொன்றது யார் என்று உனக்குத் தெரியும். அது இப்போது எனக்கும் தெரிய வேண்டும். யார் அது?"

ஜவாஹர் திகைத்து,

"என்ன கேசவன்... கேசவனைக் கொலையா? என்ன ராகவ்...நீ...சொல்வது உண்மைதானா?"

"என்ன நிர்மலா, ஜவாஹருக்கு நீயே சொல்லு. அப்போதுதான் நம்புவான். அதிர்ச்சிப்படுகிறான் பார். சொல்லு நிம்மி."

நிர்மலா ஆணியடித்ததுபோல் அசையாமல் நின்றாள்.

ஜவாஹர் இருவரையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டிருந்தான்.

ராகவன் தன் சட்டையை தூக்கி இடுப்பில் இருந்து ஒரு கத்தியை வெளியே எடுத்தான். பொலிஷ் பண்ணப்பட்டதுபோல பளபளத்தது.

கத்தியைப் பார்த்துவிட்டு நிர்மலாவைப் பார்த்தான்.

ஜவாஹர் ராகவனை நெருங்கி வந்தான்.

■

இன்ஸ்பெக்டர் சிறிதரன் குலாம்ஷாவிடம் அந்த பொத்தானை நீட்டினார்.

பிரியா தன் கமராவால் கேசவன் செத்துக்கிடந்ததை பல கோணங்களில் கிளிக் பண்ணிக்கொண்டிருந்தாள்.

"கேசவனின் சட்டைகள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் பார்த்துவிட்டோம். பொத்தான்கள் எல்லாம் சரியாகவே இருக்கின்றன."

சிறீதரன் சொல்ல, குலாம்ஷா அந்தப் பொத்தானை உள்ளங்கையில் வைத்து பாாத்துவிட்டு, தன் கைக்குட்டை எடுத்து அதில் பத்திரப்படுத்திக்கொண்டார்.

சிறீதரன் முகத்தில் தயக்கம் தெரிய,

"நான் டி.ஐ.ஜியிடம் சொல்லிக் கொள்கிறேன். யோசிக்க வேண்டாம்,"

என்றார் குலாம்ஷா. சாதாரண உடையில் இருந்தார். லீவிலும் இருக்கிறார். வழக்கில் சம்பந்தம் இல்லாதவரிடம் தடயம் எப்படிக் கொடுத்தாய் என்று கேள்வி வரலாம். ஆனால் குலாம்ஷா விடயத்தில் டி.ஐ.ஜி. கோபப்படமாட்டார். எனவே தயக்கம் துறந்து சிறீதரன் நிம்மதியானார்.

"கொலையாளியை சுலபமாகத் தப்ப அனுமதித்து விட்டீர்கள் இன்ஸ்பெக்டர்,"

என்றார் குலாம்ஷா. அவன் மூன்றாம் மாடியில் இருந்து குதித்த இடத்தில் நின்று கீழே பார்த்தார். பயிற்சி உள்ளவனாக இருப்பான். அதுதான் சேதம் இல்லாமல் குதிக்க முடிந்திருக்கிறது. தப்பவும் முடிந்திருக்கிறது என்று நினைத்துக் கொண்டார்.

அவன் தப்பிப்போன காரை தொடர முயன்றும், இடையில் போக்குவரத்துப் பொலிஸ் தடுத்துவிட, தன் அடையாள அட்டை காட்டி, சிக்னல்களில் நிறுத்தாமல் வந்த காரணம் விளக்கி நேரம் போனதில் தொடரமுடியாமல் போய்விட்டது.

"அவனுக்கு நேரம் நன்றாக இருக்கிறது. கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத நிலையில் பொலிஸ் திணறுகிறது பாருங்கள்,"

என்றார் குலாம்ஷா சிறீதரனிடம். கீழே கார் பார்க்கிங்கில் நிறுத்தப்பட்டிருந்த கொலையாளியின் கார் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு போகப்பட்டது.

போனில் டி.ஐ.ஜி. அலுவலகத்தோடு தொடர்பு கொண்டார் குலாம்ஷா.

டி.ஐ.ஜி. அப்போதுதான் வெளியே போனதாகச் சொன்னார்கள்.

கொலையாளி வந்த கார் யாருடையது என்று விபரம் கிடைத்துவிட்டதா என்று கேட்டார்.

"கிடைத்துவிட்டது. நீங்கள் யார் சேர்?"

"யார் இன்ஸ்பெக்டர் மோகன்தானே? நான் குலாம்ஷா. குரலே மறந்துவிட்டதாக்கும்?"

"சொறி சேர். கார் யாருடையது தெரியுமா சேர்?"

"இப்போது அதைத்தானே கேட்டேன்?"

"காரின் உரிமையாளர்.."

"காரின் உரிமையாளர்?"

"பிரியா...பிரியா பசுபதி.."

"என்ன?"

அதிர்ந்தபடி ரிசீவரை வைத்துவிட்டு திரும்பிப்பார்க்க... பிரியா இப்போதும் மிகவும் தீவிரமாய் கமராவால் கேசவன் உடலை கிளிக் பண்ணிக்கொண்டு இருப்பாள் என்று நீங்கள் நினைத்தால் அது தவறு.

பிரியாவை அங்கு காணவில்லை.

■

நிர்மலாவை குறைசொல்லி, ஹரிகரன் கொலையானபின் நிர்மலாவின் போக்கு மேலும், மேலும் விபரீதமாவது சொல்லி விம்மிக் கொண்டிருந்தாள் திருமதி ஹரிகரன்.

சகோதரன் இழந்த சோகம் மறைய முன்னர் தன் மகளை இழந்து, அதன் பின்னர் மனேஜர் மனோகரன் மரணத்தால் மேலும் பீதியாகி சகல வியாபார நடவடிக்கைகளையும் ஒரு மாதகாலத்திற்கு ஒத்தி வைத்துவிட்ட பிரசாத், தன் மைத்துனிக்கு எப்படி ஆறுதல் சொல்வது என்று யோசனையோடு தன் முன் நெற்றியை விரல்களால் தேய்த்துக்கொண்டார்.

"இப்போது நிர்மலா எங்கே?"

என்று கேட்டபடி தன் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டார். இரவு.10.52. என்றது கடிகாரம்.

"தெரியாது. போகும் இடம் சொல்லுவது கூடக் கிடையாது. வருகிறாள். போகிறாள்."

"எப்போதாவது இரவில் வராமல் இருந்திருக்கிறாளா?"

தயங்கியபடிதான் கேட்டார்.

"இதுவரை இல்லை. இப்படியே விட்டால் அப்படியும் நடக்கும்,"

என்றாள் திருமதி ஹரிகரன். திடீரென்று நினைத்துக் கொண்டவளாக திருமதி ஹரிகரன் பிரசாத்திடம்,


"டி.ஐ.ஜி. என்மீதும் சந்தகேகப் படுகிறார்."

ஏன் என்பது போல பிரசாத் புருவம் உயர்த்தினார்.

"காரணம் நான் தான்."

## 14





"என்ன காரணம்?"

"உங்களை காப்பாற்றுவதற்கும், நிர்மலாவுக்கு அவமானம் வராமல் இருக்கவும் நான் சொன்ன பொய்கள்."

சொல்லிவிட்டு குலுங்கி, குலுங்கி அழத் தொடங்கினாள் திருமதி ஹரிகரன்.

பிரசாத் தன் இருக்கைவிட்டு எழுந்து திருமதி ஹரிகரனின் அருகே போனார். குலுங்கி அழும் அவள் முதுகில் கரம் வைத்து ஆதரவாய் வருடினார்.

துள்ளி எழுந்து விலகிப்போய் நின்று திருமதி ஹரிகரன் பிரசாத்தைப் பார்த்து கையெடுத்துக் கும்பிட்டாள்.

"பிளீஸ். எங்களை இத்தோடு விட்டு விடுங்கள். எனக்கு என் மகள் போதும். வேறு எதுவும் வேண்டாம்."

அவள் சொல்ல, பிரசாத் தீர்க்கமான குரலில் சொன்னார்,

"எனக்கு வேண்டும். எல்லாம் வேண்டும்."

சொல்லிக்கொண்டே அவளை நோக்கி அடி எடுத்து வைத்தார்.

முன் ஹோலின் வலது புற மேல் மூலையின் உயரத்தில் இருந்த சின்ன ஜன்னல் வழியாக அனைத்தையும் கவனித்துக் கொண்டிருந்த அந்த உருவம் தன் பற்களை நறநறவென்று கடித்துக்கொண்டது.

"பிரசாத் நீ தப்பமாட்டாய்." என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டது.

(இன்னும் வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: க.போல்ராத்
வயது: 25
முகவரி: 157, தர்மராம வீதி, தெமட்டகொட, கொழும்பு-09.
பொழுதுபோக்கு: வழமையான பொழுதுபோக்குகள்.



பெயர்: ஐ.சமூன்
வயது: 21
முகவரி: வேப்பங்குளம், மன்னார் வீதி, வவுனியா.
பொழுதுபோக்கு: ரீ.வி., பத்திரிகை, கதைப்புத்தகம் வாசித்தல், நண்பர் தொடர்பு.




பெயர்: ரி. சுகிர்த்தமலர்
முகவரி: 22, சேனைத்தெரு, மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.



பெயர்: டபிள்யூ. டில்சான் பேகம்
வயது: 23
முகவரி: ரம்ஸீன் மன்சில், ஹெலமுதுன, பண்டாரவளை.
பொழுதுபோக்கு: ரீ.வி. பார்த்தல், வானொலி கேட்டல், புத்தகம் வாசித்தல்.



பெயர்: வி. செல்வா
வயது: 27
முகவரி: FELD STR.60, 8004, ZURICH, SWITZERLAND.
பொழுதுபோக்கு: பத்திரிகை, சினிமா, தொலைக்காட்சி.



பெயர்: ஏ.ஆர். நூர்டீன்
வயது: 31
முகவரி: P.O.BOX- 28878 SAFAT, KUWAIT.
பொழுதுபோக்கு: உதைபந்து, கூடைப்பந்து விளையாடுதல், பேனா நண்பர் தொடர்பு.

பெயர்: எஸ். ரஞ்சன்
வயது: 19
முகவரி: 50-54, ஜெம்பட்டா வீதி, கொழும்பு-13.
பொழுதுபோக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.

பெயர்: எச்.எம்.எம். அம்ஹர்
வயது: 20
முகவரி: 166, மெயின் வீதி கொழும்பு-11.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: த. ஜெய்குமார்
வயது: 21
முகவரி: பாரதி வீதி, ஆறுமுகத்தான் குடியிருப்பு,செங்கலடி.
பொ.போ: பத்திரிகை, கதைப்புத்தகம், வாசித்தல், வானொலி கேட்டல், ரீ.வி. பார்த்தல்.

பெயர்: ஐ.எம். சகீம்
வயது: 19
முகவரி: பள்ளி வீதி, அக்கரைச்சேனை, மூதூர்-01.
பொ.போ: பத்திரிகை வாசித்தல், வானொலி, தொலைக்காட்சி

பெயர்: த. கருணாகரன்
வயது: 23
முகவரி: 106, கொழும்பு வீதி, கண்டி.
பொழுதுபோக்கு: பத்திரிகை, புத்தகம் வாசித்தல்.

பெயர்: எம்.பீ.எம். பவாஸ்
வயது: 18
முகவரி: A 42/2, இஹலகம, கன்னத்தொட.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், நண்பர் தொடர்பு.

## ஹஜ்ஜுப் பெருநாள் சிறுகதை

இறைவன் பொன்னையோ பொருளையோ நோக்குவதில்லை. அவன் மானிட இதயங்களையும் அதன் எண்ணங்களையுமே நோட்டமிடுகிறான். ஏழை-பணக்காரன் என்ற பேத விலாசங்களுக்கு மதிப்பளிக்காதவன் இறைவன். இன்று புனித ஹஜ்ஜுப் பெருநாள். தியாகத்தின் திருநாள். (முஸ்லிம்களின்) புனித க:'பா ஆலயத்தில் இலட்சோபலட்சம் முஸ்லிம்கள் வலம் வருவார்கள். அது கடமை.

# ஏழையின் ஹஜ்....



அக்குறணை-ஹரீரா அனஸ்

இன்றும் வழமைபோல் தனது கடலை வண்டியைத் தள்ளியபடி பஸாருக்கு வந்தார் முபாரக் நானா. அக்குறணை பஸாரில் முபாரக் நானா என்றால் தெரியாத எவருமே இருக்க மாட்டார்கள். சிறிய பிள்ளைகள் முதல் பெரியவர்கள் வரை அவரிடமே கடலை வாங்கும்போது அவர் பிரபலமானதற்கு வேறென்ன காரணம் இருக்க வேண்டும்?

"என்னா முபாரக் நானா...... நான் ஒரு விஷயம் கேள்விப்பட்டேனே.... என்னா உண்மையா?"

"என்ன நியாஸ் ஹாஜியார் என்னா?"

"ஆமா. அதுதான் நீங்களும் இந்த முறை ஹஜ்ஜுக்கு போறீங்களாமே?"

"ஆமா ஹாஜியார். அதுதான் அந்த ஆண்டவண்டை முபாரக்கான வூட்டை மௌத்துக்கு 'முதல் ஒரு தடவை போய் கண்ணாலை பாத்திட வேணுமெண்டு நிய்யத்து வைச்சி துஆவும் செஞ்சேன். அதுதான் அந்த றஹ்மான் என்ட துஆவைக் கபூல் செஞ்சிட்டான் போல இரிக்கு."

"அப்ப நீங்க ஹஜ்ஜுக்கு போறீங்க அப்பிடித்தானே?"

"ஆமா ஹாஜியார்."

"முபாரக் நானா! இப்ப ஒங்களுக்கு எதுக்கு முபாரக் நானா ஹஜ்ஜை? அதுக்கு சில நிபந்தனையள் இரிக்கு பாருங்கோ. அதாவது உடல்லை தெம்பு வேணும், பயணத்துக்குத் தேவையான பணவசதி இரிக்க வேணும்."

நியாஸ் ஹாஜியார் முபாரக் நானாவை மட்டந்தட்டிப் பேசினார். ஏழை எளியதுகள் எல்லாம் ஹஜ் என்று போய்விட்டு வந்து விட்டால் அவர்களையும் ஹாஜியார் என்று அழைக்க வேண்டி வந்து விடுமே. அப்போ தங்களைப் போல இருக்கும் பணக்காரருக்கு மதிப்பு இல்லாமல் ஆகிவிடுமே எனும் எண்ணங்கள் அவரை அவ்வாறு பேச வைத்தன.

★★★

"உம்மா ஜெமீலா" என்றவாறு தனது மண்வீட்டினுள் நுழைந்தார் முபாரக் நானா. "என்னங்க" என்று கேட்டுக்கொண்டே வந்தாள் அவரது மனைவி ஜெமீலா. தனது கணவனின் முகம் இன்று கவலை தோய்ந்திருப்பதை அவதானித்தாள் ஜெமீலா. ஏன் இப்படிக் கவலையாக தன் கணவர் இருக்கிறார் என்று பலவாறு சிந்தித்தாள் அவள். முபாரக் நானா தன் அன்பு மனைவி ஜெமீலாவை அருகில் அழைத்து உட்காரும்படி கூறினார். ஜெமீலா உட்கார்ந்ததும் நியாஸ் ஹாஜியார் கூறியதை ஒன்றுவிடாமல் கூறிக்கொண்டிருக்கும்போது அவருக்குத் தாங்க முடியாமல் அழுதுவிட்டார். தனது கணவனின் இந்த நிலைகண்டு ஜெமீலாவும் கண் கலங்கினாள். முபாரக் நானா மனைவியின் மடியில் ஆதரவாகப் படுத்துக்கொண்டு கூறினார்,

"ஜெமீலா இஞ்சை பாரேன். அல்லாஹ்டை வூட்டுக்குப் போறதுக்கு எண்டு எத்தினை பேர் முயற்சி செய்யுறாங்க. அதிலை அல்லாஹ் தெரிஞ்செடுத்த சிலரைத்தான் தன் வூட்டின் பக்கமா அழைச்செடுக்கிறான். ஆனா பாரு ஜெமீலா! ஹஜ்ஜுக் கெண்டு போறவங்க எல்லாருமே ஹஜ்ஜு நிய்யத் தோடை? அல்லாஹ்டை நிய்யத்தோடையா போறாங்க இல்ல. சில பேர் தங்கடை பேருக்கு முன்னாடி 'அல்ஹாஜ்' எங்கிற பட்டத்தைச் சேர்த்துக்கிறதுக்காகப் போறாங்க... சிலபேர் சாமான் சட்டுகளை வாங்கிவரப் போறாங்க. சிலபேர் ஒரு உல்லாசப் பயணம் மாதிரிப் போறாங்க. இதிலை கொஞ்சப் பேர்தான் அல்லாஹ்டை மாளிகையைத் தரிசிக்கிற நல்ல நிய்யத்தோடை போறாங்க.... ரசூலுடைய கப்ரு ஷரீபை தரிசிக்கிற நிய்யத்தோடை போறங்க... இண்டைக்கு நம்ம நியாஸ் ஹாஜியார் நான் ஹஜ்ஜுக்கு போகப் போறன் எண்டு கேள்விப்பட்டவுடனே என்னமாதிரி வவுறு எரியிறார் தெரியுமா?"

"ஏனுங்க அவருக்கு என்னாங்க நீங்க ஹஜ்ஜுக்கு போனா?"

"அதுவா! ஒரு வேளை ஹஜ்ஜை நிறைவேத்திப் போட்டு திரும்பி வந்தா என்னையும் ஹாஜியார் எண்டு கூப்பிட வேணுமே எங்கிற பொறாமைதான்."

"ஆமாங்க இந்த முறை ஹஜ்ஜுக்குப் போக வெண்டு நீங்க என்னா செஞ்சீங்க? தஹஜ்ஜுத்திலை ஒவ்வொருநாளும் எழும்பி துஆ செஞ்சீங்க. அழுதீங்க. அல்லாஹ்விட்டை கெஞ்சினீங். அல்லாஹ்வாப் பார்த்து உங்களுக்கு மறைமுகமா உதவி செஞ்சிரிக் கானுங்க."

"ஆமா... ஜெமீலா அல்லாஹ் நம்மளப் போல ஏழைங்களிலை எவ்வளவு இரக்கப்பட்டிருக்கிறான் பாரேன்."

மானிடனின் மனம் என்கின்ற மாளிகையின் இருப்பிடத்தினுள் இறைவன் வாழ்கிறான். இறைவன் மனிதனின் பிடரி நரம்பை விட அண்மித்திருக்கிறான்.

★★★

மே மாதம் எட்டாம் திகதி. முபாரக் நானாவின் குடிசையிலும் விடிவிளக்கு எரிந்துகொண்டிருந்தது. மனைவி ஜெமீலா மகள் ஹபீலா எல்லோரும் சந்தோஷித்துப் போனார்கள். இன்று இரவு புறப்பட்டு காலை எட்டு மணிபோல் அரபு எமிரேட்ஸை நோக்கிப் பயணமாகும் ஹாஜிகள் விமானத்தில் செல்வதற்காக முபாரக் நானாவும் போகும் ஹஜ் குழுவினரும் ஆயத்தமாகின்றனர். மத்திய பள்ளியில் ஒன்று சேர்ந்து குழு புறப்படும்.

முபாரக் நானா அசல் ஹாஜியாகி விட்டார். இஹ்ராம் கட்டியவுடன் ஆளை அடையாளமே தெரியவில்லை. வீட்டில் வைத்தே இஹ்ராம் கட்டிவிட மல்க்கான் மௌலவி வந்திருந்தார். மல்க்கான் மௌலவி முபாரக் நானாவின் நெருங்கிய கூட்டாளி.

இஹ்ராம் உடையோடு தனது ஆருயிர்க் கணவனைக் கண்ட ஜெமீலா கண் கலங்கி விட்டாள். அது ஆனந்தக் கண்ணீர். கடலை விற்கும் முபாரக் நானா இனி ஒரு ஹாஜியார். வீட்டிற்கு அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் அனைவரும் வந்து முபாரக் நானாவோடு "முஸாபஹா" செய்து "முஆனக்கா" செய்து தங்களுக்கும் துஆச் செய்யுமாறும்-ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஸலாம் கூறும்படியும் சொன்னார்கள்.

"ஆ...முபாரக் நானா நேரமாயிட்டுது. அங்கை பள்ளியிலை ஹாஜிமார்கள் எல்லாரும் சேருகினம். அவசரமா வெளிக் கிடுங்கோ போவம்." பக்கத்து வீட்டு பாரிஸ் அவசரப்படுத்தினார். வீட்டில் மனைவி பிள்ளைகளிடம் சலாம் கூறிவிட்டு பெற்று முபாரக் நானா பள்ளியை நோக்கி நடந்தார்.

★★★

"லப்பைக் அல்லாஹும்ம லப்பைக்... லாஷரீக்க லக லெப்பைக்..." தல்பியாவின் முழக்கம் வானைப் பிளந்தது. தன் இரு கண்மணிகளால் புனித கஃபாவைக் காணக்கிடைத்ததை எண்ணி முபாரக் நானா அழுதார். விம்மி விம்மி அழுதார். அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தும் பொருட்டு ஸஜ்தாவில் விழுந்தார்.

"யா அல்லாஹ் இந்த ஏழையையும் உன் வீட்டைத் தரிசிக்கச் செய்த ஆண்டவனே உனக்கே எல்லாப் புகழும். 'அல்ஹம்து லில்லாஹ், அல்ஹம்துலில்லா...' என திக்ரு செய்த வண்ணமிருந்தார்.

ஹஜ்ஜின் எல்லா அமல்களையும் ஆசையோடும் ஆர்வத்தோடும் அல்லாஹ் விற்காகவும் செய்து கொண்டிருந்தார் முபாரக் நானா. அத்தோடு கஃபாவின் திரையைப் பிடித்து தனக்காகவும், தன் குடும்பத்திற் காகவும், தனது ஊருக்காகவும், எல்லா மனிதர்களின் ஹிதாயத்திற்காகவும் துஆச் செய்தார் அவர். மனித மனங்கள் ஒன்றுபட வேண்டும். எங்களூரின் எல்லாச் சிக்கல்களையும் விலக்கும்படியும் ஒரு பொறுப்புள்ள முஸ்லிமாய் அல்லாஹ்விடம் இறைஞ்சினார்.

அது துல்ஹஜ் மாதம் ஒன்பதாம் நாளிரவு. ஹஜ் கடமைக்காகப் போகும் அத்தனை ஹாஜிகளும் இந்த இரவில் அரபா மைதானத்தில் தங்கி இருப்பது கடமை. அப்படி அரபா மைதானத்தில் தங்கியிருக்காவிடின் ஹஜ் கடமையே கூடாது. எத்தனை இலட்சம் ஹாஜிகள் போனாலும் அந்த இடத்தை அல்லாஹ் விசாலமாக்கி வைக்கிறான். ஒன்பதாவது பகல் ஷைத்தானுக்குக் கல் அடிப்பதற்காக ஹாஜிகள் கற்களைப் பொறுக்கும் அரபில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

முபாரக் நானாவும் தமது ஹஜ் குழுவின் கூடாரத்தில் தொழுதுவிட்டு கல் பொறுக்குவதற்காக வெளியில் வந்தார். அந்த இரவு முபாரக் நானாவிற்கு மனதுக்கு ரம்மியமானதாயும் மகிழ்வானதாயும் இருந்தது. அரபா மைதானமே பூம்பந்தலாய் அவருக்குத் தென்பட்டது. ஏனிந்த மகிழ்ச்சி. ஏனிந்த ஆனந்தம்......?

மனநிறைவாய் கற்களைச் சேகரித்தார் நானா. அடுத்த முக்கியமான அமல் செய்ய வேண்டும். எண்ணிக்கொண்டார். அரபா மைதானத்தில் வைத்துக் கேட்கும் எல்லாத் துஆக்களும் கபூலாக்கப்படும்.

தன் அருமை மனைவி-மகள் ஆகியோருக்கான நிறைவான வாழ்வுக்காக துஆச் செய்தார்.

எல்லோரும் சொர்க்கம் போக வேண்டுமே எனவும் இறைஞ்சினார். பின்னர் ஒளு எடுத்து தஹஜ்ஜுத் தொழுவதற்காகத் தயாரானார்.

தக்பீர் கட்டி, அல்ஹம்து சூரா ஓதி, ருகூவு செய்து சுஜூது செய்தார்.

இறைவனுக்கு மிக விருப்பமான ஒரு நிலைதான்- தன் அடியான் தனது தலையை நிலத்தில் வைத்து தன்னை வணங்கும் சுஜூது நிலை.

முபாரக் நானாவின் எண்ணத்தை இறைவன் ஏற்றுக் கொண்டான். தன் மரணத்திற்கு முந்தி இறைவனின் வீட்டைத் தரிசிக்க வேண்டுமே! ஆசை பூர்த்தியாகி விட்டது. 'தஹஜ்ஜுத்'துத் தொழுகையின் சுஜூது நிலையில் புனித அரபா மைதானத்தில் முபாரக் நானாவின் உயிரை இறைவன் தன்னளவில் ஏற்றுக்கொண்டான்.

ஆம்...! அந்த ஏழை முபாரக் நானா, கடலை வியாபாரி முபாரக் நானாவும் ஒரு ஹாஜியார்.

அந்த ஏழையின் ஹஜ்ஜும், அந்தப் புனித பூமியில் இருந்து கேட்ட அத்தனை துஆக்களும் கபூலாக்கப்படட்டும்.

(ஆக்கம் கற்பனை)

*உங்களுக்கு உதவி செய்ய வேண்டி சில நொடிகள் தரியுங்களேன்......!*

***முபாரக்***- *சிறந்த*, ***மௌத்து***-*மரணம்*, ***துஆ***- *பிரார்த்தனை*, ***ஹாஜியார்***- *ஹஜ்கடமையை நிறைவேற்றியவர்*, ***நிய்யத்***- *சிறந்த எண்ணம்*, ***அல்லாஹ்***- *இறைவன்*, ***கப்ரு ஷரீப்***-*நபியின் அடக்கத்தலம்*, ***தஹஜ்ஜுத்***-*இரவுத் தொழுகை*, ***இஹ்ராம்***- *ஹாஜி அணியும் வெள்ளாடை*, ***மௌலவி***- *அறிஞர்*, ***முஸாபஹா***- *கைலாகு*, ***முஆனக்கா***- *கட்டிப்பிடித்தல்*, ***ரசூல்***-*நபி/தூதுவர்*, ***ஒளு***- *அங்கசுத்தி*.

| | |
|---|---|
| *தக்பீர் கட்டி*<br>*அல்ஹமது ஓதி-*<br>*ருகூஊ-*<br>*சுஜூது-* | *தொழுகையின் நிலைகள்* |

# பிராயச்சித்தம்

மண்டூர்–உருத்திரா

"ஒரு ஆம்பிளை விலை ரெண்டு இலட்சமா? காதலிச்ச பெண்ணை ஏமாற்றி இரண்டு இலட்சத்திற்காய்...."



நேராகவே அவளிடம் என் முடிவை சொல்லவாமா? அல்லது கடித மூலம்...? கடித மூலம், எண்டா கோழைண்ணு சொல்வாள்...ம் எப்படி, என்ன செய்யிறது? நான் குழம்புகின்றேன். வாரக் கடைசியில் இருந்து இந்த முதல் தேதிவரை முடிவில்லான எனது குழப்பம்!

"உன்னிட்ட நான் இருந்தெண்டு இதமட்டும் தானப்பா கேக்குறன். கடைசியும் முதலும் இதுதான், எண்ட ஆசையும்கூட."

இது சிவசக்தியை கட்ட வேண்டும் என்ற அம்மாவின் ஒற்றைக்கால் பிடியின் முகவுரை!

"காதலிக்க ஒருத்தி கலியாணம் செய்ய ஒருத்தியா?

"அம்மா, குமுதாவும் சிவசக்தியைப் போல பொண்ணுதான். சிவசக்திட்ட பணமாவது இருக்கு. எப்படிம்மா குமுதாவுக்கு துரோகம் செய்...."

"பேசாத. சிவசக்தி உனக்கு ரெண்டு இலட்சம் தருவா. குமுதாவால எவ்வளவு தரமுடியும்டா?"

"அவங்க அகதியா வந்தவங்ககிட்ட இவ்வளவு தொகை ஏதும்மா?"

"எனக்குத் தேவை. கடசியாய்ச் சொல்லுறன், சிவசக்தியை உன்னால கட்டமுடியாட்டி, ரெண்டு இலட்சத்தோட முழுச்சீதனம் தரக்கூடிய யாரையாவது கட்டிக்க. இல்ல குமுதாட்ட இருந்து ரெண்டு இலட்சம் வாங்கித் தந்திட்டு போ."

கடைசியாய் அம்மாவின் ஆக்ரோஷம் ரெண்டு இலட்சத்தில் அடங்கிப்போகிறது. 'ச்சீ...ஒரு ஆம்பளை விலை ரெண்டு இலட்சமா? காதலிச்ச ஏழைப் பொண்ண ஏமாத்திட்டு ரெண்டு இலட்சத்திற்காய். அந்தப் பாவத்தை ஏந்திட்டு நான்...வாழ முடியுமா? ஒரு ஏழைக் கண்ணீர் அனலாக கொதிக்க, என்னால் நிம்மதியா வாழ முடியுமா?

"...ம், சீதனம் வாங்காட்டி நமக்கு மதிப்பில்லப்பா." என்று சொன்ன என் அம்மா, என்னப் பெத்தவளா இருந்தா தூக்கி வீசிட்டு போயிடலாம். பெத்தவயிறுண்ணு அடுத்தநாளே கூட்டிட்டு போயிடுவா? ஆனா நான்...? தாயும் தந்தையும் தூக்கி வீசிவிட்டு சொர்க்கம் தேடிட்டபோது, வழியே தெரியாத சின்னஞ் சிறு பாலகன். இவ விதவண்ணு ஊர் ஒதுக்கி, மலடிண்ணு பட்டம் கொடுத்ததால வேதனைப்பட்டு கிடந்த நேரம்; என்னை வளர்த்து படிக்க வைச்சி, உத்தியோகம்வரை முன்னேற வைச்சு, வயிற்றில பிறந்தவனா என்னை நினைக்கிற, இதயத்துக்கு அவவிருப்பப்படி இந்த ஒரு காரியத்தையாவது செய்ய முடியலண்ணா... நான் நன்றி கெட்டவன்...துரோகி.. மறுநிமிடத்தில் இருந்தே, நானொரு காதலைத் துறக்கத் துணிந்த தியாகியாகி,....நேராகவே குமுதாவிடம் என் நிலமையை எடுத்துச் சொல்லச் செல்கிறேன்.

"ஐயோ, என்ன ஏமாத்திட்டியா? உன்னப் போலவன நம்பக்கூடாதுண்ணு சொன்னதைக் கூட, மறந்து நான் நம்பி இப்ப ஏமாந்திட்டனே."

அவள் ஓலமிடுகிறாள். ஒரு பெண்ணின் வழக்கமான நிலை.

"குமுதா! சொல்றத கேளும்..."

"நோ. என்னால இனி எதையும் கேட்க முடியாது. உன்ர போலி வார்த்தையள கேட்டுக்கேட்டு காது புளிச்சுப் போச்சு.

"மன்னிச்சுக்க. அம்மாவ என்னால பிரிந்து, அவக்கு மாறா உன்னோட வாழ ஏலாது. வேறு ஒருவனைக் கட்டிற்று சந்தோஷமா வாழு. என்ன மறந்துடுண்ணுதானே,' நீ சொல்லப்போற?. இதையெல்லாம் செய்ய ணும்ன்னுதானே, கடற்கரைக்கும், பூங்காக்கும் கூட்டிட்டுப் போனே? ஏழைப் பொண்ணுதானே இலகுவா ஏமாத்திடலாம்னு நினைச்சத செஞ்சிட்டியேடா பாவி...." மண்ணை வாரி இறைப்பது போல்- என் எதிரே இருந்து கதறுகிறாள்.

"எனக்கு ஏதும் ஆகிடுச்சின்னா, யமனக்கூட கொண்ணுடுவேன்னு சொன்ன நீயே, இப்ப என்ன ஏமாத்திட்டு அணு அணுவாக் கொல்றியே?"

"..........."

"ஆமா, சீதனம் வாங்காட்டி மதிப்பில் லண்ணு உங்கம்மா சொன்னா ஒரு ஏழைப் பொண்ண நீ காதலிக்கிறதுகூட மதிப்பில்லாத விஷயம் எண்டு நீ சொல்லலையா? ஏழையைக் காதலிச்சுட்டு, சீதனத்த சாட்டாக வெச்சு, கைகழுவிட்டு இன்னொருத்திய கட்டறது உங்களப்போலவங்களுக்கு பொழுது போக்கு, ஆனா என்னப்போல பொண்ணுக்கு... 'வாழ்க்கையே அதுதான்'னு தெரியாமப் போகுதே!"

"...."

"எத்தன தடவ உன்னிட்ட சொன்னன், பணமில்ல, இருந்த வசதியையே இழந்துட்டு வந்து அகதியாக இருக்கிறம். இது சரிவராதுண்ணு. நீ கேட்டியா? சீதனமே வாங்காம கலியாணம் கட்டி, ஏழைப் பொண்ண வாழ வைக்கிறதுதான் என் இலட்சியம்ணு அடிச்சு அடிச்சு சொல்லியே உன் கை வெடிச்சுப் போயிருக்குமே? இதெல்லாம் மறக்கமுடியுமா? அன்பு, அன்பு எண்டு அன்புக்கே அர்த்தமில்லாம செஞ்சிட்டியே? என்னையே நான் ஏமாத்திட்டு, அம்மா அப்பாவ ஏமாத்திட்டு, கல்வியைப் பாழாக்கிட்டு உன்ன நம்பி ஏமாந்த இந்த ஏழைக்கு நீ செய்கிற கைமாறு இதுதானா? உன்னால பேசமுடியாது. செய்கிறது பிழைன்னு தெரிஞ்சும் நீ...கடசியாய்ச் சொல்றன், நீ நினைக்கிறாப்பில இந்த வேதனையிலே நான் துடிச்சு துடிச்சு, அலறி விதைய அரச்சு சாப்பிட்டிற்று செத்துப்போக மாட்டன். இனித்தான் நான் வாழப்போறன்....நோ..." வார்த்தைகளால் சாட்டையடி தந்துட்டு, எனது சேர்ட் கொலரைப் பிடித்து உலுக்கிச் சோர்ந்துபோய் விம்மி விம்மி அழுகிறாள். ஒரு குழந்தைபோல!

தேற்றுவதற்கு வார்த்தைகளின்றி, தேற்று வதைக் கேட்க திராணியற்றவளாய் அழும் குமுதாவை என்னால் நேரடியாக ஊடறுக்க முடியாமல், ஓயாத அலைகளுடன் பொங்கும் கடலைப் பார்த்தவாறே என் கண்களும் பொங்குகின்றன.

திருமண ஏற்பாடுகள் ஆர்ப்பாட்டமாய் இரு வீடுகளிலும் நடக்கின்றன. ஒன்றிலும் என்னை முழுமையாக ஈடுபடுத்த முடியாமல், அம்மாவின் ஆசைக்காய், அழகிய என் காதலை துறந்த தியாகி என்ற நினைப்பில் இருக்க முடியவில்லை. குமுதாவை காதலிக்க பட்டபாடு, அவளை எனது பாதைக்கு திருப்புவதற்கு எடுத்த முயற்சி என் கண்முன்னே விரிந்து விரிந்து...

என்னைப் போன்ற ஒருவனால், குமுதாவைப் போன்ற பல பெண்கள் ஆண் வர்க்கத்தையே வெறுத்து ஒதுக்குவதில் தப்பில்லை. ஒன்றால்தானே உலகம் கெடுகிறது?

என்னையே நினைச்சு, எனது ஏமாற்றத்தை தாங்க மாட்டாமல், அவள் விடும் அந்த நெருப்புக் கண்ணீர், நான் சிவசக்தியை கட்டிட்டு விடுற ஒவ்வொரு சந்தோஷ பெருமூச்சையும் நீறாக்குமல்லவா?

"பெண் பாவம் பொல்லாதது" எனக்குத் தெரியும். ஆனால் நான் இருந்த நிலையில் இதைத்தவிர என்ன செய்யமுடியும்?

சிவசக்திக்கும் எனக்கும் திருமணம் முடிந்து ஒருமாதம் கடந்துவிட்டது. இரண்டு இதயங்களைக் கொன்ற அம்மாவின் சந்தோஷம், உள்ளூர தான் விரும்பியவனே கிடைத்த ஆனந்தத்தில் சிவசக்தியும்... நிம்மதியையும், சந்தோஷத்தையும் தொலைத்த என்னால் மட்டும்; எப்படி இந்தச் சூழலில் ஒத்துவாழ முடியும்?

"குமுதா"- இரண்டு இலட்சத்திற்காய் நொறுக்கப்பட்ட இதயம்!

"நோ, நான் இனியாவது நிம்மதியாய் வாழவேண்டும்."

திருமண வாழ்த்தோடு, "மணமகள் தேவை" என்ற விளம்பரமும் இலண்டனுக்கு பெண்ணை எடுப்பதற்கான டிக்கட்டுடனும் நேற்று நண்பன் ரகு அனுப்பிய கடிதத்துடன், எழுந்து நிற்கிறேன். என்னால் எனது ஆண் வர்க்கமே பாழாகி சாபப்படக்கூடாது. சீதனவெறியால் குமுதாபோன்ற நல்ல இதயங்கள் வாழ்வை அழிக்கக் கூடாது. நான் சிவசக்தியையும் அழைத்தவாறு குமுதாவின் வீடு நோக்கி பைக்கை நகர்த்துகிறேன்.

அவள் விரும்பினாலும் விரும்பா விட்டாலும், எனது பாவத்திற்கான பிராயச்சித்தமாய் ரகுவிற்காவது அவளை மணமகளாக்கி ஒரு நல்ல மலரின் வாழ்க்கையை இடையிலே கிள்ளி விடாமல் பாதுகாப்பதற்குமாய் செல்கிறேன்!

"காதலிப்பது குற்றமல்ல. காதலை நெறிப்படுத்தி நிலைக்க வைக்க முடியாதவர்கள் காதலிப்பதே குற்றமாகும்!"

(நிஜம் கலந்த கற்பனை)

1942ல் பிறந்த எம். முகுந்தன் மலையாளத்தின் பிரபல எழுத்தாளர். இதுவரை பதின்மூன்று நூல்களை வெளியிட்டுள்ளார். 'தெய்வத்தின்றே விக்ருதிகள்' என்ற ஆக்கத்திற்காக எம்.பி.போல் விருது, கேரள சாகித்ய அக்கடமி விருது, இந்திய சாகித்ய அக்கடமி விருது பேன்றவற்றைப் பெற்றுள்ளார்.

**"நானக்சந்த் தனது சட்டைப் பையில் இருந்து கத்தியொன்றை எடுத்தான். அவளது இதயம் புறாவின் இறக்கைகள் போல படபடத்தது...."**

# டெல்லி 1981

### ஆங்கில மொழிவழி: அஸ்வதி

ராஜீந்தர் பாண்டே ஜன்னலைத் திறந்து வெளியே பார்த்தான். வீதியின் இரு மருங்கிலும் கடைகள் வரிசையாகக் காணப்பட்டன. கடைகளின் பின்புறமாக ஒரு பெரிய மைதானம் காணப்பட்டது. வீதியிலிருந்து யாரும் மைதானத்தைப் பார்க்க முடியாது. ராஜீந்தர் பாண்டேயின் அறை அந்த மைதானத்தை நோக்கி இரண்டாவது மாடியில் இருந்தது. அவனால் கடைத் தெருவையும் கடைகளையும் கடைகளின் பின்னாலிருக்கும் மைதானத்தையும் மிகத் துல்லியமாகப் பார்க்க முடிகிறது.

ஒரு ஒடுங்கிய ஒற்றையடிப்பாதை அந்த மைதானத்தைக் குறுக்கிட்டுச் செல்கிறது. சிறாக் டெல்லிக்குச் செல்லும் பிரதான வீதியைச் சென்றடைய அது ஒரு குறுக்குப் பாதையாக இருக்கிறது. அந்த மைதானம் எப்போதும் சன நடமாட்டமின்றியே காணப்படும். ஒரு சிலரே அந்தப் பாதையைப் பாவிப்பர். ஆனால் பன்றிகள் மேய்வதை எப்போதும் பார்க்கலாம். மைதானத்தின் மேற்குப் பக்கத்தில் சிதைவடைந்த நிலையில் மொகலாய நினைவுக் கட்டிடங்கள் காணப்பட்டன. புறாக்களுக்கு அது புகலிடமாயிருந்தது. புறாக்கள் சிறகடித்துப் பறக்கும் சத்தத்தை அக்கடி கேட்கலாம்.

எந்தவிதமான இலக்குமின்றி பாண்டே வெளியே பார்த்துக்கொண்டிருந்தான். அவனுடைய அறைத்தோழன் கிஷோர் லால் ரேடியோவில் பாட்டுக் கேட்டுக்கொண்டிருந்தான். பாண்டேயிற்கு இசையில் அவ்வளவு நாட்டமில்லை. அதனாலேயே யன்னலோரமாக நின்று கொண்டிருந்தான்.

அந்த ஒற்றயடிப்பாதையில் ரகுவீரும் நானக்சந்த்தும் போய்க்கொண்டிருப்பதைக் கண்டான் பாண்டே. அவர்கள் இருவரும் தான் அந்தப் பகுதிச் சண்டியன்கள். இருவரும் இளைஞர்கள். ஐ.பி.கல்லூரி மாணவி ஒருத்தியை பஸ் நிலையத்தில் வைத்து கலாட்டா செய்ததில் சிலகாலம் சிறையில் இருந்தவன் ரகுவீர். நானக் சந்த் பல தடவைகள் சிறையில் அடைக்கப்பட்டவன். ஒரு பெண்ணிடம் தங்கச் சங்கிலியைப் பறித்துக்கொண்டதற்காக இறுதியாக சிறை சென்றவன் நானக்சந்த்.

அமர் சிங்கின் சலவைக் கடைப் பின்புறமாக அவர்கள் இருவரும் நடந்து சென்று கொண்டிருப்பதை பாண்டே கண்டான். பின்பு அவர்கள் சலவைக்கல் ஒன்றின்மீது அமர்ந்து புகைபிடித்துக்கொண்டிருந்தார்கள்.

மைதானத்தின் முடிவில் மிகத் தொலைவில் ஒரு மஞ்சள் நிற உருவம் அசைவதை பாண்டே கண்டான். அதனுடன் ஓர் உயரமான உருவமும் அசைந்தது. ஒரு மனிதனும், அவனுடன் மஞ்சள் நிறச்சேலை அணிந்த ஒரு பெண்ணும் வருவதைச் சில கணங்களில் புரிந்துகொண்டான். அந்த மனிதன் ஒரு குழந்தையையும் தூக்கி வந்தான்.

ரகுவீர் தலையைத் திருப்பி அந்தப் பெண்ணையும் மனிதனையும் கண்டுவிட்டான். நானக்சந்த்திடம் ஏதோ சொன்னான். அவனும் திரும்பிப் பார்த்தான். இருவரும் ஏதோ பேசிக்கொண்டபின் அந்த ஒற்றையடிப் பாதையில் நடக்கத் தொடங்கினார்கள்.

"ஹேய் கிஷோர்! இங்கே வா. ஒரு நல்ல சம்பவம் நடக்கப் போகிறது."

பாண்டே, கிஷோரை யன்னல் அருகே அழைத்தான். தனது விரலை உதடுகளின் மேல்வைத்து அமைதியாக இருக்கும்படி சைகை காட்டினான் கிஷோர். 'லாவரிஸ்' படத்தில் வந்த அமிதாப் பச்சனின் பாடல் ஒன்றை அவன் கேட்டுக்கொண்டிருந்தான்.

தோள்களில் கைகளைப் போட்டபடி, ஒரே சிகரட்டை மாறிமாறி இருவரும் இழுத்துக்கொண்டு ரகுவீரும் நானக்சந்தும் நடந்து கொண்டிருந்தனர். அந்த மஞ்சள் உருவத்தை சிறிது தெளிவாகப் பார்க்க முடிந்தது. அந்தப் பெண்ணும் மனிதனும் கிட்டத்தட்ட மைதானத்தின் நடுவிலிருந்தார்கள். யன்னலினூடாக அவளுடைய முகத்தைப் பாண்டேயால் பார்க்க முடியவில்லை. அவள் ஒரு அழகானவள் என்பது மட்டும் சிறிது புரிந்தது. அந்த மனிதன் உயரமானவனாகவும் மிகவும் மெல்லிய உடல் உடையவனாகவும் இருந்தான். வெய்யிலின் வெப்பத்திலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்காக சேலையின் தலைப்பால் அவள் தலையை மூடிக்கொண்டிருந்தாள். ரகுவீரும் நானக் சந்த்தும் தமது வேகத்தைக் குறைத்தனர். அந்த மைதானத்தில், குழந்தை உட்பட இந்த ஐவரையும் தவிர வேறு யாரும் காண்பட வில்லை. பாழடைந்த நினைவுச் சின்னங் களில் குடியேறியிருந்த புறாக்கள் கூட அமைதியாயிருந்தன.

"ஹேய் கிஷோர்! உனது ரேடியோவை மூடிவிட்டு இங்கு வந்து பார்." பாண்டே மீண்டும் கிஷோரை அழைத்தான்.

நானக்சந்த்தும் ரகுவீரும் அந்தக் குடும்பத்தை அண்மித்து விட்டனர்.

"கிஷோர் ஓடிவா."

அந்தச் சிறிய கூட்டத்தின்மீது தனது கண்களை வைத்தபடி பாண்டே நின்றிருந்தான். கிஷோர் யன்னலை நோக்கி வந்தான்.

ரகுவீரும் நானக்சந்த்தும் அவர்களை வழிமறித்தார்கள். நானக்சந்த் அந்த இளம் பெண்ணைப் பார்த்துச் சிரித்தான். கணவனுடைய முகம் சிவந்து போனது.

"வழிவிடுங்கடா, ராஸ்கல்"

அவன் சொன்னதைக் கவனியாதது போல் ரகுவீரும் நானக்சந்த்தும் நின்றிருந்தனர். சேலைத் தலைப்பில் அவள் முகத்தை மறைத்துக்கொண்டாள்.

"அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள்?" கிஷோர் பாண்டேயைக் கேட்டான்.

"கொஞ்சம் பொறு பார்ப்போம். எனக்கொரு சிகரட் கொடு."

'ரெட் அன்ட் வைட்' சிகரெட் ஒன்றை எடுத்து கிஷோர் பாண்டேக்குக் கொடுத்தான். இருவரும் ஒவ்வொரு சிகரெட்டைப் பிடித்த படி மிகவும் சுவாரஸ்யமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். வெய்யில் சுட்டெரித்துக் கொண்டிருந்தது.

"அவர்கள் ஒரு படம் பார்க்கப் போய்க் கொண்டிருக்கிறார்கள் போல. இந்த வெய்யிலில் வேறெங்கு போக முடியும்?" என்றான் பாண்டே.

அவளுடைய தலையை மூடியிருந்த சேலைத்தலைப்பை பலாத்காரமாகப் பிடித் திழுத்தான் நானக்சந்த். பளபள கன்னங் களையும் பெரிய விழிகளையும் கொண்டிருந்த அவள் மிகவும் அழகாக இருந்தாள். நெற்றியில் சந்தனப் பொட்டும் உச்சிவகிட்டில் குங்குமமும் இட்டிருந்தாள்.

"அரே, சகோதரனே! நீ மிகவும் அதிஷ்டசாலி. ஹேமமாலினி போல ஒரு அழகான பெண் உனக்கு மனைவியாகக் கிடைத்திருக்கிறாள்." குழந்தையுடன் நின்ற மனிதனைப் பார்த்து நானக்சந்த் சொன்னான். அவன் தனது பொறுமையை இழந்தான். கோபத்தில் குமைந்தான். அவன் குழந்தையை வைத்திருக்கிறான். மனைவியும் கூடவே நிற்கிறாள். இல்லாவிட்டால்...

"நண்பர்களே! உங்களுக்கு என்ன வேண்டும்? இது ஒன்றும் நல்ல பழக்கமல்ல. நீங்கள் படித்த இளைஞர்களா? தயவு செய்து எம்மைப் போக விடுங்கள்...." தனது கோபத்தை அடக்கிக்கொண்டு சொன்னான்.

குழந்தையை அழுத்தித் தூக்கியபடி மனைவியை இன்னொரு கையில் பிடித்துக்கொண்டு அவர்களைத் தாண்டிப்போக முயற்சித்தான்.

"நில். நீங்கள் போக முடியாது." அந்த



மனிதனின் தோளில் ரகுவீர் கையைப் போட்டான்.

"எங்கள் அனுமதியின்றி நீங்கள் அசைய முடியாது." திடீரென ரகுவீரின் முகத்தில் ஓங்கி ஒரு குத்துவிட்டான் அந்த மனிதன். குழந்தை வீரிட்டு அலறியது.

"டேய் நாயே உனக்கு எவ்வளவு துணிவு?"

நானக்சந்த் தனது சட்டைப் பையிலிருந்து கத்தியொன்றை எடுத்தான். அவளுடைய இதயம் புறாவின் இறக்கைகள் போலப் படபடத்தது. இந்தச் சிக்கலுக்குள் மாட்டிக் கொள்ள வேண்டாம் எனக் கணவனைக் கண்களால் கெஞ்சினாள்.

குழந்தையை அவளிடம் கொடுத்துவிட்டு அவன் எதற்கும் தயாரானாள்.

"நாயின் மகனே."

குத்து விழுந்த கன்னத்தைத் தடவிய ரகுவீரின் கை அவனின் சட்டைக் கழுத்தைப் பிடித்தது. அழுது கொண்டிருக்கும் குழந்தையைத் தூக்கி வைத்துக்கொண்டிருக்கும் அவளது கண்கள் உதவி எதுவுமின்றி மிரண்டன. முழு உடலும் பயத்தில் நடுங்கியது.

"அரே, இன்னொரு சிகரெட் தா."

மைதானத்திலிருந்து கண்களை எடுக்காது கையை மட்டும் நீட்டி கிஷோரிடம் பாண்டே கேட்டான்.

சிகரெட்டைப் பற்றவைத்துக் கொடுத்தபடி...

"நல்ல சுவாரஸ்யம்" என்றான் கிஷோர்.

நானக்சந்த்தும் அந்த மனிதனும் இழுபறிப்பட்டுக்கொண்டிருந்தபோது ரகுவீர் சிறிது தூரம் சென்று ஒரு பெரிய கல்லை எடுத்து வந்து அந்த் மனிதனின் தலையைக் குறிவைத்து ஓங்கினான். இதனைப் பார்த்த அந்த மஞ்சள் புறா செய்வதறியாது தவித்தது.

அந்த மைதானத்தின் அடுத்த எல்லையில் ஒரு மஞ்சள் உருவம் அசைந்தது. அது ஒரு நடுத்தர வயது மனிதன். அவர் தனது கையில் ஒரு சூட்கேஸ் வைத்திருந்தார். மைதானத்தில் ஏதோ விபரீதம் நடப்பதை உணர்ந்து அவர் தயங்கினார். பின்பு தனது நடையைத் தொடர்ந்தார்.

"யாரந்தப் பன்றி" எல்லாவற்றையும் அந்தப் புதிய மனிதன் குழப்பிவிடுவானோ என்ற அச்சத்தில் பாண்டே கத்தினான்.

நானக்சந்த்தும் அந்த இளைஞனும் சத்தமிட்டபடி ஆளுக்காள் அடித்தார்கள். ரகுவீர் கல்லுடன் நின்று கொண்டிருந்தான். அவனுடைய தலையில் அந்தக் கல்லைப் போடுவதற்குச் சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தான். தனது மூச்சு எங்கோ மறைந்து போனதாக அந்த அழகிய பெண் உணர்ந்தாள். தூரத்தில் நடந்துவரும் மனிதனைப் பார்த்தபோது அவளுக்குச் சிறிது தெம்பு வந்தது.

"ஐயா, தயவு செய்து உதவி செய்யுங்கள். எனது பிள்ளையின் தகப்பனைக் கொல்கிறார்கள்." அவள் அழுதாள்.

பெண்ணின் குரலைக் கேட்ட நடுத்தர வயது மனிதன் தனது நடையின் வேகத்தைக் கூட்டி அவளை நோக்கி வந்தார். அவர் கிட்டத்தட்ட நூறுயார் தூரத்தில் வந்து கொண்டிருக்கும் போது.....

"இங்கிருந்து போய்விடு" என்றான் ரகுவீர். கல்லை அவர்மீது வீசிவிடுவது போலப் பாசாங்கு செய்தான். அவர் உபயோக மற்றவரானார். அத்தோடு நானச்சந்த்தின் கையிலிருந்த நீண்ட கத்தியையும் கவனித்தார்.

"ஓடு."

சிலகணத் தயக்கத்தின்பின் அவர் தனது பாதையில் பயணத்தைத் தொடர ஆரம்பித்தார்.

"சபாஷ்."

ஜன்னலில் இருந்த கிஷோரும் பாண்டேயும் சிரித்தார்கள். அடுத்த கணம் அந்த இளைஞனின் தலையில் ரகுவீர் கல்லால் அடித்தான். அவன் தடுமாறினான். நானக்சந்த் அடிவயிற்றில் வலிமையாக உதைத்தான். அவன் ஒரு வில்லைப்போல் சுருண்டு விழுந்தான்.

"ரகுவீரும் நானக்சந்த்தும் உண்மையில் வீரர்கள்தான்."

என்று ஆங்கிலத்தில் கூறினான் கிஷோர்.

"ஆமாம். மிக மிகப் பெரியவீரர்கள்."

அவர்கள் இருவரினதும் பார்வைகள் அங்கேயே நிலைத்திருந்தன.

"எழுந்திரு சகோதரி."

கணவனுக்குப் பக்கத்திலிருந்து அழுது கொண்டிருந்த பெண்ணைக் கையில் பிடித்தான் நானக்சந்த்.

"எங்களோடு அந்தக் கட்டிடத்திற்கு வா." ரகுவீர்.

"தயவு செய்து என்னை விட்டுவிடுங்கள்." கண்ணிறைந்த கண்ணீருடன் இருந்த அவள் அவர்களைக் கும்பிட்டு மன்றாடினாள்.

நானக்சந்த் அவளைத் தூக்கி முன்னே தள்ளினான். அந்தக் குழந்தை நிலத்தில் விழுந்து அழுதது. ரகுவீர் தனது காற்சட்டைப் பையிலிருந்து எடுத்த கைக்குட்டையை குழந்தையின் வாயில் திணித்தான். அது அழுவதை நிறுத்தியது.

இந்த இடையில் அவள் அவர்களிட மிருந்து விடுவித்துக் கொண்டு ஓட ஆரம்பித்தாள்.

"நாயே ஓடாதே...பிடி அவளை...."

ரகுவீர் அவளைக் கலைத்துப் பிடித்தான். இருவருமாகச் சேர்ந்து அவளை அந்தக் கட்டிடப் பக்கம் தள்ளிச் சென்றனர். சுவரில் அமர்ந்திருந்த புறாக்கள் பயந்தபடி பார்த்துக் கொண்டிருந்தன.

"அரே, அவர்கள் அவளைக் கற்பழிக்கப் போகிறார்கள்." கிஷோர் சொன்னான். ஒரு சினிமாவைப் பார்க்கும் ஆவலுடன் அவன் நின்றிருந்தான்.

நானக்சந்த்தும் ரகுவீரும் அவளைக் கட்டிடத்தினுள் தூக்கிச் சென்றனர். வியர்வை தோய்ந்த சட்டையைக் கிழித்தனர். அவளைச் சுவருடன் சாய்த்தனர். எதிர்க்கும் தன்மையை அவள் முற்றுமுழுதாக இழந்திருந்தாள்.

"யார் முதலில் அனுபவிப்பார்கள்?" கிஷோர் கேட்டான்.

"வேறு யார் நானச்சந்த்தான்."

ரகுவீர் அவளைச் சுவருடன் நெரித்துப் பிடித்திருக்க, நானக் சந்த் தனது காற்சட்டையைக் களைய ஆரம்பித்தான்...

அதேவேளை...

ராஜீந்தர் பாண்டேயின் அறை தலைநகரிலுள்ள சராசரி அறைகளின் தன்மைக்குத் திரும்பிக்கொண்டிருந்தது... பெரிய வானளாவிய கட்டிடங்கள் உருவாகிக்கொண்டிருந்தன... ராஜீந்தர் பாண்டேயும் கிஷோர் லாலும் ஆறுமில்லியன் சனத்தொகையில் சங்கமித்தார்கள்... காந்தி குல்லாவும் கதர் ஆடையும் அணிந்த அரசியல் வாதிகள்- பலத்த கரகோசம், ஆரவாரம் மத்தியில் மேடையில் நின்று இந்தியில் நீண்ட உரையாற்றினார்கள்... தாடியும் நீண்ட முடியுமுள்ள கல்விமான்கள் சிகரட் புகை நிறைந்த கோப்பிச் சாலைகளிலிருந்து விவாதித்தார்கள்...

இருட்டினுள் இருந்து பறந்துவந்த சிறிய புறா ஒன்று தனது மென்மையான அலகால் நானக்சந்த்தின் நெற்றியில் கொத்தியது. ●

# கொஞ்சம் தனியாப் பேசணும்.....எம்.சுரேஷ்

குட்டிக்கதை

**ஒரு பெண்ணை, ஒரு ஆண் தனியா சந்திச்சுப் பேசினா அதுக்குக் 'காதல்'ன்னு அர்த்தமா?**



வர்மாவைக் கண்டதும் ஜீவிதா முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவளுக்கு கோபம் கோபமாக வந்தது "ச்சே...இந்த ஆண்களை நம்பவே கூடாது. நான் இவருமேல எத்தனை அன்பு வைச்சிருந்தேன். நல்ல மனிதர் மாதிரி என்னோட சிரிச்சு, சிரிச்சுப் பேசி, எதிர்பார்ப்புக்களை வளத்தப்புறம், இப்ப யாரோ ஒரு பொண்ணை அடிக்கடி சந்திச்சுப் பேசுறாராம்...இந்த ஆண்களாலை எப்பிடித் தான் இவ்வளவு அழகா நடிக்க முடியுதோ...?"

அவள் முகம் கோபத்தில் சிவந்தது. "ஜீவிதா! எதுக்கு முகத்தை ஒரு மாதிரி வைச்சுக்கிட்டிருக்க? ஏதாவது பிரச்சனையா?" வர்மா அக்கறையோடு கேட்க, வெடுக்கென்று எழுந்தவள், "நேத்து நீங்க தனியா சந்திச்சுப் பேசிக்கிட்டிருந்தவளப் போய் கேளுங்க, அவ பிரச்சனை இருக்கா இல்லையான்னு சொல்லுவா." சூடுபறக்கக் கூறிவிட்டு பார்வையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்...


"ஜீவிதா! ஏன் இப்பிடி சந்தேகப்படுற? ஒரு பொண்ணை, ஒரு ஆண் தனியா சந்திச்சுப் பேசினா அதுக்குக் காதலன்னு அர்த்தமா? வாழ்க்கையிலை ஒரு பொண்ணோடை தனியா பேசுறதுக்கு காதலத்தவிர வேறு விசயங்கள் இல்லைன்னா நீ நெனைக்கிற?

"இங்க பாரு ஜீவிதா! நீ என்னை விரும்புற மாதிரியே, நானும் ஒன்ன விரும்புறேன். அதுக்குமேல எனக்கு ஒண்ணும் சொல்லத் தோணல... வாழ்கைக்கு அடிப்படையே நம்பிக்கைதான்..." முடிக்கு முன் யாரோ ஒருவன்,

"ஜீவிதா இருக்காங்களா?" கேட்க "ஹலோ சந்திரன்...உள்ள வாங்க" இவரு என்னோட பழைய கிளாஸ்மேட் - சந்திரன்." வர்மாவுக்கு அறிமுகப்படுத்தினாள். ஆனால் இன்னும் சந்திரன் உள்ளே வரவில்லை.

"உள்ள வாங்க சந்திரன்" ஜீவிதா அழைக்க,

"இல்ல ஜீவிதா ஒங்களிடம் கொஞ்சம் தனியாப் பேசணும். கொஞ்சம் அந்தப் பக்கம் வர்றீங்களா?" சந்திரன் கேட்க, வர்மா பலமாகச் சிரிக்க ஆரம்பித்தான்!!



# கூத்தரித்த குடி ஜோக்ஸ்

ஒருவர்: ஏண்டா இப்பிடி குடிச்சுக் கெட்டுப்போறே?
மற்றவர்: கவலையை மறக்கத்தான்.
ஒருவர்: அப்படி என்ன கவலை?
மற்றவர்: இப்பிடி குடிச்சுக் கெட்டுப் போயிட்டானேன்னுதான்.

▫▫▫

- பொண்ணு திட்டினவுட்னே மாப்பிள்ளை கண்ணீர் விட்டு அழுவார்.
- ▫ எப்படி?
- பொண்ணு பெயர் மின்னல்கொடி. மாப்பிள்ளை பெயர் கார்மேகம் ஆச்சே.

▫▫▫

- பாத்திரங்களை எல்லாம் உன் கணவர் கவிழ்த்து வைக்கிறாரே....ஏன்?
- ▫ அவர்தான் அரசியல்வாதியாச்சே. எதையாவது கவிழ்த்துக்கொண்டிருந்தால் தான் அவருக்குத் தூக்கமே வரும்.

▫▫▫

டாக்டர்: உங்கள் வியாதி முற்றி விட்டதே இவ்வளவு நாள்வரை என்ன செய்தீங்க?
நோயாளி: உங்களிடம் வரலாமா? வேண்டாமான்னு யோசனை பண்ணிக்கிட்டிருந்தேன்.

- வியாபாரம் நல்லா 'சூடு' பிடிச்சதால் ஏகப்பட்ட... லாபமாமே....?
- வயித்தெரிச்சலைக் கிளப்பாதேய்யா. நான் செய்தது தீப்பெட்டி வியாபாரம். எல்லாம் போச்சு - ஏகப்பட்ட நஷ்டம்.

▫▫▫

அவன்: கரும்புக்கும், எறும்புக்கும் என்ன வித்தியாசம்?
இவன்: கரும்பை மனிதன் கடிப்பான். எறும்பு மனிதனைக் கடிக்கும்.

▫▫▫

இயக்குநர்: நம்ம படத்துல ஹீரோ அடிதடி, லஞ்சம்னு பொதுமக்களை ஏமாத்தற வேசத்துல நடிக்கிறார்.
நிருபர்: படத்திற்கு பெயர் என்னங்க?
இயக்குநர்: அரசியல்வாதி.

▫▫▫

நோயாளி: நீங்கள் தெய்வம் மாதிரி டாக்டர்.
டாக்டர்: அதனாலதான் உங்களை சோதிச்சுப் பார்க்கிறேன்.

# மனதோடு பேசிய மங்கை

## இலக்கிய நயம்



**தருவது ரசிகன்**

மலையில் இருந்து வந்து மெல்லிய சத்தத்துடன் குதித்துக்கொண்டிருந்தது அருவி. அந்த அருவியிலே தோழியோடு குளித்துக்கொண்டிருந்தாள் நீலவேணி. சுற்றிலும் வெய்யில் தடுக்கும் சோலைகள். அந்த சோலைகளில் மலர்ந்திருக்கும் முல்லைகள் தேன் சொரிய வண்டுகள் வந்து களிப்போடு பருகிக்கொண்டிருந்தன. தேன் பருகும் வண்டுகள்மீது நீல வேணியின் கருவிழிகள் மொய்த்திருந்தன.

நீராடுவதை மறந்துவிட்டு நீலவேணி வேறெங்கோ விழி ஓட்டுகிறாளே என்று நினைத்தாள் தோழி. நீலவேணியின் அருகில் வந்து அவள் விழி வேல்கள் செல்லும் திசை அறிந்து நோக்கினாள்.

மலர்மீது தவழ்ந்து தேன் எடுக்கும் வண்டுகள் நீலவேணிக்கு தொலைதூரம் சென்றுவிட்ட அவள் காதலனை நினைவூட்டிவிட்டனவோ என்று நினைத்துக் கொண்டாள். மெல்லச் செருமினாள். வேணியின் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை.

இளவேனிற் காலம் வந்தவுடன் புதர்களிலும், சோலைகளிலும் பூத்து மலரும் பூவினத்தை தேடி வண்டினம் பறந்து வந்துவிடுகிறது. இந்த வண்டினத்திற்கு பூக்கள் மேல் உள்ள மோகம் என்மீது என் காதலருக்கு மட்டும் இல்லாமல் போனது ஏனோ? கல் நெஞ்சம் கொண்டவராய் அன்றோ என் காதலர் கடுந்தொலைவில் இருந்து எனக்குள் நெடுந் துன்பம் விளைய காரணமாக இருக்கிறார்!

வருகிறேன் என்று விடை தந்து அனுப்பியவர் இன்றுவரை எட்டியும் பார்க்காமல் எப்படித்தான் இருக்க முடிகிறது?

கட்டியணைத்து கன்னத்திலே வெல்ல முத்தம் இட்டு விடை தந்தபோது விழி கலங்கியவர், இன்று நான் ஆலையில் இட்ட கரும்பாக, காதல் என்னும் வேதனையில் சிக்கி உள்ளம் தவிக்கையிலே மடை திறந்த வெள்ளம்போல பாய்ந்து வராமல் இருப்பது தான் ஏனோ?

அடி போடி பைத்தியக்காரி! அரசர் அல்லவோ அவர்! ஆயிரம் பணிகள் அவர் முன்னால் இருக்கும். பாயப்போகிறேன் என்று பகை நாடு படை திரட்டும் செய்தி வந்து செவியில் விழுந்திருக்கும். அரசருக்குரிய கடமை அவர் இதய அரசியாம் உன் மலர் முகம் காண உடனே வருவதை தடுத்திருக்கும்.

ம்...ம்... பெரிய கடமை. கண்மணியே என்று உச்சரித்தாரே உதடுகளால் அது பொய்யோ? பொய்யில்லையென்றால் கண்மணியை விடவும் கடமை என்ன பெரிதோ? பெய்யெனப் பெய்யும் மழைபோல வாடிய பயிராய் கிடக்கும் என் உள்ளத்தின் வாட்டம் போக்க வான் மழைபோல, என் எண்ணத்தில் நிறைந்த அந்த வண்ண மகன் வரவேண்டும் அல்லவோ?

சுயநலமடி உனக்கு! பொதுநலத்தை புறம் தள்ளிவிட்டு உன் புன்னகை இதழ் உண்ண அவர் புறப்பட்டு வரவேண்டும் என்று நினைக்கிறாய். வரவில்லையே அவர் என்று குறைப்பட்டும் கொள்ளுகிறாய்.

சுயநலமாம் சுயநலம். மொட்டவிழ்த்த மலர் வண்டைத் தேடுவது சுயநலம்தான். கோடையில் வாடும் பூமி மழை பொழியாதோ என்று மேகத்தை மோகத்தோடு நோக்குவதும் சுயநலம்தானே. எப்போது சூரியன் எட்டிப்பார்ப்பான் மொட்டு என்னும் கட்டவிழ்த்துக்கொள்ளலாம் என்று காத்திருக்குமே தாமரை அதுவும் சுயநலம்தானே. இயற்கையில்கூட சுயநலம் கலந்து கிடக்கும்போது எனக்குள் இருந்தால் மட்டும் என்னவாம்?

பொல்லாத கள்ளியடி நீ. அள்ளக் குறையாத அமுதசுரபிபோல அழகு கொட்டிக் குவிந்து கிடக்கும் உன்னிடம் ஓடி வர கசக்குமோடி உன் காதலருக்கு? கடும் தொலைவும் கைக்கெட்டும் தூரம்போல தெரிய,ஓடி வந்த களைப்பே தெரியாமல் உன் கரச்சிறைக்குள் சிக்கிக்கொண்டு உன் கனியிதழ் தன் உதட்டால் வாங்கி, தன்னையே மறந்துவிடும் மாயம் அறிய, பாயும் குதிரை போல் வராமல் இருந்திட அவருக்கு மனம் வருமோ மடமானே!

இதில் ஒன்றும் குறைச்சல் இல்லை. என் மனமே உனக்கு வெட்கம் மானம் எதுவும் இல்லை. வருகிறேன் செல் என்றவர் வாராமல் கடல் நீளம் போல காலத்தை நீட்டி கடத்தும் போதும், நீ மட்டும் அவரை ஏற்றிப்போற்றுகிறாய். என் எரிச்சலைக் கிளறுகிறாய். மனமே நீயும் என் வருத்தம் அறியாமல் பொருத்தம் இல்லாத விளக்கங்கள் சொல்லுகிறாய்.

உன் இதழ்களை கொவ்வைப் பழங்களோ என்று நினைத்து கிளிகள் பறந்து கொத்திட வந்து, உன் விழி அம்புகள் கண்டு பயந்து ஓடிவிடும் வேடிக்கைகளுக்கு காரணமான கார் குழல் பெண்ணே கேள்!பலாமரத்தில் திரண்டும் செழித்தும் தொங்கும் பலாக்கனிகளின் பாரத்தால் வளைந்து தெரியும் பலாக்கிளை போன்று, பருத்தும், நிமிர்ந்தும் கிளர்ந்தெழுந்து தெரியும் நெஞ்சக் கனிகளின் பாரம் தாங்காமல் துவண்டு போயினவோ என்று நினைக்க வைக்கும் இடையினைக் கொண்டவளே! அன்ன நடை பயிலும் எழில் பெண்ணே! காதல் பிரிவின் துன்பத்தால் உன் சிற்றிடை மேலும் துவண்டது போல் தெரிகிறதடி.

வளை புருவம் கொண்ட விலையில்லா கலை உருவே! உன் கை வளையல்கள் விழுந்து விடுமோ என்று நினைக்கும் வண்ணம் உன் பட்டுக் கரங்கள் பிரிவுத் துயரில் மெலிந்து போய்விட்டதேயடி!

பிறைச் சந்திரனில் கூட மாசு உண்டு என்று குறை சொல்ல முடியும். உன் முன் நெற்றியோ அந்த பிறை கூட தோற்றுவிட்டது என்று பறையறிவித்துவிடும் வண்ணம் மாசற்றதாக மறுவற்றதாக ஒளிசிந்துமடி! அந்த ஒளிகூட காதல் துயர் என்னும் கரு மேகத்தால் மறைந்து தெரிகிறதடி.

தெரிகிறதல்லவா மனமே! தெரிகிறதல்லவா என் துயரம்! தெரிந்துமா வருந்தும் என்னை விட்டு வருத்தும் அவரிடம் நீயும் சரிந்து கிடக்கிறாய்?

கார்மேகம் சூழக் கண்டும் களித்து ஆடாத கலாப மயில்கள் உண்டோ? அப்படித்தானடி நானும்! காதல் செப்படி வித்தை காட்டி என்னை கொள்ளையிட்டு விட்ட அந்த கள்வன் மீது கள்வெறி கொண்டுவிட்டேன்.

போ மனமே, பொல்லாத மனம் நீ! என்னைக் கொல்லாமல் கொல்லுகின்ற எவரும் வெல்லாத அறிவு கொண்ட வல்லாரிடம் போய் என் துயர் சொல்லு! மறவர் என்னை மறந்து போனது ஏன் என்று விரைந்து போய் வினா தொடுத்துவிடு!

முல்லைமலர் நீ இருக்க மொய்க்கும் ஆசை மறந்துவிட்டு கண் அயர்ந்து போவாரோ உன் கண்ணாளர். கலங்காதே காரிகையே அவர் வருவார் அன்றில் நீ அங்கு போகும் வழி சொல்வேன். பொய்க்காது ஒரு நாளும் உன் காதல்.

நிறுத்து மனமே! போதும் உன் கருத்து! மெய் உருகி நான் நிற்க, பொய் இல்லை காதல் என்று சொல் பொழிந்தால் மட்டும் போதுமாமோ?

போதாது என்று தெரியுமடி எனக்கும்! பொன் அந்தி வானம்போல உன் பூ முகம் சிவந்து வெட்க, பொன் மகன் வந்து, தன் கரங்களை கயிறாக்கி உன்னை தன்னோடு கட்டிப்போட வேண்டுமடி. கற்கண்டு சுவை என்று உன் எழில் கன்னம் அவன் தின்ன களி கொள்ளும் உன் உள்ளம். அந்த நிலைதானே வேண்டும் உனக்கு?

போ மனமே! குறும்பாலே நீயும் கொல்லாதே என்னை!

கரும்பாலே வில் செய்து காமன் தொடுக்கும் கணைபோல, விழியாலே மொழிபேசி, இதழாலே நகை சிந்தி இதயம் வெல்லும் உதய தாரகை நீ. குறும்பு என்றால் அடிக் கரும்பின் சுவைபோல இனிக்குமன்றோ உனக்கு!

குறும்பு செய்யும் குன்று மார்பழகர் தொடும் தூரத்தில் இல்லையென்று தெரியாதோ மனமே உனக்கு?

களத்திலே எதிரி வீசும் குறுவாளைக்கூடத் தட்டி விடலாம் என்றாலும் உன் குறுநகை இதயக் கோட்டையை தாக்குவதை தடுத்திட இயலுமோ? இயலாது. குறு நகையால் நீ வென்றுவிட்ட இதயக்கோட்டையின் உரிமையாளர் உன்னைக் காணாமல் இருப்பாரோ? மாட்டார்! உன் குறுநகை காணும் குறும்பு செய்ய எறும்பின் சுறுசுறுப்பாய் காதல் வித்தைகாட்ட வருவாரடி வருவார்.

"வருவாரா? எப்போது வருவார்?" நீலவேணி தன்னை மறந்து இதழ் திறந்து கேட்டுவிட்டாள்.

அருகில் நின்ற தோழிக்கு நீல வேணி இதுவரை தன் மனதோடு பேசியவை செவியில் விழவில்லை என்றாலும், இப்போது இதழ்கள் உச்சரித்து விசாரித்த வினாக்கள் மட்டும் செவியில் விழுந்தன தெளிவாக.

அதனால் உரத்து நகைத்தாள். நகை ஒலி செவியில் விழ தூக்கத்தில் இருந்து விழித்தது போல், மலர் விழிகள் படபடக்க தோழியை திரும்பி நோக்கினாள் நீலவேணி.

"ஏன் நகைக்கிறாய்?"

"மன்னவன் பிரிவால் வாடும் நீ மனதிடம் அடைக்கலம் தேடும் நிலை அறிந்து நகைக்கிறேன்?"

நீலவேணி ஆச்சரியப்பட்டாள். அந்த ஆச்சரியம் மாறாத குரலில் கேட்டாள்.

"உனக்கு எப்படித் தெரியும், என் உள்ளத்தில் நடந்த உரையாடல்?"

"மன்னவனைக் காணாமல் வாடும் மங்கையர் மனதிடம்தான் அடைக்கலம் கேட்பார்களாம். உதவியும் நாடி நிற்பார்களாம்."

"நீ பெரிய பாட்டி. அதுதான் அனுபவம் பேசுகிறதாக்கும்."

"இதற்கு பாட்டியாக தேவையில்லை. திருக்குறள் படித்திருந்தால் போதும்."

என்ற தோழி குறள் சொன்னாள். அந்தக் குறள் இதுதான்:

**"தஞ்சந் தமரல்ல ரேதிலார் தாமுடைய**
**நெஞ்சந் தமரல் வழி."**

குறள்–1300; அதிகாரம்–130

## குறுக்கெழுத்துப் போட்டி இல–50

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | ■ | 3 | | 4 |
| 5 | | | ■ | | ■ | |
| | | ■ | 6 | | | |
| | ■ | 7 | | | ■ | |
| | 8 | ■ | | ■ | 9 | ■ |
| ■ | 10 | | | | | |
| 11 | | | ■ | 12 | | ■ |

**இடமிருந்து வலம்**

1. தமிழ்ப் புத்தாண்டிற்கு தம்பி மாதம்.
3. இவன் கைபட்டால் கல்லும் பேசும்.
5. இது இல்லாத தமிழ்ப்படங்கள் மிக அரிது.
6. கரைசேர உதவும்.
7. இந்துக்கள் இதனை விரதம் என்பார்கள்.
10. இதனைப் பெற்றோருக்குத் தெரியாமல் மறைப்பதும் உண்டு.
11. இந்த நோயில் இரண்டு வகை உண்டு.
12. ஆங்கிலத்தில் சிக்னல் என்பார்கள்.

**மேலிருந்து கீழ்**

1. ஒன்பது இரத்தினங்களில் ஒன்று.
2. இது கல்லுப்பட்டால் உடலில் வரும், சொல்லுப்பட்டால் உள்ளத்தில் வரும்.
3. கடந்தவார முரசில் மருத்துவப் பகுதியில் இதுபற்றிக் கூறப் பட்டுள்ளது.
4. இந்துக்களின் படைப்புக் கடவுள்.
6. காதல் நோயால் வாடுபவர்களை இதுவும் சுடும் என்பார்கள்.
8. கட்டுப்பாட்டுப் பகுதிகளில் படையினர் அமைப்பது.
9. எழுத்தாளனுக்கு பேனா போல் ஓவியனுக்கு இது.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 28.05.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**குறுக்கெழுத்துப் போட்டி இல-50**
**தினமுரசு வாரமலர்**
**88/14, சோமாதேவி பிளேஸ்,**
**கிருலப்பனை**
**கொழும்பு -05.**

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-48க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 பௌ | ர் | ண | மி | ■ | 2 க | 3 ஜு |
| 4 தீ | வி | ர | 5 வா | தி | ■ | வா |
| க | ■ | 6 சி | சு | ■ | 7 இ | லை |
| ம் | 8 மூ | ங் | கி | ல் | ■ | ■ |
| ■ | ■ | க | ■ | 9 ஆ | 10 சி | யா |
| 11 ப | ள் | ள | ம் | ■ | ப் | ■ |
| னி | ■ | ம் | ■ | 12 பை | பி | ள் |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.48இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. திருமதி. அழகா புண்ணியமூர்த்தி கொழும்பு-13.
2. திருமதி. சம்சமா ஹமீத் கொச்சிக்கடை.
3. எம். ஜெயலட்சுமி கொழும்பு-12.
4. எம்.சி.எம். சமீன் கல்பிட்டி.
5. ஆர். பிரகாஷ் நுவரெலியா.
6. செல்வி. பரீனா ஹமீட் உக்குவெல.
7. வி. மோகன் குருநாகல்.
8. எஸ். தாஜுன்நிஸா ரஹ்மான் பிலயந்தலை
9. எல். சாவித்திரி மட்டக்களப்பு.
10. என். இராஜரத்தினம் நீர்கொழும்பு.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## சிந்தியா பதில்கள்

எப்போதும் சிரித்துக்கொண்டே இருக்க என்ன செய்யவேண்டும்?

என்.ராமச்சந்திரன்-பண்டாரவளை.

கிச்சு கிச்சு மூட்ட பக்கத்தில் ஒருவரை வைத்துக்கொண்டிருக்க வேண்டும்.

□□

தங்களுக்கு பொன்னாடை போர்த்தலாம் என்று நினைக்கிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

மா.விஜிதா-கொழும்பு-06.

புழுக்கம் ஆளைக் கொல்லுகிறது தாயே! இதிலே போர்வை வேறு வேண்டுமா என்ன? வைத்திருங்கள். குளிர்காலத்தில் உதவும். பன்னாடை என்றால் பரவாயில்லை. காற்று வர வழியிருக்கும்.

□□

டயனாவை பத்திரிகையாளர்கள் துரத்துகிறார்களாமே?

கே.சரத்செல்வன்-புத்தளம்.

இப்போது இல்லை. டயானா உடற்பயிற்சி செய்தபோது எடுத்த படங்களை நாலு ஐந்து மாதத்திற்கு முன்னர் வெளிநாட்டுப் பத்திரிகைகள் பிரசுரித்திருந்தன. அதன்பின்னர் இப்போது டயானா பற்றி பெரிதாக இல்லை. ஹிலாரி கிளின்ரன் பற்றி கவலைப்படத் தொடங்கி விட்டன.

**டயானாவை மறந்துவரும் பத்திரிகைகள்**

திருகோணமலையில் தமிழ் கட்சிகள் பல முகாமிட்டு வருகின்றனவே?

கே.சக்திவேல்-திருகோணமலை.

ஏற்கனவே மண் பறி போய்க் கொண்டிருக்கிறது. தமிழ் கட்சிகள் தம் பங்குக்கு வாக்குகளை பிரிக்கப் போகிறார்கள். இவர்களே மீதி உள்ளதையும் பறித்துக்கொடுத்துவிடப் போகிறார்கள்.

□□

எதிர்வரும் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வாய்ப்பு இருப்பதாக கருதலாமா?

வீ.ராமநாதன்-வவுனியா.

அப்படி ஒரு சந்தேகம் சில தமிழ் கட்சிகளுக்கு இருப்பதால்தான் அவசரம் அவசரமாக கூட்டணியை கண்டித்துக்கொண்டிருக்கிறார்கள். கூட்டணியினரோ புலிகள் என்ன சொல்லப் போகிறார்களோ என்று கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

□□

பாரிசில் சபாலிங்கம் என்பவரது கொலைக்கு யார் காரணம் என்று தெரிந்துவிட்டதா சிந்தியா?

கு.தெய்வேந்திரன்-கொழும்பு-11.

சபாலிங்கத்தின் துணைவியார் புலிகள் மீது குற்றம் சாட்டியிருக்கிறார். வெளிநாட்டுத் தமிழர்கள் வெளியிடும் கண்டனங்களும் புலிகளைத்தான் குறி வைக்கின்றன.

□□

நான் உயர விரும்புகிறேன் சிந்தியா! அதற்கு ஒரு வழி சொல்லுங்கள்?

என்.ஜமால்டின்-நீர்கொழும்பு.

பல வழிகள் உண்டு. ஒரு வழி: விமானத்தில் பயணம் செய்து பாருங்களேன்.

□□

சாக்கிரஸ்டிஸ் மீண்டும் பிறந்தால்?

அ.விமலா-பண்டாரவளை.

பிறக்கட்டும். ஆனால் தமிழனாக பிறக்கக் கூடாது. துப்பாக்கிகள் வாழவிடாது. சபாலிங்கமே வாழமுடியவில்லை. சாக்கிரஸ்டிஸ் எப்படி வாழமுடியும்?

□□

பாதயாத்திரையால் சமாதானம் ஏற்படுமா?

ஆர்.ஜிப்ரி-மருதானை.

யாத்திரை செல்வோரின் பெயர்கள் பத்திரிகைகளில் வரும்.

□□

மனிதனை மனிதன் நம்புவதற்கு என்ன செய்ய வேண்டும்?

எம்.அருந்ததி-கொழும்பு-06.

மனிதன் தன்னை மனிதனாக பக்குவப் படுத்திக்கொள்ள வேண்டும்.

□□

உணர்ச்சி வசப்படுவது நல்லதா?

ஏ.தங்கேஸ்வரன்-குருநாகல்.

படவேண்டியவர்கள் பட்டிருக்காவிட்டால் நானும் இல்லை. கேள்வி கேட்க நீரும் இல்லையே. தேவைப்படும்போது உ.வசப்படுவது தவறல்ல.

□□

காதல் கசந்து போகாமல் இருக்க என்ன செய்யலாம்?

கோ.எட்வேர்ட்-மட்டக்களப்பு.

தேவையானது: சீனி!
அளவு: கசப்புக்கு ஏற்ப!

□□

நிலவும் நெருப்பாய் சுடுவது காதலில்தானே சிந்தியா? அது எப்படி?

பி.உஷாதேவி-ஹட்டன்.

பகல் கனவு கண்டிருப்பீர்கள். அதனால் சூரியனை நிலவு என்று நினைத்து தொலைத்திருப்பீர்கள். அடுத்த தடவை அப்படிச் சுடும்போது உடன் கண்ணைத் திறந்து பார்த்துவிடுங்கள்.

□□

இவ்வாரம் (22.05.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

**காலத்தின் குரல்:** இம் மகா காவியம் காலத்தை ஒட்டி எவ்வாறு வடிவெடுக்கிறது என்பதனை எடுத்துக்காட்டுவதே எனது கடமை. உண்மை தவிர வேறெதும் காணாத புலவனைப் போலவும் அதே உண்மையினை மட்டுமே பிரதிபலிக்கும் கண்ணாடி போன்றும் நான் இருப்ப தனால் என்னை மக்கள் மறந்து விடுவதுண்டு. தூசதட்டப்பட்டால் உண்மையின் சுயதரிசனம் கிடைக்கும்.

விதியின் மீது எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தும் சக்தி என்னிடமில்லை. புருவஞ்சனரின் ஆக்கத் திறமையை சகுனி, பாண்டவர்களை அழித்தொழிக்கும் திட்டத்துக்குப் பயன்படுத்துகிறான். இச்சூழ்ச்சிக்கு விரோதமாக இருந்த கர்ணனையும் அணைத்துக்கொண்டான். வாரணாவதியில் நடைபெறவிருக்கும் சிவம்கோற்சவத்துக்கு பாண்டவர்களுடன் தாய் குந்தியையும் அனுப்பி, எல்லோரையும் பூண்டோடு அழிக்க சகுனி கருதுகிறான்.

-காட்சி துவக்கம்-

சகுனியின் மாளிகை- [illegible]

**துரியோ:** மாமா! இவ்வாறு [illegible] யோசித்துக் கொண்டிருப்பதன் காரணம் யாதென அறியலாமோ?

**சகுனி:** வா வா மருமகனே! இதுகாலவரை [illegible] யோசனைக்கு அவசிய [illegible]!

**துரியோ:** அப்படியா இதற்கு மிக முக்கியமான காரணம் இருக்கிறது போலும்!

**சகுனி:** ஆமாம் மருமகனே! பயங்கரமான திட்டமும்கூட. யுதிஷ்டிரன் மட்டும் வாரணாவதி சென்றால் திட்டம் முழுமையாகப் பூர்த்தி அடையாது. அவன் தன் சகோதரர்களுடன் தாய் குந்தியும் சென்றால் மட்டுமே நமது திட்டம் பூரணமான வெற்றி பெறும்.

**துரியோ:** கவலை வேண்டாம் மாமா! நமது முதல் எதிரியான யுதிஷ்டிரனை இப்போது ஒழிப்போம். ஏனையவர்களைப் பின்னர் கவனிக்கலாமே!

**சகுனி:** தவறு மகனே! விதுரர் புத்திசாலி. எமது சதியினை மோப்பம் பிடித்து பீஷ்மரிடம் கூறுவார். அவர் உன் அப்பாவிடம் தெரிவித்து விட்டால் எல்லாமே பொசுபொசுத்துவிடும். இருளில் அம்பெய்யும்போது கவனம் தேவை.

**துரியோ:** அம்மாவிடம் கலந்தாலோசிக் கட்டுமா?

**சகுனி:** உனக்கு எப்போதுதான் புத்திவருமோ? அவரிடம் மூச்சுக்கூட விடாதே! நமது திட்டங்களுக்கு அவர்தன் கண்களை மூடிக் கொண்டிருப்பதே சாதகமானது.

சகுனி பகடையை உருட்ட அதில் எட்டு விழுகிறது.

-காட்சி மாற்றம்-

காந்தாரி அந்தப்புரம்.

**காந்தா:** குந்தி! துரியோதனனைப்பற்றி ஏனோ என் மனம் எப்போதும் கவலைப்படுகிறது. மிகத் தாராள மனதுடைய இளவரசன் தான் அவன். ஆனால் இளமையிலிருந்தே எதையும் பகிர்ந்து அனுபவிப்பதை அவன் விரும்புவதில்லை. யுதிஷ்டிரனிடம்தான் அவன் இதனைக் கற்கவேண்டும்.

**குந்தி:** கவலையை விடுங்கள் அக்கா. சகோதரர்கள் தானே! காலப்போக்கில் அவர்கள் ஒன்றாகி விடுவார்கள். வாரணாவதியில் அண்ணன் யுதிஷ்டிரனுக்காக அவன் அமைத்துள்ள மாளிகையைப் பற்றிக் கேள்விப்படவில்லையா?

-காட்சி மாற்றம்-

யுதிஷ்டிரன் மாளிகை.

**பீமன்:** [illegible]

**யுதிஷ்:** துரியோதனனை ஏன் உனக்கின்னும் இத்தனை சந்தேகம்?

**பீமன்:** எனக்கு நஞ்சூட்டி ஆற்றில் வீசியதை என்னால் மறக்க முடியவில்லையே அண்ணா!

**சகாதேவன்:** அண்ணன் பீமன் கூறுவது உண்மை. துரியோதனனை நம்பவே முடியாது.

**அர்ச்சுன:** நீங்கள் வாரணாவதிக்குத் தனியாகச் செல்வதை நான் அனுமதிக்கப் போவதில்லை.

**யுதிஷ்:** ஏன் நான் மட்டும் சென்றால் என்ன?

**பீமன்:** நமது சகோதரன் துரியோதனனின் கொடிய எண்ணங்களை நீங்கள் எப்போதுமே புரிந்துகொள்ளப் போவதில்லை.

**யுதிஷ்:** அவன் எனக்காகவே ஒரு மாளிகையினை அமைத்துள்ளான்.

**பீமன்:** அவனுடைய கபடம் நாம் அறியாதது. நமது நாட்டின் செல்வத்தை, மக்களைக் கவர அவன் வாரி இறைக்கிறான். நீங்கள் மன்னரானதும் அந்தப் பொக்கிஷத்தில் கை வைக்க அவனால் முடியாதல்லவா? உங்கள் தயவில் வாழ அவன் விரும்பமாட்டான்.

**அர்ச்:** கர்ணனும் சகுனிமாமாவும் நீங்கள் முடிசூடுவதை விரும்பாதவர்கள். துரியோதனனுடனேயே திரிகின்றனர். அவர்கள் உங்களுக்கு எதிரான சதியிலீடுபட்டுள்ளார்கள் என்றே நான் நம்புகிறேன்.

**பீமன்:** நீங்கள் இன்னும் அரசராக முடிசூடப் படவில்லை என்பதனால் மிகவும் அவதானமாக இருத்தல் அவசியம்.

**யுதிஷ்:** அம்மாவையும் உடன் அழைத்துச் செல்லலாமா என்று அவரிடம் கேட்டுப் பார்க்கிறேன்.

**பீமன்:** நீங்கள் கேட்க வேண்டாம். சகாதேவன் அம்மாவிடம் கேட்கட்டும்.

**யுதிஷ்:** நாம் எல்லோரும் போகும்போது அம்மாவும் வந்தால் பீமனுக்கு வயிறு நிறைய சாப்பாடு கிடைக்கும்.

**பீமன்:** என்ன அண்ணா நீங்களும் கிண்டல் பண்ண ஆரம்பித்துவிட்டீர்கள்?

**யுதிஷ்:** விளையாட்டுக்காகத் தானே சொன்னேன். துரியோதனன் எனக்கு மறைமுகமாக எத்தீங்கும் செய்யமாட்டான். அவன் ஒரு கோழையல்லவே!

**பீமன்:** பொறாமை ஒரு வீரனைக் கோழையாகவு மாக்கிவிடும்!

**யுதிஷ்:** அதோ அம்மா வருகிறார். அம்மா! அமருங்கள்.

**குந்தி:** என்ன பெரிய விவாதம் நடக்கிறது? யார் பொறாமைக்குரியவன்? யார் கோழை?

**பீமன்:** எனக்குப் பசி. அதனை மறைக்க ஏதேதோ பேசிக்கொண்டிருக்கிறோம் அம்மா..!

**யுதிஷ்:** அம்மா! சகாதேவன்-நாம் எல்லோருமே வாரணாவதிக்குச் செல்ல வேண்டும் என்று விரும்புகிறான்.

**குந்தி:** நீ மட்டும் தனித்து அங்கு செல்வதை நானும் விரும்பவில்லை மகனே! நீங்கள் விரும்பினால் நாம் எல்லாருமே போகலாம்.

பாடல்:

**சூது மதியினாரின் சூழ்ச்சி வலையதனுள்**
**த்தறியாப் பாண்டவரும் சிக்கினரே-பாதகரோ**
**படுகள மொன்றதையமைத்தே பலியிடவே துணிந்த செயல்**
**கடுகளவும் சேராதே உலக நெறி.**

-காட்சி மாற்றம்-



விதுரர் மாளிகை

**விதுரர்:** வாரணாவதியிலிருந்து எப்போது வந்தாய்?

**ஒற்றன்:** அங்கிருந்து நேராக இங்கேதான் வருகிறேன் பிரபு! புருவஞ்சனர் மிக உன்னதமாக மாளிகையினை அமைத்திருக்கிறார். அதேவேளை எண்ணை, வைக்கோல், மெழுகு, மிருகக் கொழுப்பு ஆகியவற்றையும் ஏராளமாக கொள்முதல் செய்திருப்பதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன பிரபு!

**விதுர:** ஓஹோ.. அப்படியா? சரி இதனை எவரிடமும் கூறாதே..போய்வா..!

-காட்சி மாற்றம்-

**திருத:** பாண்டவர்கள் வாரணாவதிக்கு எப்போது புறப்படுகிறார்கள் மகனே?

**துரியோ:** நாட் குறிப்பிட்டதும் தெரியப்படுத்துகிறேன் அப்பா!

**காவலன்:** வாழ்க மகாராஜா! இளவரசர் யுதிஷ்டிரர் தங்கள் சமூகம் நாடி வருகிறார்.

**துரியோ:** நானே சென்று அண்ணனை வரவேற்கிறேன் அப்பா!

**காந்தா:** துரியோதனனிடம் பெரும் மாற்றம் தென்படுகிறது. பாண்டவரிடம் வெறுப்பை மறந்துவிட்டான்.

**திருத:** நானும் அவதானித்தேன். எல்லாம் நன்மைக்கே!

**துரியோ:** வாருங்கள் அண்ணா..!

**யுதிஷ்:** வணக்கம் பெரியப்பா...!

**காந்தா:** வாரணாவதிக்கு எப்போது புறப்படுகிறாய் மகனே?

**யுதிஷ்:** தங்களிடம் கலந்தாலோசிக்காமல் நானாகத் திட்டமிட முடியுமா பெரியம்மா? தங்களிடம் அனுமதி பெறவே வந்தேன். அம்மாவையும் தம்பிமாரையும் அழைத்துச் செல்ல தங்கள் அனுமதி கோருகிறேன் பெரியப்பா.

**துரியோ:** இந்தச் சிறு விடயத்துக்கு அப்பாவின் அனுமதி தேவையா? சித்தியுடன் நீங்கள் எல்லாரும் சென்றால் உங்களுக்கு மகிழ்ச்சியாகவே இருக்கும். அத்துடன் பீமனுக்கும் நல்ல சாப்பாடு கிடைக்கும்.

**காந்தா:** உனது சகோதரனை அவ்வாறு கிண்டல் செய்யலாமா?

**திருத:** நீ விரும்பியவர்கள் அனைவரையும் அங்கு அழைத்துச் செல் மகனே!

பாடல்:

**பாண்டவர் தம்மைக் கூண்டோடொழித்திட**
**பாவியவன் கொடும் பாதை சமைத்தான்**
**பழியறியா அப்பேதைகள் மாய்வதை**
**அறிந்ததும் அவன்தான் அகமகிழ்ந்தான்.**

-காட்சி மாற்றம்-

பாண்டவர் மாளிகை.

**குந்தி:** யார் விதுரர் அவர்களா? வாருங்கள்!

**விதுர:** யுதிஷ்டிரரைப் பார்க்கத்தான் வந்தேன். மகாராஜாவிடம் போயிருப்பதாக அறிந்தேன்.

**குந்தி:** வந்ததும் தங்களிடம் அனுப்பி வைக்கிறேனே!

**விதுர:** அவசரமேதுமில்லை. பிறிதொரு சமயம் வருகிறேன். (திரும்புகிறார்)

**குந்தி:** உங்கள் சித்தப்பா ஏதோ கடுமையான யோசனையிலாழ்ந்துள்ளார் போல் தெரிகிறது.

**நகுலன்:** அவருக்கு எப்போதும் கடுமையான சிந்தனை தானே அம்மா!

**குந்தி:** பிரதம அமைச்சர் அல்லவா? அதனால் எல்லாவற்றையுமிட்டு சிரத்தை கொள்ள வேண்டியது அவர் கடமைதானே!

-காட்சி மாற்றம்-

**சகுனியின் இருப்பிடம்- ஒற்றன் வருதல்.**

**சகுனி:** என்ன செய்தி..?

**ஒற்றன்:** விதுரர் யுதிஷ்டிரரைக் காணச் சென்றார். அவரோ மகாராஜாவிடம் சென்றிருந்தார்.

**சகுனி:** காரணம் என்ன..?

**ஒற்றன்:** தெரியவில்லை பிரபு!

**துரியோ:** வணக்கம் மாமா...!...நான்..!

**சகுனி:** (தூதனிடம்) சரி நீ போகலாம். துரியோதனா? அந்தரங்க விடயங்களை உரக்கக் கூறலாகாது. அரசியல் விவகாரங்களில் இது முக்கியம் என்பதை முன்பே கூறியிருக்கிறேன் அல்லவா?

**துரியோ:** அவன் நம்முடைய ஒற்றன்தானே மாமா?

**சகுனி:** ஒற்றன் ஒற்றனேதான்! சுலபமாக அவனை மற்றவராலும் வாங்கிவிட முடியும். கவனம்! சரி! உன் மகிழ்ச்சிக்குக் காரணம் என்னவோ...?

**துரியோ:** வாரணாவதிக்கு ஐவருடன் குந்தி சித்தியும் போகப் போகிறார்.

**சகுனி:** இந்த அதிசயம் எவ்வாறு நிகழ்ந்தது?

**துரியோ:** யுதிஷ்டிரனே அப்பாவிடம் அனுமதி கேட்க வந்தான். நான் எல்லாவற்றுக்கும் வெறுமனே 'ஆமா' போட்டேன்.

**சகுனி:** ஆமாம் என்ற வார்த்தை அரசியலில் பிரதான இடத்தை வகிக்கிறது மருமகனே! எப்போது புறப்படுகிறார்களாம்?

**துரியோ:** காலத்தைப் பற்றி பிரதானமில்லை. விதி நமக்கு சார்பாக அமைகிறதே மாமா!

**சகுனி:** விதியை கதியாகக் கருதுபவன் கோழை! எனது பகடையில் எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு. அந்தப் பெரியவர் பீஷ்மரும் விதுரரும் இனி என்ன செய்யப் போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்!

-காட்சி மாற்றம்-

**விதுரரின் மாளிகை- யுதிஷ்டிரர் வருகிறார்.**

**விதுராமனைவி:** யாரது? இளவரசர் யுதிஷ்டிரரா?

**யுதிஷ்:** சின்னம்மா, தாங்களுமா என்னை இளவரசர் என்றழைக்க வேண்டும்?

**விது.மனை:** மகனே! எனது 10 புத்திரர்களும் சேர்ந்தாலும் உன் அருமைக்கு ஈடாக மாட்டார்களே!

**யுதிஷ்:** சொற்சிலம்பாட்டத்தில் சித்தப்பாவையும் தங்களையும் வெல்ல எவராலும் முடியாது சின்னம்மா! சித்தப்பா எங்கே?

**விது.மனை:** உனது பயணம் பற்றி விசாரிக்க மகாராஜா கூப்பிட்டார்.

**யுதிஷ்:** நீண்டகாலமாக அவரை நான் தேட... அவர் என்னைத் தேடுகிறார். நான் பின்னர் வருகிறேன். நாளை வாரணாவதி புறப்படும்போது வந்து காண்கிறேன்.

•••

-பாண்டவர் மாளிகை-

**விதுர:** வாழ்க மகனே! மகாராஜாவைப் பார்க்க வந்தேன். வழியில் உன்னிடமும் வந்தேன்.

**யுதிஷ்:** தங்கள் மாளிகை சென்றேன். சின்னம்மாவைப் பார்த்தேன்.

**காவலன்:** காந்தார நாட்டரசர் சகுனியும் இளவரசர் துரியோதனனும் வருகின்றார்கள் இளவரசே!

**விதுர:** இந்த நேரத்திலா...?

**சகுனி:** அடடே விதுரரும் இங்குதான் இருக்கிறார்...!

**விதுரர்:** வணக்கம்!

**பாண்ட:** வணக்கம் சகுனிமாமா அவர்களே!

யாவரும் அமர்கின்றனர்.

**சகுனி:** மருமகனே யுதிஷ்டிரா! நீங்கள் பயணம் தொடங்க நாளைதான் நல்ல நாளென அறிந்தேன்! எனது நல் வாழ்த்துக்கள் உங்கள் எல்லோர் மீதும் எப்போதும் உண்டு!

**விதுர:** உங்களுக்கு ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன் மக்களே! நெருப்புப் பூ மரங்கள் பூத்துக் குலுங்கும் காலமிது... வனத்தில் தீ பரவுவதைப் போன்ற பிரமையை அப்பூக்கள் ஏற்படுத்தும்.

**சகுனி:** ஆமாம்...அந்தக் காட்சி மனதுக்கு எத்தகைய ஆனந்தத்தை அளிக்கும்...!

**விதுர:** காட்டுத்தீயைக் கண்டு அச்சம் கொள்ளாதவர் எவரேனுமுண்டா...? ஏன் துரியோதனா...நீ விடை கூறு பார்க்கலாம்.

**துரியோ:** (சற்றுத் தடுமாற்றத்துடன்) யார்.... பயப்படாமலிருக்க முடியும்...?

**விதுர:** யுதிஷ்டிரா! இந்தக் கேள்விக்கு உனது விடை என்ன...?

**யுதிஷ்:** பொந்துகளில் பதுங்கியிருக்கும் எலிகள் தான் தீயைக் கண்டு பயப்படமாட்டா....!

**சகுனி:** இதுதான்சரியான விடையெனப் படுகிறது. சரிதானே விதுரரே...?

**விதுர:** ஆமாம்! நான் சென்று வருகிறேன். நாளை பயணம் அல்லவா? அவர்களுக்கு ஓய்வெடுக்க அவகாசம் தேவைப்படலாம்.

**சகுனி:** அப்போ நாங்களும் புறப்படுகிறோமே!

**யுதிஷ்:** என்ன அவசரம்? சற்றுத் தாமதித்துச் செல்லலாமே!

**துரியோ:** ஒரு ஆட்டம் சொக்கட்டான் ஆடலாமா?

**சகுனி:** அதற்கென்ன- அவர்கள் விரும்பினால்...!

**அர்ச்:** ஆமாம்... வாருங்கள் ஆட்டத்தைத் தொடங்கலாம்..!

-காட்சி மாற்றம்-

**பாண்டவர்கள் வாரணாவதிக்குப் புறப்படுகின்றனர். பீஷ்மர், விதுரர், துரியோதனன் மற்றும் சகுனி ஆகியோர் வழியனுப்புவதற்காகக் குழுமியுள்ளனர். பாண்டவர்கள் அனைவரையும் வணங்கி விடைபெறுகின்றனர்.**

**பீஷ்ம:** ஆண்டவன் உங்கள் அனைவரையும் காப்பானாக. அட... உங்களை வழியனுப்ப துரியோதனனும் அதிகாலையில் வந்துவிட்டானே!

**யுதிஷ்:** இரவு முழுவதும் நாங்கள் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்தோம் தாத்தா.... துரியோதனன் ஓர் ஆட்டத்திலும் வெற்றி பெறவேயில்லை....!

**துரியோ:** ஆமாம் தாத்தா! இதுபோல் என்றும் நான் தோற்றதேயில்லை.

குந்தி வருகிறார்.

**பீஷ்ம:** உங்கள் பிள்ளைகளுடன் நீங்களும் வாழ ஆண்டவன் அருள்வானாக..!

**விதுர:** (யுதிஷ்டிரனுக்கு மட்டும் கேட்பதற்கேற்றதாக...) உனக்கு எச்சரிக்கிறேன்! மிக வேகமாக ஓடிச்செல்லக்கூடிய வகையில் ஆயத்தமாக இருக்க வேண்டும்! (பொதுவாக) உனது சகோதரர்களை பத்திரமாகப் பார்த்துக்கொள்!

**யுதிஷ்:** தங்கள் உத்தரவுப்படியே நடப்பேன் சித்தப்பா!

-காட்சி மாற்றம்-

**யுதிஷ்டிரன் தனது விடுதியில் இருக்கிறான்.**

**அர்ச்:** அண்ணா! தனிமையில் ஏன் கவலையுடன் காணப்படுகிறீர்கள்..?

**யுதிஷ்:** அர்ச்சுனா! சித்தப்பா விதுரர் எப்போதாவது ஆழமான கருத்துப் புதைந்த வார்த்தைகளைத் தவிர வேறு எதுவும் கூறமாட்டார் அல்லவா?

**அர்ச்:** நெருப்புப் பூக்களைப் பற்றித்தானே குறிப்பிட்டார்.

**யுதிஷ்:** இருப்பினும் அவருடைய வார்த்தைகள் எனக்கு ஏதோ நடைபெறப் போவதை ஒட்டிய எச்சரிக்கை போலவே தோன்றியது. தீயைக் கண்டு அச்சமுறாதவர் யார் என்றும் கேட்டார். இதே வினாவை துரியோதனனிடமும் கேட்டார்.

**அர்ச்:** நாமும் கவனமுடன் இருக்க வேண்டும். ஏன் துரியோதனனிடம் அவர் அதே கேள்வியைக் கேட்க வேண்டும்?

**பீமன்:** இதைக் கேட்டதும் அந்த முட்டாளின் முகம் ஏதோ குற்றவாளியின் தோற்றத்தை அளித்தது. எலிதான் பொந்தில் புகுந்து தப்பிக் கொள்ளும் என்று நாம் பதில் கூறியதும் அதனை ஒப்புக்கொள்பவன் போல் பாசாங்கு செய்தான்.

**யுதிஷ்:** ஆகவே நெருப்புப் பற்றி நாம் எச்சரிக்கையாக இருப்பது அவசியம். இரவில் நம்மில் ஒருவர் விழித்திருந்து காவல்காக்க வேண்டும். நாம் உல்லாசப் பயணம் வந்திருந்தாலும் விதுரர் சித்தப்பாவினுடைய எச்சரிக்கையினை புறக்கணித்தலாகாது.

▫▫▫

**வாரணாவதி–குந்தியும் சகாதேவனும் இரதத்தில் வருகின்றனர். மக்கள் வாழ்த்தொலி- புருவஞ்சனர் வரவேற்கிறார்.**

**புருவ:** இந்த மாளிகைக்கு தங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறேன். எந்தப் பிரச்சனையுமின்றி நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கலாம். இம்மாளிகைக்கு சிவம் என்று பெயரிட்டுள்ளோம்.

**குந்தி:** அழகான-பொருத்தமான பெயர் ...!

**யுதிஷ்:** விஸ்வகர்மாவைத் தவிர வேறு எவரும் தங்கள் சிருஷ்டியினைப் போல் உருவாக்க முடியாது. மிகப் பிரமாதம்!

**புருவ:** நான் முன்புறம் தான் தங்குவேன். தங்களுக்கு பணி செய்ய என்றும் காத்திருப்பேன்.

**நகுலன்:** எங்களைப் பார்க்க அடிக்கடி பலர் வருவார்கள். அதனால் உங்களுக்குத்தான் சிரமம்!

**புருவ:** அதனால் ஒன்றுமில்லை. தங்கள் சேவையே எனக்கு ஆனந்தம் தரும்.

பாடல்:

**உரு எழிலாக எழு மாளிகையெனில்**
**இரு வழியின்றேல் ஏகுத லாகா**
**வருவினையகற்றிட வழியது வெனவே**
**விதுரருரைத்தவை வீணாகாதே!**

▫▫▫

**பீமன்:** அண்ணா! சந்தேகப்பட்டதைப்போல், இங்கிருந்து வெளியேற பின்புறம் வழியே இல்லை!

**யுதிஷ்:** விதுரர் சித்தப்பா கூறியவற்றின் பொருள் இப்பொழுது புரிகிறது. இந்த மாளிகை தீயூட்டப்பட்டால் வெளியேற நமக்கோர் சுரங்கப்பாதை அமைக்க வேண்டும். அவர்களுடைய திட்டம் நமக்குத் தெரிந்துவிட்டதாக நாம் காட்டிக்கொள்ளலாகாது.

**அர்ச்:** கோழைகள்! நேரடியாக மோதிப்பார்க்கத் திராணியற்றவர்கள் சூழ்ச்சியால் நம்மைச் சிதைக்க எண்ணிவிட்டார்கள்!

**பீமன்:** அந்தக் கிழவனை இப்போதே கொன்றுவிட வேண்டும்!

**குந்தி:** சுரங்கம் அமைக்க நம்பிக்கையான ஆள் இங்கு எங்கே கிடைக்கப் போகிறான்?

**யுதிஷ்:** கவலையை விடுங்கள். விதுரர் சித்தப்பா சந்தேகப்பட்டமையினால் அவரே தகுந்த ஏற்பாட்டினைச் செய்வார்!

▫▫▫

- **மக்கள் பாண்டவர்களைக்காண பரிசுப் பொருட்களுடன் சாரிசாரியாக வருகின்றனர்.**
- **ஒருவர் எலிப்பொறியுடன் வருகிறார்.**

**யுதிஷ்:** இந்த எலியைப் பற்றி ஏதாவது சிறப்புத் தகவல் உண்டா...?

**மனிதன்:** சுரங்கப் பாதைகளை அமைப்பதில் இந்தப் பிராணிக்கு எதுவும் ஈடில்லை பிரபு!

**விதுரர் ஏற்கனவே கூறியவார்த்தைகள் பின்னோட்டமாகத் தோன்றுகின்றன.**

**யுதிஷ்:** (மெதுவாக) விதுரர் சித்தப்பா நலமாக இருக்கிறாரா..?

-காட்சி மாற்றம்-

**காலத்தின் குரல்:** **விதுரர் புத்திசாலி. பொறியிலிருந்து பாண்டவர்கள் தப்புவதற்கான வழிகளையும் உணர்த்தி, சுரங்கம் அமைக்கத் தகுதியானவரையும் தக்க தருணத்தில் அனுப்பி வைத்துள்ளார். சுரங்கம் அமைப்போன் தன்பணி தொடர பாண்டவர்கள் தங்கள் எதிரிகளால் வழங்கப்படும் விருந்துபசாரங்களில் மகிழட்டும்.**

▫▫▫

**சேனாதிபதி ஒற்றனிடம் சகுனிக்குத் தூதனுப்புகிறார். எல்லாமே திட்டப்படி நடப்பதாகச் சொல்லும்படி கூறுகிறார்.**

▫▫▫

**அரக்கு மாளிகையில் மக்களை யுதிஷ்டிரர் கண்டு கலந்துரையாடுகிறார். அப்போது சேனாதிபதி வருவதாக காவலன் கூறுகிறான்.**

**யுதிஷ்:** உங்களுக்கு ஏதாவது பிரச்சனைகள் இருக்குமானால் கூறுங்கள். தீர்த்து வைக்க ஏற்பாடு செய்கிறோம்.

**மக்கள்:** தங்கள் தரிசனம் ஒன்றே போதும் பிரபு! எங்கள் பிரச்சனைகள் யாவும் மறைந்து போயின.

**காவலன்:** தங்களைக் காண தங்கள் மெய்காப்புக்குப் பொறுப்பான சேனாதிபதி வருகிறார்.

**யுதிஷ்:** எனக்கெதற்குப் பாதுகாப்பு? வரச்சொல்!

**சேனா:** வணக்கம் இளவரசே! தங்கள் பாதுகாப்புக்கான பொறுப்புகள் என்னைச் சார்ந்துள்ளன.

**யுதிஷ்:** எமது பிராந்தியத்துள் எனக்குப் பாதுகாப்பு எதற்கு? உமது கடமை பற்றி எனக்குத் தெரியும்! அதனை நினைவுபடுத்த வேண்டியதில்லையே! சரி நீர் போகலாம். தம்பிமார் உலவச் சென்றார்களே... வந்துவிட்டார்களா...?

**காவல:** இன்னும் வரவில்லை பிரபு!

▫▫▫

**சுரங்கம் அமைப்போன் பணியிலீடுபட்டிருக்கும் போது பீமன் வருகிறான்.**

**பீமன்:** நான் ஏதாவது உதவ வேண்டுமா?

**சுர.அமை:** இளவரசே! போர்க்களம் வந்து தங்களிடம்-உடன் இணைந்து போராட நான் கோரினால் ஒப்புதல் அளிப்பீர்களா?

**பீமன்:** உன் கருத்தைப் புரிந்துகொண்டேன். சிறந்த ஆசிரியரான துரோணாச்சாரியாரிடம் போர்ப்பயிற்சி பெற்றவன்தான் நான். இருப்பினும் உமது பணியில் என்னால் ஈடுபட முடியாதுதான்.

**சுர.அமை:** ஆமாம் பிரபு. இந்த ஆயுதத்தால் தவறுதலாக ஒரு வெட்டு வீழ்ந்தாலும் சகல காரியமும் சீரழிந்து போய்விடலாம். அஸ்தினாபுரத்தின் வெற்றியோ தோல்வியோ இப்பணியில் தங்கியிருப்பதாக மாமந்திரி விதுரர் கூறியிருக்கிறார். பார்த்தீர்களா பிரபு? இந்த உரையாடலில் பொழுது வீணாகிவிட்டதே...!

**பீமன்:** மன்னிப்புக் கோருகிறேன்.

பாடல்:

**கடமை செய்திடக் காலம் தாழ்த்தாதே!**
**காலம் தாழ்ந்திடில் கயமையே வென்றிடும்**
**காலத்தை வீணே கழிய விட்டபின்**
**கவலை கொள்வதில் கருத்தொன்றில்லை!**

(இன்னும் வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.



அருள் ஜுவலர்ஸ்

இல. 3, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
தொலைபேசி: 434231



Kala



JEWELLERY

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

433686






தினமுரசு வாரமலர்

## மூடாதபோதும் ஜில்...ஜில்



## குண்டுக்கு குறி தெரியாது



## போகலாம் ஊர்கோலம்



1991 மே 21. தமிழ்நாட்டில் சிறீபெரம்புத்தூரில் மாலைக்கு கழுத்து நீட்டிய ராஜீவ்மீது மரணதேவியாய் ஒரு மங்கை பாய, ராஜீவ் காணாமல் போனார்.

சாட்சியங்களும், தடயங்களும் புலிகளே கொன்றனர், தற்கொலை தாக்குதலுக்கு புலிகளே காரணம் என்று அறைந்து சொல்லின.

அமைதிப்படையும், அதனோடு நின்ற குழுக்களும் அத்துமீறல்களை நடத்தியது உண்மை. அதற்கெல்லாம் ராஜீவ் என்ற தனிமனிதர் மட்டுமே எப்படி பொறுப்பாக முடியும்?

இந்திய நட்பும், இந்திய உதவியும் பெறாமல் எந்தவொரு இயக்கம்தான் இங்கே வளர்ந்தது?

அனைத்து இயக்கங்களும் இந்திய அரசின் நட்பை நாடி, நட்புக்கரம் தேடிச் சென்றதும், கிடைத்த உதவி பெற்றுக்கொண்டதும் உண்மையல்லவா?


அகதிகளாய் போனவர்களை அபயகரம் நீட்டி வரவேற்ற பண்புக்கும், பாசமிகு உணர்ச்சிக்கும் சொந்தக்காரர்கள் இந்திய மக்கள் அல்லவா?

ஒரு குண்டு நமக்குள் இருந்த உறவுப் பாலத்தை உடைத்துப் போட்டு, நமக்கிருந்த பலத்தில் பாதியைக் குறைத்துவிட்டதல்லவா? தெரியவில்லையா?

தற்கொலைத் தாக்குதலில் புத்திசாலித்தனம் இருந்திருக்கலாம். ஆனால் கொல்லப்படவேண்டியவர் ராஜீவ் என்று எடுத்த முடிவில் அரசியல் விவேகம் துளியளவும் கிடையாது.

ஆயுதங்களை மட்டுமே நம்புவதும், அதனால் நண்பர்களை எதிரிகளாக்குவதும் இனியும் தொடருமா?

## உறவுப்பாலத்தில் வெடித்த குண்டு



# கோழி பூண்டு பிரட்டல்

கோழி இறைச்சியை பூண்டோடு உருளைக்கிழங்கும் சேர்த்து பிரட்டிச் செய்யும் பாகம் நல்லசுவை தருவது. இதில் பூண்டு கூடுதலாகச் சேர்க்கப்படுவதால் சிலர் முகம் சுளிக்கலாம். ஆனால் இதனைத் தயாரித்து உண்ணும்போது முகச் சுளிப்பு களிப்பாக மாறும்.



**தேவையானவை:**

கோழிக் கால்கள் (முழுமையாக)- 8
உருளைக்கிழங்கு (நடுத்தரமானவை)- 8
பூண்டு (சற்றுப் பெரியவை)- 24
ஒலிவ் அல்லது சமைத்த எண்ணெய்- 3 மே.கரண்டி
தக்காளி சோஸ்-தேவைக்கேற்ப
கறிவேப்பிலை-ஒரு நெட்டு
உப்பு-தேவைக்கேற்ப

**செய்முறை:**

கோழிக்கால்களை துப்பரவாகக் கழுவிக் கொள்ளவும். உருளைக் கிழங்கை தோல்நீக்கி 1 1/2 அல்லது 2 அங்குல நீளத்துக்கு வெட்டிக் கொள்ளவும். பூண்டையும் தோல் நீக்கி நசித்துக்கொள்ளவும்.

அகலமான பாத்திரத்தில் எண்ணெயை விட்டு அளவான சூட்டில் அடுப்பில் வைத்து இறைச்சியையும் உருளைக் கிழங்கையும் அதிலிடவும். இறைச்சியை ஒரு தடவையும் கிழங்கை பலதடவைகளும் புரட்டவும். இவையிரண்டும் பொரி பதத்துக்கு வர 10 அல்லது 12 நிமிடமாகலாம்.

அடுப்புச் சூட்டை ஓரளவு தணித்து 1/4 கோப்பை நீர் சேர்க்கவும். 15 நிமிடங்கள் வரை அடுப்பில் வைத்து இறைச்சியையும் புரட்டி விட்டு பூண்டைச் சேர்த்து பாத்திரத்தை மூடிக்கொள்ளவும். மேலும் 10 நிமிடங்கள் அடுப்பில் இருக்கும்போது மூடியைத் திறந்து கறிவேப்பிலை போட்டு புரட்டவும். பின்னர் வேறோர் பாத்திரத்தில் கோழிக் கால்களைப் பரவலாக வைத்து ஏனையவற்றையும் அதில் இடவும். உப்புத்தூள், மிளகுத்தூள் தூவவும். தக்காளி சோஸை உருசிக்கேற்ப சேர்த்துப் பரிமாறலாம்.